# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 | கதிர் 51 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 03, திங்கட்கிழமை 16.01.2017

விலை - 20
பக்கங்கள் - 28+4


## ஜனாதிபதியின் ஈரான் பயணம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 16
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்தவாரம் ஈரானுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த நிலையில், பயணத்தை அவர் ஒத்திவைத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் »25

# குடாநாட்டில் வறட்சியினால் 24,000 குடும்பங்கள் பாதிப்பு

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வறட்சியினால் விவசாய செய்கைகளில் 30 வீதமானவை அழிவடைந்ததால், 24 ஆயிரத்து 324 விவசாயக் குடும்பங்கள் பாதிப் படைந்துள்ளன. இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு அறிவித்துள்ளார்.
நாட்டில் தற்போது நிலவும் வறட்சியின் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரைக்கும் 30 வீதமான நெற்பயிர் »25

### மார்ச் வரை மழை கிடையாது

## வறட்சியை எதிர்கொள்ள தயாராகுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 16
நாட்டில் எதிர்வரும் மார்ச் மாதம் வரை மழை வீழ்ச்சி இருக்காது. கடும் வறட்சி காரணமாக மின்சாரம், நீர் மற்றும் உணவுப்பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு இடர் முகாமைத்துவ மைய நிலையம் பொது மக்களிடம் கேட்டுள்ளது.
வறட்சியால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள இந்தச் செயற்பாடு அவசியம் என்றும் நிலையம் தெரிவித்தது. வறட்சியால் விவசாயத்துறை பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள »25

## ஜனாதிபதி - செயலணி அடுத்த வாரம் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
போர்க்குற்ற விசாரணைக்கு கலப்புப் பொறிமுறையை நல்லிணக்கச் செயலணியின் அறிக்கை பரிந்துரைத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்தச் செயலணியின் »25



## இரு தசாப்தங்களுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டது ஓமந்தை

வவுனியா, ஜன. 16
வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் தைப்பொங்கல் திருநாளான நேற்று முன்தினம் மாலை முகாமைவிட்டு முற்றாக வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது. »25

### ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தார் ரணில்

# தமிழர்கள் தேசிய இனம்தான்

### ஏனைய இனத்தவருக்கான சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்படுகிறதாம்

கொழும்பு, ஜனவரி 16
இலங்கையில் வாழ்கின்ற ஏனைய இனத்தவர்களுக்குக் கிடைக்கின்ற அனைத்துச் சலுகைகளும் தமிழர்களுக்கும் கிடைக்கின்றன. தமிழர்கள் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். மலையகத்தில் தேசிய பொங்கல் விழா நடைபெறுவதன் மூலம் இது உறுதியாகின்றது.
இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் »23ஆ

## புதிய அரசமைப்பு நிறைவேறவே மாட்டாது

### சம்பந்தன் மட்டுமே அதை அறியாதுள்ளார் என்கிறார் தினேஷ் எம்.பி.

கொழும்பு, ஜன. 16
புதிய அரசமைப்பானது பிரிவினைவாதமாகவே அமையவுள்ளது. அது ஒருபோதும் நிறைவேறாது என்பதை சகலரும் அறிவர். எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மாத்திரம் அதனை அறியாதுள்ளார். »25

## இராணுவப் பாதுகாப்பு விகாரைகளில் இல்லை

### இப்படிச் சொல்கிறார் படைப் பேச்சாளர்

கொழும்பு, ஜன. 16
வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக வெளியான தகவல் தவறானது. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
வடக்கு - கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகள் மற்றும், வீதியோரங்களில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலைகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு பாதுகாப்பு »04

## யாழ். குடாநாட்டில் நேற்றிரவு பயங்கரம் ஒரே இரவில் 3 இடங்களில் வாள்வெட்டு

### கை, கால், காது, மூக்குத் துண்டாடப்பட்டன ஏழாலை, அரியாலை, அச்சுவேலி ஆகிய பகுதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 16
யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு மூன்று இடங்களில் வாள்வெட்டு - குழு மோதல்கள் இடம்பெற்றன. காது, மூக்கு என்பன இந்த மோதல்களில் துண்டாடப்பட்ட நிலையில் 11 பேர் யாழ். போதனா வைத்திய »23ஆ

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் பரிதாபச் சாவு

### மற்றொருவர் படுகாயம் மட்டுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 16
மோட்டார் சைக்கிள் வீதியோர மதகுக் கல்லுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதில் பயணித்த »04

## ஏஎச் 1 என் 1 வைரஸால் 7 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜன. 16
இன்புளுவென்சா குடும்பத்தைச் சேர்ந்த ஏஎச் 1 என் 1 வைரஸ் தொற்றினால் 7 பேர் இதுவரையில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக, கண்டி வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் சமன் »04

## கனேடிய அரச தலைவர் தமிழில் பொங்கல் வாழ்த்து

கொழும்பு, ஜன. 16
தமிழர்களின் புதுவருடப் பிறப்பு தைப்பொங்கலுக்கு கனேடியத் தலைமை அமைச்சர் தமிழில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்தக் காணொலி சமூக வலைத் தளத்தில் »25

### இரணைமடுக் குளத்தின் 97ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு

# மழை வேண்டி விவசாயிகள் நேற்றுக் குடை பிடித்துப் பவனி



யாழ்ப்பாணம், ஜன. 16
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் 97ஆவது ஆண்டு நிறைவையொட்டி 97 பானைகளில் பொங்கல் பொங்கும் விழாவோடு, மழை வேண்டி குடைபிடித்து நடைபவனி வழிபாடு நேற்று இடம்பெற்றது. கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இந்த விழா வழிபாடுகள் நேற்று இடம் பெற்றன. கிளிநொச்சி கமக்கார அமைப்பினரால் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது. நேற்று முற்பகல் »25

### முச்சந்தி முனி



அப்ப சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிச்சாச்சு என்றியளோ...

### ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதிலிருந்து

## இலங்கை பின்வாங்க முடியாது



### மனித உரிமைகள் ஆணையர் சயிட் அல் ஹுசைன் உறுதி

கொழும்பு, ஜன. 16
லங்கை இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து அவர்கள் பின்வாங்க முடியாது. ஐ.நா. இந்த விடயத்தில் உறுதியான »25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய ஒயில் நிறுவனத்திடமிருந்து

# குதங்களை மீளப்பெறும் நடவடிக்கை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 16

இந்தியன் ஒயில் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்ட சீனக்குடா எண்ணெய்க் குதங்களில் மூன்றை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டுக்கு வழங்கும் முடிவை கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இடைநிறுத்தியுள்ளார்.

இந்தியாவின் இலங்கைக்கான புதிய தூதுவர் பணிகளைப் பொறுப்பேற்கும் வரையில், இந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு ரணில் அறிவுறுத்தியுள்ளார்.

பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனான சந்திப்பின் போதே தலைமை அமைச்சர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

மின்சார உற்பத்திக்காக இந்தக் குதங்களில் எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், சீனக்குடா எண்ணெய்க் குதங்களை ஆய்வுசெய்வதற்கு மேற்கொண்ட இரண்டு முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்தியன் ஒயில் நிறுவன அதிகாரிகள், இலங்கை அதிகாரிகளை எண்ணெய்க்குத வளாகத்துக்குள் அனுமதிக்காமல் தடுத்து வைத்ததாக சர்ச்சைகள் எழுந்திருந்தன.

குத்தகைக்கு வழங்கப்பட்ட எண்ணெய்க்குதங்களில் மூன்றை மீளவும் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்வது குறித்து, புதிய இந்தியத் தூதுவருடன் பேச்சு நடத்த வேண்டியிருப்பதாலேயே, ரணில் இந்த அறிவுறுத்தலைப் பிறப்பித்துள்ளார் என்று, பெற்றோலியக் கூட்டுத்தாபன மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சார உற்பத்திக்காக, எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு, அவசரமாக மூன்று எண்ணெய்த் தாங்கிகள் தேவைப்படுவதாக, அமைச்சர் சந்திம வீரக்கொடி கூறினார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தியத் தூதுவர் தரம்ஜித்சிங் சந்து, எதிர்வரும் 26ஆம் திகதிக்கு இடையே பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார் என்று இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (வ-4)



# பசுவதைக்கு எதிராக தீர்மானம்வேண்டும்

## வடக்கு மாகாண சபையிடம் இந்துக் குருமார்கள் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 16

வடக்கு மாகாண சபையில் பசுவதைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரவேண்டும் என இந்து சமய குருமார்கள் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற பட்டிப்பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும்போதே இந்து சமய குருமார்கள் இதனை வலியுறுத்தினர்.

பட்டிப் பொங்கலான நேற்றையதினம் பிற்பகல் 2 மணியளவில் பட்டிப் பொங்கல் விழா பசுக்கள், இடபங்களை பாதுகாக்கும் சமய நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண பதில் முதலமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

ஆலயத்தில் பட்டிப் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று ஆலயத்திலிருந்து பசுக்கள் மின்சார நிலைய வீதியினூடாக வைத்தியசாலை வீதி வழியாக ஆலயத்தை சென்றடைந்தது.

அதன் பின்னர் பட்டிப் பொங்கல் சிறப்பு நிகழ்வுகளும் ஆலயத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான விந்தன், சுஜதீபன், மற்றும்வாசுதேவகுருக்கள், இந்து சமய பெரியோர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-8)

# விடைபெறுகிறார் நிஷா பிஸ்வால்


கொழும்பு, ஜன. 16

அமெரிக்காவில் புதிய அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கவுள்ள நிலையில், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க உதவி செயலராகப் பதவி வகித்த நிஷா பிஸ்வால், இராஜாங்கத் திணைக்களத்தில் இருந்து விடைபெறவுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க அதிபராக எதிர்வரும் 20 ஆம் திகதி பதவியேற்றதும், அமெரிக்க இராஜாங்கச் செயலராக ரெக்ஸ்ரில்லர்சன் பதவியேற்கவுள்ளார். அத்துடன், இராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிய பதவிகளிலும் மாற்றங்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய, கடந்த மூன்றரை ஆண்டுகளாக தெற்கு மத்திய ஆசியவிவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச்செயலராகப் பணியாற்றிய, நிஷா பிஸ்வாலுக்குப் பதிலாக புதியவர் ஒருவர் நியமிக் கப்படுவார் என்று தெரிவிக் கப்பட்டது.

ஒபாமா அரசால் நியமிக்கப்பட்ட நிஷா பிஸ்வாலுக்கு இராஜாங்கத் திணைக்களத்தால் பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வொஷிங்டனில் இடம்பெற்றது. இதில் இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசமும் பங்கேற்றிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற பட்டிப் பொங்கல் நிகழ்வு

# யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கு 70 கணனிகளைத் தருகிறது கொரியா

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியின் கற்றல் செயற்பாட்டுக்காக கொரிய அரசு 70 கணனிகளை வழங்கிய நிலையில், மேலும் 70 புதிய கணனிகளை வழங்க கொரிய அரசு முன்வந்துள்ளதாக கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: போர் நிறைவடைந்த காலத்தில் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரிக்கிருந்த பெரும் தேவைகளில் தொழில் நுட்பக் கூடம் ஒன்றை அமைத்து 2012ஆம் ஆண்டில் புதிதாக 70 கணனிகள் கொரிய அரசின் திட்டத்தின் கீழ் கல்வி வளர்ச்சிக்காக வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட கணனிகள் அதிக பாவனையால் தற்போது அதிக திருத்தங்களுக்கு உள்ளாகின்றன.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு, தொழில் நுட்பக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்த கொரிய அரசிடம் கோரப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்ட கொரிய அரசு மேலும் 70 புதிய கணனிகளை வழங்க முன்வந்துள்ளது. அத்தோடு தொழில் நுட்பக் கூடத்தையும் சீரமைத்து வழங்கவும் கொரியா முன்வந்துள்ளது.

சீரமைப்புப் பணிகள் மற்றும் புதிதாக வழங்கும் 70 கணனிகள் என்பவற்றின் செலவினமாக 7 மில்லியன் ரூபா கணிக்கப்பட்டுள்ளது. தற்போது 'சீரமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றன. அவை நிறைவுற்றதும் புதிய கணனிகளும் கிடைக்கும் - என்றார். (வ-4,101)

# வீட்டுக்குள் நுழைந்து கும்பல் அடாவடி

யாழ்ப்பாணம் சுண்டுக்குழியில் உள்ள வீடொன்றில் வேலி பிரித்து உள்நுழைந்து வீட்டுக் கதவைக் கொத்திப் பிரித்து வீட்டுக்குள் சென்ற கும்பல் அங்கிருந்த உடைமைகளைச் சேதமாக்கியது என்று பொலிஸில் முறையிடப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சுண்டுக் குழியில் இலத்திரனியல் விற்பனை நிலையம் நடத்துபவரின்



வீட்டிலேயே இந்தச் சம்ப வம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

6 பேர் கொண்ட குழு வீட்டு வளவின் பாதுகாப்பு வேலியைப் பிய்த்தெறிந்துவிட்டு உள்நுழைந்து அலவாங்கால் வீட்டின் சுவரை உடைக்க முனைந்துள்ளனர். பின்னர் அலவாங்கால் வீட்டின் கதவை உடைத்துப் பிரித்து உள்நுழைந்து உடைமைகளைச் சேதமாக்கியுள்ளனர்.

அவற்றை அவதானித்த வீட்டார் ஓடி ஒழித்துள்ளனர். அந்த நேரம் வீட்டுக்குள் சிறார்கள் உட்பட 6 பேர் இருந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரி [illegible] [illegible] வீட்டுக் [illegible] லாளிகள் உடைக்கப் பயன்படுத்திய அலவாங்கை எடுத்துச் சென்றனர். (வ-4,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் ஆரம்பப் பாடசாலையை கலவன் பாடசாலையாக்க முயற்சி

## கல்வி அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு பெண்கள் ஆரம்ப பாடசாலையை கலவன் பாடசாலையாக மாற்றுவதற்கு கல்வி அதிகாரிகள் முயற்சிப்பதாக மாணவர்களின் பெற்றோரும் பழைய மாணவர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நூற்றுக்கணக்கான பாடசாலைகளில் ஆண்கள், பெண்கள் பாடசாலைகள், கலவன் பாடசாலைகள் உள்ளன. ஆரம்பப் பாடசாலைகளில் பெண்கள் பாடசாலையாக ஒரேயொரு பாடசாலையே உள்ளது. அதனால் குறித்த பாடசாலையையும் பெண்கள் ஆரம்ப பாடசாலையாக இல்லாது செய்வதற்கு அதிகாரிகள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

ஆண், பெண் மாணவர்கள் என்னும் நிலையைப் புரிந்து கொள்ளாத சிறுவர்களாயினும் பாடசாலையின் தனித்துவத்தைக் கருத்திற் கொண்டு குறித்த ஆரம்ப பாடசாலையில் ஆண் மாணவர்களையும் இணைப்பதற்கு எடுக்கும் நடவடிக்கையை அதிகாரிகள் கைவிட்டு, யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி வடக்கு மாகாணத்தில் 45 வருடங்களாக உள்ள ஒரேயொரு பெண்கள் ஆரம்பப் பாடசாலையை எடுத்துக்காட்டாகத் திகழ அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

'யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் இரு பாடசாலைகளை மாதிரிப் பாடசாலையாக வடிவமைத்து அதன் மூலமாக மேலும் தர முயர்த்தும் முயற்சி இடம் பெறுகிறது. குறித்த பாடசாலையில் தற்போது இயங்கும் 3 பிரிவுகளுடன் மேலும் ஒரு பிரிவாக 4 பிரிவுகளை இயக்கலாம். அந்தப் பாடசாலையில் அதிக பெண் மாணவர்களுக்கென ஒரு வீதத்தினைப் பேண முடியும். அதேபோன்று ஆரம்ப பிரிவு என்றதன் அடிப்படையில் பெயரில் மாற்றம் ஏற்படும் என்ற ஐயமும் தேவையற்றது. இவ்வாறான மாற்றம் அந்தப் பாடசாலையை மேலும் வளர்ச்சியுறச் செய்து போட்டித் தன்மையை அதிகரிக்கவே உதவும்.' என்று யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

'குறித்த விடயம் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எட்டவில்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பதிலளிக்க முடியும்' என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ-4,101)

# இராணுவ முகாமால் மன்னார் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.16

போர் முடிந்து 7 ஆண்டுகளாகின்றன என்று கூறும் அரசும், அரச படைகளும் மன்னார் மாவட்டத்தில் மக்கள்வாழும்பகுதியில்குண்டுகளை வெடிக்க வைக்கின்றன. அதனால் மக்கள் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இராணுவ முகாமை அகற்றி பயிற்சிகளையும் நிறுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னாரில் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் தற்போதும் குண்டுகள் வெடிக்க வைக்கப்படுகின்றன. குண்டு வெடிப்புகள் நடத்தப்படும் பிரதேசத்தைச் சூழ 200 குடும்பங்கள் வாழ்கின்றன. பாடசாலையும் உள்ளது. மக்களின் விவசாய நிலங்களையும், மேய்ச்சல் தரவைகளையும் கையகப்படுத்தியே இராணுவத்தினர் இராணுவ முகாம் அமைத்துப் பயிற்சிகளில் ஈடுகின்றனர்.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தமது விவசாயக் காணிகளையும், மேய்ச்சல் தரவைகளையும் தருமாறு கேட்கும்போது தமக்கு 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதுஎன்று இராணுவத்தினர் கூறுகின்றனர்.

இராணுவத்தினர் மேற்கொள்ளும் சூட்டுப் பயிற்சியில் சிக்கி கால்நடைகள் இறந்துள்ளன. கால்நடை வளர்ப்பு, விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீன்பிடியும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்களின் வாழ்விடத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே குளம் ஒன்று உள்ளது. அதில்நன்னீர்மீன்பிடிநடைபெறுகின்றது. அந்தக் குளத்துக்குச் செல்லும் வீதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். குளத்துக்கு மீன்பிடிக்கச் செல்வோர் 7 கிலோமீற்றர் சுற்றியே பயணிக்க வேண்டியுள்ளது.

விவசாயம், கால்நடை, மீன்பிடி அனைத்திற்கும் இடையூறாக இருப்பது ஓர் இராணுவமுகாமே. அதை முழுமையாக அகற்றாது விடினும் குறிப்பிட்ட சில தூரத்துக்குப் பின்னகர்த்தி இம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவ முன்வர வேண்டும் – என்றார். (ற-10)

## திருடிய சந்தேகத்தில் சிறுவன் கைது

சாவகச்சேரி, ஜன.16

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அறையில் வைக்கப்பட்டிருந்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியையும், 3 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடினார் என்ற சந்தேகத்தில் 12 வயதுச் சிறுவன் கடந்த வியாழக்கிழமை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வைத்தியசாலை வளாகத்தில் உள்ள பாதுகாப்பற்ற அறையில் பெண் ஊழியர் ஒருவரின் கைப்பையில் வைக்கப்பட்டிருந்த புதிய அலைபேசியும் 3 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப்போயுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை அந்த அறையில் வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உணவருந்திக் கொண்டிருந்த வேளையில் திடீரென சிறுவன் ஒருவன் அறையில் நுழைந்ததைக் கண்டு அவரைப் பிடித்து வைத்தியசாலைப் பொலிஸ் சாவடியில் ஒப்படைத்தனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மூன்று வாரங்களுக்கு முன்னர் உறவினர் ஒருவர் வைத்தியசாலை விடுதியில் சிகிச்சை பெற்றபோது உதவியாளராக நின்ற அந்தச் சிறுவனும், மற்றொரு சிறுவனும் புறா பிடிக்க வைத்தியசாலை விடுதியின் பின்பக்கமாகச் சென்றுள்ளனர். குறித்த அறை திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அங்கு சென்றவர்கள் அலைபேசியை எடுத்துள்ளனர் என்று விசாரணையில் தெரிய வந்தது. பணத்தைப்பற்றி தனக்குத் தெரியாது என சிறுவன் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,9)



## மத்திய மாகாணத்தின் தேசிய பொங்கல் விழா

நுவரெலியா, ஜன.16

தேசிய தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு பிரதான நகரங்களில் தைப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

நுவரெலியா மற்றும் தலவாக்கலை தேசிய தைப்பொங்கல் விழா நேற்றுக் காலை கொண்டாடப்பட்டது.

மத்திய மாகாணத்தின் தேசிய தைப்பொங்கல் விழா தலவாக்கலை நகரில் கொண் டாடப்பட்டது.

மத்திய மாகாண விவசாயத் துறை இந்துகலாசார அமைச்சர் மருதபாண்டி இரமேஸ்வரன் தலைமையில் காலை 10 மணியளவில் தலவாக்கலை நகரில் கதிரேசன் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது..

காலை 10 மணியளவில் ஆரம்பமான தைப்பொங்கல் விழா சிறப்பு ஊர்வலம் நுவரெலியா ஹட்டன் வீதியில் தலவாக்கலை லிந்துலை நகரசபைக்கு அருகில் இருந்து கதிரேசன் ஆலய மண்டபம்வரை இந்துக் கலாசார விழுமியங்களை ஏற்ற கலாசார நிகழ்வுகளுடன் பேரணி இடம் பெற்றது.

பிரதானவீதியில் கோலப் போட்டிகளும், கதிரேசன் மண்டப அருகில் பொங்கல் வைக்கும் நிகழ்வும் இடம் பெற்றன. (ற-ய-43)



யாழ்.மாநகர சபை எல்லைப்பகுதிகளில் கழிவுகள் குவிந்து காணப்படுகின்றன. அவை மாநகர சபை ஊழியர்களால் அகற்றப்படுவது இல்லை என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். குப்பைகளிலிருந்து துர்நாற்றமும் வீசுகின்றது. இதனூடாக பயணிப்போர் மூக்கை பொத்தியவாறே பயணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-415)

## கலை இலக்கிய விழா இன்று

அம்பாறை, ஜன.16

நிந்தவூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை ஏற்பாடு செய்துள்ள பிரதேச கலை இலக்கியவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

நிந்தவூர்ப் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான ஹாஜியானி ஆர்.வி. அப்துல் ஜலீல் தலைமையில் நிந்தவூர் அல்.மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும் விழாவில் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய பிரதி அமைச்சர் எம்.சி.பைஸால் காசிம் முதன்மை அதிதியாகக் கலந்து கொள்வார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன், அம்பாறை மாவட்ட செயலாளர் துசித பி.வணிகசிங்க ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், மேலதிக மாவட்ட செயலாளர்களான எம்.ஐ.அமீர், கே.விமலநாதன், கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி அனூா கோகுல பர்ணாந்து, கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சிவப்பிரியாவில்வரத்தினம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

கலை இலக்கிய விழாவையொட்டி "பனிச்சை" எனும் பெயரில் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது. கவியரங்கு ஒன்றும் விழாவில் நடைபெறவுள்ளது.

கலை இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்கள் திறந்த போட்டியாளர்களுக்கான இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ற-30)

## வெளிநாட்டு தபால் பொதியை சோதனை செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜன.16

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்படும் பொதிகள் அனைத்தையும் பரிசோதனை செய்வதற்கு தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மத்திய தபால் பரிமாற்றகத்தில் இரண்டு புதிய ஸ்கேன் இயந்திரங்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி மத்திய தபால் பரிமாற்றகத்தில் காணப்பட்ட பொதி ஒன்றிலிருந்து 100 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா மற்றும் ஹஷிஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டன. கொழும்பு கொம்பனித்தெரு பகுதியிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பொதியிலிருந்தே அவை மீட்கப்பட்டன.

அதையடுத்து மத்திய தபால் பரிமாற்றகத்திற்கு வரும் அனைத்துப் பொதிகளையும் சோதன்னைக்கு உட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற)

## வீடுகளுக்குள் படையெடுக்கும் பாம்புகள்

தென்மராட்சி, ஜன.16

தற்போதுள்ள வறட்சி மற்றும் அதிகளவு பனிப்பொழிவான காலநிலையால் பாம்புகள் குடியிருப்புகளுக்குள் புகுந்து பொதுமக்களை தீண்டுகின்றன. வயல் வரம்புகளில் புல் அறுப்பவர்களும் பாம்புகளால் தீண்டப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் வரம்புகளில் புல் அறுக்கச் சென்ற 21 வயது 12 வயதுச் சிறுவர்களும், நேற்றுக் காலை தேநீர் தயாரிப்பதற்கு விறகு எடுத்த குடும்பப் பெண்ணும் பாம்புகளால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 21 வயது இளைஞனும், தாவளை இயற்றாலையைச் சேர்ந்த 12 வயதுச் சிறுவனும், உசன் மிருசுவிலைச் சேர்ந்த 49 வயது குடும்பப் பெண்ணுமே பாம்பு தீண்டிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-9)



கிழக்கு மாகாண பட்டிப்பொங்கல் நிகழ்வு நேற்று கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன் றீஸ்வரர் ஆலய முன்றிலில் நடத்தப்பட்டது. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொக்கட்டிச்சோலை கால்நடை வைத்திய அலுவலகத்தால் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. (ற-ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 03 . 1939

மறைவு 15 . 01 . 2017

### திருமதி நல்லம்மா செல்லையா

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம், நாவலர் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா செல்லையா 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவகாமி தம்பதியரின் பாசமிகு புதல்வியும் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சடையர் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் புஸ்பமலர் (யாழ்ப்பாணம்), புவனேஸ்வரன் (சுவிஸ்), சிவசக்தி (சுவிஸ்), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் சிவமணி (சுவிஸ்), ஸ்ரீனிவாஸ் (சுவிஸ்), தாரணி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, முத்துக்குமாரன், முத்தையா, பார்வதி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காலஞ் சென்றவர்களான நாகமணி, கண்ணப்பு மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகலியும் யோகேஸ்வரன் -மோகனப்பிரியா, யசோதரன் - கௌசாலினி, கயூதரன், பிரசன்னா, லக்ஷாயன், லக்ஷிகா, கஜனியா, சஜீபன், அஜீசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அக்ஷயாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2017) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 851,
நாவலர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 7622

(C 216)
(12,17,18,)

# சனசமூக நிலையப் பொதுக்கூட்டம்

பளை இத்தாவில் சரஸ்வதி சன சமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணிக்கு இத்தாவில் பொது நோக்குமண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் திருமதி செ.அனுஷியாவும் சிறப்பு விருந்தினராக பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் சசிகுமாரும் கலந்து கொள்வர் என்று நிலையத்தலைவர் க.குலவீரசிங்கம் தெரிவித்தார்.

சனசமூக நிலையக் கட்டம் 2000ஆம் ஆண்டு போரின் போது முற்றாக அழிவடைந்த நிலையில் 2012ஆம் அண்டு பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் தற்காலிக கொட்டில் அமைத்து இயங்கிவருகிறது.

2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இத்தாவில் சந்திக்கு அருகில் ஏ - 9 வீதியுடன் இயங்கிய இந்தச் சன சமூக நிலையத்தை இத்தாவில் வேம்பொடுகேணி கச்சார்வெளி செல்வபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

(வ-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### இராணுவப்...

'அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக சிங்கள நாளிதழான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்னவிடம் கேட்ட போது, அவ்வாறு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. வெளியான செய்தி பொய்யானது என்று பதிலளித்தார்.

திருகோணமலையில் கடந்த வாரம் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தை அடுத்தே, விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகளுக்கு பாதுகாப்பு வழங்க இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. (வ-5)

### ஏஎச் 1 என் 1...

ரத்னாயக்க தெரிவித்தார்.

கண்டி போதனா வைத்தியசாலையின் சிறுநீரக நோயாளர் விடுதியில் கடந்த வாரம் மூவர் ஒரே நாளில் உயிரிழந்திருந்தனர். ஏஎச் 1 என் 1 என்ற வைரஸ் தொற்றுக் காரணமாகவே அவர்கள் உயிரிழந்ததாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் மூவருக்கு இந்தத் தொற்றுப் பரவியது உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, ஏஎச் 1 என் 1 வைரஸ் தொற்றுக்கு சிகிச்சையளிப்பதற்காக சிறப்பு விடுதி கண்டி போதனா வைத்தியசாலையில் திறக்கப்பட்டது. இந்த விடுதியிலேயே இதுவரை 7 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சால் தேவையான மருந்து வகைகளும் ஆலோசனைகளும் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார். (வ-5)

### மோ. சைக்கிள்...

மற்றொருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் கனகன்புளியடி புத்தூர் வீதியில் நேற்றுப்பிற்பகல் இடம்பெற்றது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செல்லமுத்து சுரேஸ் (வயது - 22) என்பவரே விபத்தில் உயிரிழந்தார். அதே இடத்தைச் சேர்ந்த சத்தியசிவம் டேவிட் பிலிப் (வயது - 21) என்பவர் படுகாயமடைந்தார்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் சாவகச்சேரிக்குச் சென்றுகொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. நாய் வீதியைக் கடந்தபோது விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிள் அங்கிருந்த வீதியோர மதகுக் கல்லுடன் மோதி அருகில் உள்ள பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த வழியே சென்ற வாகனத்தில் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் ஒருவர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. படுகாயமடைந்தவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உயிரிழந்தவரின் சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (வ-4,9)

## மரண அறிவித்தல்



### திருமதி ரோகினி சிவராசா

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரோகினி சிவராசா 14.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், சிவராசாவின் அன்பு மனைவியும், பிரியாவின் பாசமிகு தாயாரும், கருணாகரனின் (ஆசிரியர் - யா/சாவ.மகளிர் கல்லூரி) அன்பு மாமியாரும், சச்சிதானந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி),நித்தியானந்தன் (ஆசிரியர், யா/சாவ. இந்துக்கல்லூரி), அருளானந்தன் (கனடா), சுபாதினி (விரிவுரையாளர் - தேசிய கல்வியியல் கல்லூரி - கோப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குமாரலதா (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), நந்தரூபி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), கிருபாஜினி (கனடா), சத்தியேந்திரம் பிள்ளை (உப பீடாதிபதி, தேசிய கல்வியியல்.கல்லூரி), நவரத்தினம் (ஜேர்மனி), ராதாதேவி ஆகியோரின் மைத்துனியும், ஆஜிசன்,அபிசன், ஆஜிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2017) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/23827)
(11,17)

077 711 2098

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா அப்பையா



நாவற்குழி, தச்சன்தோப்பைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா அப்பையா (13.01.2017) வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இராமர் - சீதேவி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கோவிந்தி, வல்லிபுரம், நாகலிங்கம் மற்றும் லட்சுமி செல்லம்மா ஆகி யோரின் அன்புச்சகோதரியும் லோகேஸ்வரி காலஞ்சென்றவர்களான மகேந்திரம், பத்மாவதி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும் தேவமலர் காலஞ்சென்ற சின்னராசா ஆகியோரின் அன்புமாமியும் திங்களேஸ்வரன் (கனடா), கேசவன் , கேதீஸ்வரன் (பிரான்ஸ்), டுஷாந்தன் (பிரான்ஸ்), பரிமலா, நிஸந்தா, பிறஷாந்தினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் பிறகிஸ், பிறக்ஷிதா, செங்கதிர், ஜோய்ஷா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2017) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நுணாவில் மேற்கு குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசன, தியான வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.16

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் நடத்தப்படும் யோகாசன, தியான வகுப்புக்களின் புதிய பிரிவு எதிர் வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது என்று இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்தது.

"இந்த வகுப்புக்கள் நல்லூர் ஆலய முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும். முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இந்த வகுப்புக்கள் ஆண்கள், பெண்கள் என இரு பாலாருக்கும் தனித்தனியாக நடத் தப்படும்.

ஆண்கள் பிரிவு சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30 தொடக்கம் 7.30 மணி வரையிலும், பெண்கள் பிரிவு அதே நாள் களில் காலை 7.30 மணிமுதல் 8.30 மணி வரையிலும் என வார இறுதிநாள்களில் மட்டும்நடைபெறும், சுமார் 3 மாதகால பகுதி யைக் கொண்ட இந்தக்கற்கைநெறியைமுழுமையாகநிறைவு செய்பவர்களுக்கு திணைக் களத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும். நோயா ளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்து பயிற் றுவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கற்கை நெறியை கற்க விரும்பும் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் நல்லூர் ஆலய முன்றிலிலுள்ள ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பதிவுகளை மேற் கொண்டு இணைந்து கொள்ளமுடியும்.

மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் மேற்படி மண்டப நேரத்திலோ அல்லது யோகாசன கற்கை நெறி ஆரம்பமாகும் தினத் தன்றோ பெற்றுக்கொள்ள முடியும்" என்று இந்து கலாசாரத் திணைக்களம் தெரிவித் தது. (ற-21)

# ஆசிரியர்கள் உள்ளீர்ப்பு நேர்முகத் தேர்வு

வடக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் பட்ட தாரி ஆசிரியர் பதவி ஆளணிக்கு பட்டதாரிகளை உள்ளீர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வு கள் இன்று திங்கள்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை மூன்று தினங் களுக்கு நடைபெறவுள்ளன என்று அறி விக்கப்பட்டது.

நல்லூர்செம்மணிவீதி உள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 779 பட்டதாரிகள் பாடத்துறை ரீதியாக நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான அழைப்புக் கடிதங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சு சம்பந்தப்பட்ட வர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. அண்மை யில் நடைபெற்ற பட்டதாரி ஆசிரியர் தெரிவுக் கான போட்டிப் பரீட்சைக்கு 2 ஆயிரத்து 452 பேர் தோற்றி இருந்தனர்.

போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய இரண்டு பாடங் களிலும் பாடங்கள் ஒவ் வொன்றுக்கு 40 புள்ளிக்கும் அதற்கு மேலும் பெற்றவர்கள் இரண்டு பாடங்களிலும் 80 புள்ளிக்கும், அதற்கு மேலும் பெற்றவர்கள் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என்ற வகையில் நேர்முகத் தேர்வுக்கு அழைக் கப்பட்டுள்ளனர்.

பட்டதாரி ஆசிரியர் ஆளணி எண்ணிக்கை 849. போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை 779 ஆகும். (ற-1)

**தவறிவிட்டது**

பரமசிவம் கருணாகரன் என்பவரின் தேசிய அ.அ (741134500 V). சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பேர்சுடன் திருநெல்வேலி சந்தையடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 980 9623**

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனிதகுலம் மேம்பட இவ்வுலகிற்கு அளித்தவையே முழுமைநல வாழ்விற்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

நிகழ்ச்சிகள்

பயிற்சி : ஆளுமைத்திறனூக்கப் பயிற்சி
காலம் : 17.01.2017 தொடக்கம் 21.01.2017 வரை
நேரம் : பி.ப 05 மணி தொடக்கம்
இடம் : அறிவுத்திருக்கோயில் யாழ்ப்பாணம்.

பயிற்சி வழங்குபவர்

மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்

வழங்கப்படும் பயிற்சிகள்

01. காயகல்ப பயிற்சி
02. எளியமுறை உடற்பயிற்சிகள்
03. எளியமுறை தியானப்பயிற்சிகள்
04. அகத்தாய்வுப் பயிற்சிகள்

கூட்டுத்தவம்

தினமும் காலை 6.10 மணிமுதல் 6.30 மணிவரை அறிவுத் திருக்கோயிலில் நடைபெறும்.

மேற்படி மனவளக்கலை யோகாப்பயிற்சிகளைப் பயின்று பயன் பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவுத்திருக்கோயில்
இல - 81, பிறவுண் வீதி,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

யாழ்.மனவளக்கலை
மன்ற அறக்கட்டளை.

**Yarl Beauty & Language's Skills College**

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

கிழமை நாள் பிரிவுகள் 19.01.2017 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 21.01.2017 அன்று 10.00 மணிக்கு

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம் பின்பற்றப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.



ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புகள் தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)

**இதோ வெளிவந்துவிட்டது உங்கள் குடும்ப சஞ்சிகை**

ஜனவரி மாத இதழ்!

திருத்தற் சேவையுடன் தரம் - 5 வினாத்தாள் (I,II)




- அழகின் மகத்துவம்
- பாசபந்தம்
- பொங்கட்டும் தமிழ்
- இப்படியும் ஆடை வாங்கலாம்
- உண்மைக்காதலை அறிவது எப்படி
- நிஜத்தில் பூத்த பொய்கள்
- இசை - இறை - ஒற்றுமை
- மனமே மயங்காதே
- நிதானமாகத் தடம் பதியுங்கள்
- தடை தகர்

தைப்பொங்கல் சிறப்பிதழ்

Free
* சுயதொழில் கையேடு
* பொது அறிவு
* பொது விவேகம்
* போட்டிகள்

குடும்ப முன்னேற்றத்துக்கான அனைத்து ஆக்கங்களும் ஒரே சஞ்சிகையில்!

பிரதிகளை உதயன் முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள: கொழும்பு 071-8628572 வடக்கு: 077-6569617/071-8628569, திருக்கு: 071-8724057, வவுனியா: 077-2772726, மலையகம்: 071-8724056, ஏனைய மாவட்டங்கள்: 071-4114990

Cardiff Metropolitan University

ICBT CAMPUS JAFFNA

SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

**MBA**

MASTER OF BUSINESS ADMINISTRATION

in Jaffna



March, 2017 Intake
(Third Batch in Jaffna)

- 12 months of classroom study and 6 months of Dissertation works
- Sundays only class
- Pay Rs.150,000 on or before 20th of February and claim Rs.50,000 off from the Total Payment
- Join as a group of 3 or more and claim Rs.25,000 off from the Total Payment.

Entry Qualification

- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

FOR MORE INFORMATION
ROY: 0770 746 553
580, Hospital Rd., Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி தீர்வை தமிழர் ஏற்கக்கூடாது

## சிறிதுங்க ஜயசூரியா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 16
ஒற்றையாட்சி தீர்வுப் பொறிமுறையை தமிழ் மக்கள் ஏற்கக் கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் உறுதியாக இருக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளரான சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இணைந்த வடக்கு – கிழக்கில் கூட்டாட்சி முறைமைதான் அவசியம் என்று தமிழ் மக்கள் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளனர். தேர்தல் அறிக்கைகளை இதனை முன் வைத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்குக் கோரியது. அதற்கு மக்கள் ஆணை வழங்கினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது விடயத்தில் விழிப்பாக இருக்கவேண்டும். அரசமைப்பு நிர்ணயச் சபைக் கூட்டங்களிலும் கருத்து வெளியிடவேண்டும். தமிழரை ஏமாற்றுவதற்கு பலவழிகளிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களுக்குக் கௌரவமான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்புக்கே இருக்கின்றது.

புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய அவசியமில்லை. சகல மதங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் – என்றார். (வ-5)

# இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் சங்கம் கூறியது பொய்யானது

## ஆசிரிய கலாசாலையில் பயிற்சி முடித்த ஆசிரியர்கள் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஜன.16
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சைப் பெறுபேறுகள் இரண்டு வாரங்களுக்குள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படவுள்ளன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடந்த டிசெம்பர் மாதம் முற்பகுதியில் கூறியிருந்தது. அது தற்போது பொய்யாகியுள்ளது.

இவ்வாறு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை முடித்துக்கொண்ட ஆசிரியர்கள் கவலை வெளியிட்டனர். அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது–

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கூறியபடி இரண்டு வாரங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. ஒரு மாதம் கடந்தும் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை.

ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் ஆசிரியர் கலாசாலைப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடாமல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் காலம் கடத்துகின்றது. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்படாத நிலையில் பெரும் பாதிப்புக்குள் ளாகியுள்ளனர்.

இலங்கை அரசின் கட்டமைப்புக்களில் ஒன்றாகக் காணப்படும் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்பட்ட பரீட்சை ஒன்று ஒரு வருடம் கடந்தும் வெளியிடப்படாத நிலை காணப்படுவது, அரச கட்டமைப்பிலுள் குறைபாட்டையும் செயற்றிறனின்மையையுமே வெளிக்காட்டுகின்றது.

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் நாடு முழுவதுமுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை முடித்துக்கொண்ட 3 ஆயிரம் பேருக்கும் குறைவானவர்களுடைய பெறுபேறுகளே இது வரை வெளியிடப்படவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுமாறு கோரி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போராட்டம் நடத்தவுள்ளோம் என்று கூறிய வேளையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளருடன் தொடர்புகொண்டு பேசி, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சைப் பெறுபேறுகள் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ளன என்று கடந்த டிசெம்பர் மாதம் முற்பகுதியில் கூறியிருந்தது"– என்றுள்ளது. (ற-21,426)

# மாகாண சபைக்கு சீவல் தொழிலாளர் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.16
வெளி மாகாணங்களிலிருந்து போத்தலில் அடைத்து வரும் செயற்கைக் கள்ளை நிறுத்தி உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீமானத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தனர்.

அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது–

வட மாகாணத்திலுள்ள சீவல் தொழிலாளர்களது நன்மை கருதியும், எமது கஷ்டநிலையைக் கருத்திற்கொண்டு கடந்த 28 ஆம் திகதி மாகாணசபை அமர்வில் வட மாகாண சபையில் வெளிமாகாணங்களிலிருந்து போத்தலில் அடைத்து வரும் செயற்கைக் கள்ளை நிறுத்தி, எமது தொழிற் சமூகத்துக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானத்தை நிறைவேற்றிய வடக்கு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் உறுப்பினர் சிவநேசன் போன்றோருக்கும், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து மாகாணசபை உறுப்பினர்களுக்கும் எமது தொழிலாளர் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்– என்றுள்ளது. (ற-21)

# கே.கே.எஸ் - காரைக்கால் கப்பல் சேவை இடம்பெறாமைக்கு சிவசேனை விளக்கம்

கொழும்பு, ஜன. 16
யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்துக்கான நேரடிக் கப்பல் பயணத்துக்கு இலங்கை - இந்திய அரசுகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. இருப்பினும் எங்கோ ஓரிடத்தில் தடங்கல் ஏற்பட்டுவிட்டது. இதனாலேயே கப்பல் சேவை திட்டமிட்டபடி நடத்த முடியவில்லை.

இவ்வாறு சிவசேனை அமைப்பின் இணைத் தலைவர்களுள் ஒருவரான மறவன் புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் திருவாதிரை உற்சவத்துக்கு சிதம்பரம் செல்வதற்கு காங்கேசன் துறை – காரைக்கால் இடையே கப்பல் சேவை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கப்பல் சேவைக்கு கடற்படை ஒத்துழைப்பதாகத் தெரிவித்திருந்தது. இதற்கு அமைவாக வடதாரகையில் பயணிகளை அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அரசின் கடிதம் கிடைக்கவில்லை என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இலங்கை அரசின் அதிகாரிகள் புதுடில்லியில் உள்ள தமது அதிகாரிக்கு கடிதம் அனுப்பியதாகத் தெரிவித்தனர். புதுடில்லியில் உயர் மட்டத்தில் பேசி இந்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னரே பயணிக்கலாம் என்று அவர் தெரிவித்தார். இலங்கை அரசிடமிருந்து கடிதம் எதுவும் வரவில்லை என்று புதுடில்லி அயலுறவுத் துறை அமைச்சகத்தினர் தெரிவித்தனர்.

இலங்கை முழுமையாக ஒத்துழைத்தது. இந்தியா முழுமையாக ஒத்துழைத்தது. ஆனாலும் எங்கோ ஓரிடத்தில் ஒரு தடங்கல். யாரோ ஒரு அதிகாரியின் மேசையில் கடிதம் தேங்கி இருந்தது.

11ஆம் திகதி கப்பல் புறப்பட்டிருந்தால் காரைக்கால் சென்று சிதம்பரத்தில் கடந்த 12 ஆம் திகதி புலர்காலையில் திருவாதிரை வழிபாட்டில் ஈழத்து அடியவர்கள் 80 பேர் பங்கேற்றிருக்கலாம். திருவருள் கூடவில்லை என்று அந்தப் பத்திரிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

# துயிலும் இல்லத்தை மயானமாக சித்திரிக்கும் அவலம் தற்போது

## கவிஞர் பொன்.காந்தன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.16
எமது பண்பாட்டு கலாசாரச் சூழலுடன் இரண்டறக் கலந்த மாவீரர் துயிலும் இல்லங்களை மயான பூமியாகச் சித்திரிக்கும் செயற்பாடுகள் இன்று நமது மண்ணில் அரங்கேற்றப்படுகின்றன.

துயிலுமில்லங்கள் மயான வரையறைக்குள் கொண்டு வரப்படும்போது எதிர்காலத்தில் அவற்றின் பண்பாட்டு விழுமியங்கள் மறைந்து போய் விடக்கூடும்.

இவ்வாறு கவிஞர் பொன். காந்தன் தெரிவித்தார்.

சிவன் அறக்கட்டளை நிறுவனத்தால் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் மாற்றுத் திறனாளிகளுக்கு பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மக்கள் இங்கு பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்கின்றார்கள்.

போரால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளும், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களும் உரிய தொழில்வாய்ப்பின்றி நடைப் பிணங்களாக வாழ்கின்றனர்.

மாவீரர்களையும், தலைவர் பிரபாகரனையும் வைத்து இந்த மண்ணில் ஒரு வியாபாரமே நடந்துகொண்டிருக்கிறது.

இன்று துயிலுமில்லங்கள் வியாபார நோக்கமாக மாறிவிட்டன. எமது பண்பாட்டுச் சூழலுடன் இரண்டறக் கலந்திருக்கும் துயிலுமில்லங்களை மயான வரையறைக்குள் கொண்டுவரும் அவலம் நேருகின்ற நிலையும் தோன்றியுள்ளது.

துயிலுமில்லங்கள் கட்டப்படுவதும் தீபங்கள் ஏற்றப்படுவதும், மாவீரர்களின் கனவல்ல. அவர்கள் எந்த எதிர்பார்ப்புமின்றி நாட்டுக்காக உயிரைத் துறந்தவர்கள், அவர்களின் கனவை நனவாக்க வேண்டுமெனில் எமது எதிர்காலச் சந்ததியினரை கல்வி கற்றவர்களாக உருவாக்கவேண்டும்.

அவர்களைச் சாதனையாளர் களாக மாற்றுவதன் மூலமே நாம் இந்த மண்ணில் நிலையாகக் காலூன்ற முடியும்–என்றார். (ற-ய-6)

# தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

அரச அங்கீகாரம் பெற்ற தனியார் தாதியர் பயிற்சி நிறுவனம் ஒன்று இந்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தாதியர் பயிற்சி நெறிக்காக ஆள்களைச் சேர்த்துக் கொள்ளவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தால் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டின் தொடர்ச்சியாகவே இந்த தேர்வு இடம்பெற உள்ளது. இது தமிழ் மொழி மூல கட்டணத்துடனான ஒருவருட பயிற்சியாகும்.

நேர்முகத் தேர்வு எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பழைய பூங்கா வீதியிலுள்ள, மாவட்டச் செயலக முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் நடைபெற வுள்ளது. க.பொ.த.உயர்தரம் மற்றும் க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விளக்கங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தில் நேரடியாகவும் 0212219359 இலக்க அலுவலக தொலைபேசி ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சான்றிதழுடனான இந்தப் பயிற்சியின் ஊடாக உள்நாட்டு, வெளிநாட்டு வைத்தியசாலைகளில் சேவையில் இணைந்து கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# நெல்லியடி விபத்தில் படுகாயமடைந்த சிறுமி கொழும்புக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 16
நெல்லியடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விபத்தில் படுகாயமடைந்த சிறுமி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடி தேவரையாளி பாடசாலைக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு விபத்து நடைபெற்றுள்ளது.

16 வயது சிறுவன், மோட்டார் சைக்கிளில் 11 வயது சகோதரனையும், 7 வயது சகோதரியையும் ஏற்றிச்சென்றுள்ளார். பாடசாலைக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். சிறுமி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (வ-5-26)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 16
சிறுப்பிட்டி வடக்கு அருள்மிகு ஸ்ரீ விஸ்ணு துர்க்கா ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-5-11)

# விருதுக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

யாழ்.மாவட்ட சர்வோதயமும் தேசோதயமும் இணைந்து மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரனின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 50 கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கவுள்ளன.

விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கலைத்துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் தமது சுய விவரங்களுடன் தமது கலைத்துறையையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கண்டி வீதி, நெடுங்குளம், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சர்வோதய அலுவலகத் தில் சேர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னியக்கக் கருவியில் காணொலிப் பதிவு செய்தவர் கைது

கொழும்பு, ஜன. 16
அநுராதபுரத்தில் வழிபாட்டுத் தலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளை தன்னியக்க கருவி மூலம் காணொலிப் பதிவு செய்த நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.
அநுராதபுரத்தில் புனித பிரதேசமான ருவன் வெலிசாயவில் நடைபெற்ற பௌர்ணமி தின வழிபாடுகளின் போது கமரா பொருத்தப்பட்ட தன்னியக்க கருவி மூலம் இயக்கப்படும் சாதனத்தை ஒருவர் பயன்படுத்தியுள்ளார்.
காணொலி பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது அந்தச் சாதனம் விகாரையின் கலசத்தில் விபத்துக்குள்ளானது. அதனைப் பயன்படுத்திய நபர் கைது செய்யப்பட்டார். அவரை விசாரணை செய்ததில், தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் என்று தெரிய வந்தது.
இந்தச் சாதனத்தைப் பயன்படுத்தி ஒளிப்பதிவு செய்வதற்கு உரிய அனுமதியை கைது செய்யப்பட்ட நபர் பெற்றிருக்கவில்லை. கைது செய்யப்படும்போது அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் சம்பந்தப்பட்ட நபர் வைத்திருக்கவில்லை.
அம்பாந்தோட்டையில் கடந்த வாரம், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட சீன முதலீட்டு ஆரம்ப நிகழ்விலும் இவ்வாறான சாதனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனைப் பயன்படுத்துவதற்கு உரிய அனுமதி பெறப்படவில்லை என்று தெரிவித்திருந்த பொலிஸார், இவ்வாறான தன்னியக்க சாதனத்தைப் பயன்படுத்தி ஒளிப்பதிவு செய்யும் போது முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர். (வ-5)



# முல்லை. மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது

முல்லைத்தீவு, ஜன. 16
முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு கைவிடப்பட்டது. பழைய துவிச்சக்கர வண்டிகளை வாங்க மாணவர்கள் மறுத்ததனாலேயே திட்டம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
குருநாகல் மாவட்ட வர்த்தக சங்கத் தலைவர் சரட்ரட்நாயக்கவின் ஏற்பாட்டில் கற்சிலைமடு கிராம அலுவலகர் அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதி மணவர்களுக்கு நேற்றைய தினம் துவிச்சக்கர வண்டிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
பாதிப்புக்கு உள்ளான மாணவர்களுக்கு வழங்குவதற்காக பாவித்த பழைய துவிச்சக்கர வண்டிகளை கொண்டுவந்த வேளையில் மாணவர்களால் இதனை பொறுப்பேற்க மறுத்து திரும்பிச் சென்றதையடுத்து இந்தத் திட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது. (வ-7)

# விவசாயி இறப்பு விசாரணை; பொலிஸார் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 16
கிளிநொச்சி பூநகரியில் விவசாயி ஒருவர் எரிக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டு உடல் சிதைவடைந்த கோலத்தில் சடலமாகத் தோண்டியெடுக்கப்பட்ட சம்பவத்தில், பொலிஸாரின் விசாரணை போதாது என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.
கொல்லப்பட்டவர் வவுனியா குருமன்காடு பாலர் பாடசாலை வீதியைச் சேர்ந்தவரும் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் பூநகரியில் உள்ள அவரது மைத்துனர் வீட்டில் தங்கியிருந்தவருமான கந்தையா சபாரத்தினம் (வயது 56) என்ற விவசாயியே சடலமாக மீட்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. சடலம் மீட்கப்படும்போது அடையாளம் காணக்கூடியதாக இருக்கவில்லை. எனினும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்தான் கொல்லப்பட்டிருக்கிறார் என்பது கருதப்படுகிறது.
அவருக்கும் அவருடன் தொடர்புடைய குற்றச்சாட்டுச் சுமத்தப்படுபவர்களுக்கும் இடையே முரண்பாடு உள்ளிட்ட சில தகவல்கள் கதை வழியாகக் கூறப்பட்டாலும் கொல்லப்பட்டவருக்கும் ஏனைய சந்தேகநபர்களுக்கும் இடையே எந்தவித பிரச்சினையும் இல்லை. அவர்களுடன் வெறும் அறிமுகம் மட்டுமே என்று கொல்லப்பட்டவரது குடும்பத்தினர் கூறுகின்றனர்.
சம்பவத்துடன் தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டப்படும் கனடாவிலிருந்து வந்திருந்த முதன்மை நபர் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். மற்றொரு குடும்பத்தலைவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
பூநகரிச் சந்தியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்திலுள்ள ஞானிமடம் பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வீடு ஒன்றில் எரிக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் சடலம் அடையாளம் காணமுடியாத நிலையில் தோண்டியெடுக்கப்பட்டது.
சம்பவ தினத்துக்கு முன்னர் சந்தேக நபர்கள் சபாரத்தினத்துடன் சேர்ந்து சாவகச்சேரிக்குச் சென்று மதுப் போத்தல் வாங்கிக் கொண்டு சென்று மது அருந்தியுள்ளதாக ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் ஒரே வீட்டில் தங்கியிருப்பவர்கள் அல்ல. சபாரத்தினம் தனது மைத்துனர் வீட்டில்தான் தங்கியிருந்து தனது வயல் வேலைகளைச் செய்து வந்தார் என்று சபாரத்தினத்தின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.
அவரைக் காணவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் ஏனைய சந்தேகநபர்கள் அடிக்கடி தங்கும் வீடு ஒன்று பொலிஸாரால் சோதனையிடப்பட்டு சந்தேகப்படும்படி எதுவுமில்லை என்று கூறிச் சென்றிருந்தனர்.
ஆனால் எமக்கு அந்த வீட்டில்தான் மர்மம் இருப்பதாக உள்ளுணர்வு கூறியது. ஆதலால் அந்த வீட்டுக்குச் சென்று தேடுதல் நடத்தியபோதுதான் மண் நிலத்தில் சந்தேகத்துக்கிடமான அடையாளம் காணப்பட்டது. அதில் சந்தேகம் கொண்ட நாங்கள் அந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோதே சடலம் தெரிய வந்தது.
அதன் பின்னர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுப் பின்னர்தான் பொலிஸார் அங்கு சென்று பார்த்து சடலத்தை மீட்டனர். அவர்கள் அங்கு முதலில் சோதனையிட்டபோதும் சந்தேகப்படும்படியான அந்த இடங்களை உரிய முறையில் சோதனையிட்டிருக்கவில்லை என்பது அதிலிருந்து தெரிகிறது.
அதுமட்டுமன்றி அந்த வீட்டில் உரித்துக் காய விடப்பட்டபடி சிறுத்தையின் தோல் ஒன்றும் காணப்பட்டது. அதனையும் பொலிஸார் எடுத்துச் சென்றிருந்தனர்.
அதன் பின்னர் சம்பவம் தொடர்பான முன்னேற்றம் எதுவுமில்லை என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். (வ-4)

# எரிகாயங்களுக்குள்ளான பெண் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 16
அடுப்புக்கு அருகில் மண்ணெண்ணெய் தெறித்து உடையில் பட்டதனால் அதில் தீப்பற்றி எரிகாயமடைந்த பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
காரைநகரைச் சேர்ந்த சந்திரரூபன் இந்துமதி (வயது 32) என்பவரே உயிரிழந்தார்.
கடந்த முதலாம் திகதி வீட்டில் சமைப்பதற்காக மண்ணெண்ணெய் அடுப்பைப்பற்ற வைத்தபோது, காற்றினால் மண்ணெண்ணெய் தெறித்து அவரது உடையில் பட்டுள்ளது. அவர் அதனைக் கவனிக்கவில்லை. அடுப்பைப் பற்றவைத்தபோது அவரது உடையில் தீப்பற்றியுள்ளது. அந்த நேரம் வீட்டில் வேறு யாரும் இருக்கவில்லை.
அயலவர்களின் உதவியுடன் குறித்த பெண் காரைநகர் வலந்தலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,ரி)

# இளைஞர்கள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 16
தனியார் கல்வி நிலையத்துக்கு மகளை ஏற்றச் சென்ற தந்தையுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு நேற்று மாலை, மகளை ஏற்றுவதற்காக தந்தை சென்றுள்ளார்.
அந்தப் பகுதி இளைஞர்கள் இருவர் அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்தனர். (வ-5-26)

# மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜன.16
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரையும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரிலும் மன்னார் பிரதேசத்தில் எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத்திட்டம், கொன்னயன் குடியிருப்பு ஆகிய பகுதிகளிலும் மின் விநியோகம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

# சுவிஸ் செல்கிறார் மங்கள

அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, சுவிஸ் நாட்டுக்கு உத்தியாகபூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
சுவிஸ் அயலுறவுத்துறை அமைச்சின் அழைப்பின் பேரிலேயே மங்கள சமரவீர அங்கு செல்லவுள்ளார் என்று கொழும்பு அயலுறவுத்துறை அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.
நாளைய தினம் சுவிஸுக்கான பயணத்தை மேற்கொள்ளும் மங்கள, இரு நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.16
யாழ்.கோட்டக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் பொங்கல் விழா இன்று காலை 8.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமை தாங்குவார் என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-ரி)

# பஸ் மீது கல்வீச்சு

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றிரவு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தின் மீது கல்லால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
நேற்றிரவு 8.30 மணியளவில் திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தின் மீது எழுதுமட்டுவாள் பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பேருந்தின் கண்ணாடி உடைந்துள்ளது. இது தொடர்பாகப் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-6)

# கள்ளுத் தவறணையை இடமாற்ற கிளி. பாரதிபுரம் மக்கள் ஆதரவு

கிளிநொச்சி, ஜன. 16
கிளிநொச்சி, பாரதிபுரம் செபஸ்தியார் வீதியில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் ஆதரவளித்துள்ளனர். பாரதிபுரம் மத்தி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற கருத்துக் கணிப்பிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.
இந்தக் கள் விற்பனை நிலையம், இரணைமடுச் சந்திக்கு அண்மையில் அமைந்திருப்பதாலும் சந்தைக்கு எதிரே உள்ள காரணத்தாலும் நாளாந்தம் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். சந்தைக்குக் கூட சுதந்திரமாக வந்து போக முடியாத நிலை காணப்படுகின்றது. கள் விற்பனை நிலையத்தை மாற்ற வேண்டும். இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.
கள் விற்பனை நிலையத்தை இடமாற்றம் செய்வதால், தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று கூட்டுறவுச் சங்கத்தால், கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. கள் விற்பனை நிலையத்தால் எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.
இதனையடுத்து மக்களின் கருத்தை அறிந்து முடிவு செய்வதற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தீர்மானித்தனர். மக்களின் கருத்தை அறிவதற்கான கூட்டம் நேற்று நடத்தப்பட்டது. இதில் கள் விற்பனை நிலையத்தை அகற்ற வேண்டும் என்று 60 பேரும், அகற்றத் தேவையில்லையென்று 7 பேரும் கையெழுத்திட்டுள்ளனர். மக்களின் கருத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிராம அபி விருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (வ-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஜன.16
ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சைபெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. பாடசாலைரீதியாகக்கிடைத்தபெறுபேறுகளின் விவரம் வருமாறு:

**வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை**
**உயிரியல் பிரிவு**
**தமிழ் மொழி மூலம்**
த.ஹம்ஸா 3ஏ, ச.ரதினி 3ஏ, மு.சுலக்ஷனா 3ஏ, சி.ஜனந்தினி 3ஏ, தி.மிதுஷா 3ஏ, சூ.ஶ்ரீநாதசாயினி 3ஏ, ம.தனுசியா 3ஏ, சி.நவநீதா 3ஏ, உ.தேனுகா 3ஏ, க.தனுசியா 3ஏ, கை.யாழினி 2ஏபி, ம.நிலுஜா 2ஏபி, ப.கோபிதா 2ஏபி, ஶ்ரீ.உமையாள் 2ஏபி, க.தமிழினி 2ஏபி, சி.சிவநீபா 2ஏபி, சி.அஞ்சலா 2ஏபி, ச.சிந்துஜா 2ஏபி, ஜெ.அபிராமி ஏ2பி, கே.கஜலக்சி ஏ2பி, இ.விஷ்ணுபிரியா ஏ2பி, சோ.டனேகா ஏ2பி, ந.சரண்யா ஏ2பி, வ.கார்த்திகாஜினி ஏ2பி, சி.மதுஷா ஏ2பி, ந.ஹிந்துஜா ஏ2பி, கி.பிரியங்கா ஏ2பி, வி.திசாந்தினி ஏ2பி, இ.இராகவி ஏ2பி,ந.தாரங்கி ஏ2பி, வி.டக்ஷனா ஏ2பி.

**ஆங்கில மொழி மூலம்**
இ.கீர்த்திகா 3ஏ, மு.துவாரகா 3ஏ, தி.ஜனுஜா 3ஏ, சு.சுகன்யா 2ஏபி.

**கணிதப்பிரிவு**
**தமிழ் மொழி மூலம்**
இ.கோசிகா 3ஏ, ச.சாருகா 2ஏபி, சி.கலைவாணி 2ஏபி, அ.உதயமாலினி 2ஏபி, சு.அபிராமி 2ஏபி, வி.சிவசங்கீதா 2ஏபி, இ.சர்மினி 2ஏபி, ந.ருட்சிகா 2ஏபி, ஆ.கபாலினி 2ஏபி, ந.டினோஜா 2ஏபி, செ.சாகித்தியா ஏ2பி, சூ.தர்சினி ஏ2பி, ஜெ.கிருசாந்தி ஏ2பி,வ.சங்கவி ஏ2பி, நே.துருஸ்ரிகா ஏ2பி.

**ஆங்கில மொழி மூலம்**
பி.ஹாரணி 3ஏ,ச.தர்வஜோதி 2ஏபி, சா.விஸ்ணுஜா ஏ2பி, லி.விதுஷா ஏ2பி, சி.மஞ்சுளானி ஏ2பி, த.டிலோஷா ஏ2பி.

**வர்த்தகப் பிரிவு**
ச.அனோஜா 3ஏ, பா.தர்சிகா 3ஏ, கா.கஜனி 3ஏ, க.சரணிகா 3ஏ, ம.அபிராமி 3ஏ, செ.சாயினி 3ஏ, ம.சுபப்பிரதா 3ஏ, இ.பிரஷாந்தி 3ஏ, பி.நிரோஷா 3ஏ, கி.தர்மிகா 3ஏ, ய.சலோமி 2ஏபி, சு.டிலக்ஷனா 2ஏபி, செ.சிந்துஜா 2ஏபி, சி.மதுசாந்தினி 2ஏபி, வ.ஜட்சாயினி ஏ2பி, தி.மிதுஷா ஏ2பி, கு.ஜசிந்தினி ஏ2பி.

**உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்**
கோ.தரண்யா 2ஏபி, யோ.சுஜிவதனி 2ஏபி, அ.செலின்மன்சிகா 2ஏபி, யோ.நொய்லின் ஏ2பி, க.சாரகா ஏபிசி.

**பொறியியற் தொழில் நுட்பவியல்**
இ.நிலானி ஏ2பி.

**கலைப் பிரிவு**
ச.பானுஜா 2ஏபி.

# கழிவுகள் குதமாக மாறியுள்ள சங்கானை மண்டிகைக் குளம்

## சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

மானிப்பாய், ஜன.16
சங்கானை மண்டிகைக் குளம் கழிவுகளின் குதமாக மாறிவிட்டது. அங்கிருந்து உருவாகும் கிருமிகள் நுளம்புகளால் சங்கானை நகரமே பாதிப்புக்குள்ளாகின்றது. வலி.மேற்குப் பிரதேச செயலர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு சங்கானை விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.
வலி.மேற்கு விவசாயிகள் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் இடம்பெற்றது. அதன்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.
அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:
சங்கானையின் மத்திய நகரப் பகுதியில் பிரதான (ஆர்.டி.ஏ) சங்கானை யாழ்.வீதி பிரதேச செயலகம், மீன் சந்தை, வர்த்தகக் கடைத்தொகுதி, கள்ளுத்தவறணை மற்றும் நெல் விவசாய நிலத்துக்கு மையமாக சங்கானை மண்டிகைக் குளம் உள்ளது.
நீண்ட பல வருடங்களாக சங்கானை மண்டிகைக் குளம் மீள் சீரமைப்பு இன்றி அழிவடைந்து கழிவுகளின் குதமாக மாறியுள்ளது.
தினமும் சங்கானை மண்டிகைக் குளத்துக்கு அண்மையில் உள்ள மதுக்கடையில் கொள்வனவு செய்யும் பியர் ரின்னை குளத்துக்கு அருகில் இருந்து குடித்துவிட்டு அங்கு வீசி வருகின்றனர். அருகில் உள்ள கள் தவறணை கழிவுகளும் குளத்தையும் வாய்க்காலையும் அசிங்கப்படுத்தியுள்ளன.
கடந்த ஒருமாதத்துக்கு முன்னர் சங்கானை மீன்சந்தை கழிவுகள் குளத்திலும் அயலில் உள்ள வாய்க்காலிலும் கொட்டப்பட்டன. இவற்றை விட சங்கானை நகர வெதுப்பகம் மற்றும் கடைகளில் இருந்து நேரடியாக குழாய் மூலம் மண்டிகைக் குளத்துக்கு சுத்திகரிக்கப்படாது கழிவுகள் அகற்றப்படுகின்றன.
இதனை மீள்சீரமைப்புச் செய்து சுற்றாடலுக்கு சுகாதாரமான குளமாக மாற்றவேண்டிய பொறுப்பு கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு உட்பட்ட தொல்புரம் கமநலகேந்திர நிலையபெரும்பாகஅலுவலருடைய பொறுப்பாகும். - என்று தெரிவிக்கப்பட்டது.
மண்டிகைக் குளத்தை இதுவரை அசுத்தப்படுத்தியவர்கள், நிறுவனங்கள் குளத்தைச் சுத்தமாக்க வேண்டும் எனப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் குறிப்பிட்டார்.
தொல்புரம் பெரும்பாக அலுவலர் மேற்படி அசுத்தமான சூழலுக்கு மாசான குளத்தைப் பார்வையிட்டதுடன் மீள்சீரமைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றுபிரதேசசெயலகவட்டாரங்கள் தெரிவித்தன. (ற-50)

# கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.16
வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தரம் 111 மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பங்கள்வடக்குபொதுச்சேவை ஆணைக்குழுவால்கோரப்பட்டுள்ளன.
இந்த பதவி நிரந்தரமுடையதும் ஓய்வூதியத்துக்கு உரியதும் என்பதுடன் கா.பொ.த(உ.தி) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் உயிரியல், இரசாயனவியல், விவசாயம், பௌதீகவியல், உயிரியல்தொழில் நுட்பம் மற்றும் விஞ்ஞானத்துக்கான தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும். விலங்கு பரிபாலனம் தொடர்பான பாட நெறியில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் ஒன்று பெற்றிருக்க வேண்டும்.
கா.பொ.த (உ.த) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் உயிரியல், இராசாயனவியல், விவசாயம், பௌதிகவியல், உயிரியல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றவர்கள் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பயிற்சித் தரத்துக்குள் உள்வாங்கப்படுவார்கள். அவர்கள் இரண்டு வருடகால விலங்கு பரிபாலனம் தொடர்பான டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவுடன் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தரம் 111 க்கு உள்வாங்கப்படுவார்கள்.
தற்போது உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறத் தவறியவர்கள் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் ஓய்வூதிய உரித்துடைய் அரச சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.
வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் 94 வெற்றி டங்கள் காணப்படுவதால் வடக்கு மாகணத்தைச் சேர்ந்த உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம். இது தொடர்பான மேலதிக விவரங்களை வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## எம்.ஜி.ஆர். பிறந்ததின நிகழ்வுகள்

தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 100ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பாசையூர் கடற்கரைப் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். திருவுருவச்சிலை அமைவித்தில் நடைபெறவுள்ளன. நிகழ்வு பாசையூர் எம்.ஜி.ஆர். கழகத்தின் ஏற்பாட்டில் கழக தலைவர் மரியதாஸ் தலைமையில் நாளை மாலை 3 மணிக்குஇடம்பெற உள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-23)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாவகச்சேரி வைத்தியசாலையில்*

# பாதுகாப்பு அறை இல்லாது பெண் ஊழியர்கள் சிரமம்

சாவகச்சேரி, ஜன.16

சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் ஊழியர்களுக்கு பாதுகாப்புடன் கூடிய அறை மற்றும் அலுமாரிகள் இல்லை. அவர்கள் அதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"வைத்தியசாலையில் பெண் ஊழியர்களுக்கான தனியான பாதுகாப்புடன் கூடிய அறை மற்றும் அலுமாரிகள் இல்லை. பாதுகாப்பற்ற அறைகளில் உடை மாற்ற வேண்டியுள்ளது. கைப் பைகளையும் அங்கு வைத்து விட்டே செல்ல வேண்டியுள்ளது. வைத்தியசாலையில் 89 பெண் சிற்றூழியர்கள் பணியாற்றுகின்றனர்"- என்று பெண் ஊழியர்கள் தெரிவித்தனர்.

"கடமையாற்றும் விடுதிகளில் உடைகளை மாற்றவும், பொருள்களை வைக்கவும் அனுமதியளித்திருந்தோம். மூன்று வாரங்களுக்கு முன்னர் பெண் சிற்றூழியர் தனது கைப் பையிலிருந்த பணமும்-அலைபேசியும் காணாமற்போயுள்ளன எனத் தெரிவித்தார். பொருள்கள் திருட்டுப்போன அறை பொது மக்கள் செல்லக்கூடிய இடம் இல்லையென்பதால் ஊழியர்கள் அங்கு தமது உடைமைகளை வைத்துள்ளனர்.

வைத்தியசாலையில் முன்னர் சேதமடைந்து தற்காலிகமாகப் சீரமைக்கப்பட்டு-பயன்படுத்தப்பட்டு வந்த இரு சிற்றூழியர் வதிவிட விடுதிகள் தற்போது பாவனையின்றிக் காணப்படுகின்றன. இவற்றைச் சீரமைத்து வழங்கினால் வைத்தியசாலையில் கடமையாற்றும் அனைத்துப் பெண் ஊழியர்களும் பயன்படுத்த வசதியாக இருக்கும். இந்த இரு கட்டடங்களையும் சீரமைக்க சுகாதார அமைச்சு அல்லது பிராந்திய சுகாதாரத் திணைக்களம் நிதி வழங்கினால் சீரமைத்து பெண் சிற்றூழியர்களின் பயன்பாட்டுக்கு வழங்க முடியும்- என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற-21,9)



யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் தைப் பொங்கல் விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடை பெற்றது. யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் ப.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாசார பேரவை உறுப்பினர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், செய்லக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)

# தண்ணீரூற்று வாராந்த சந்தைக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை

*கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜன. 16

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்தையும், பிரதேச சபையின் அறுவுறுத்தலையும் மீறி தண்ணீரூற்றில் வாராந்த சந்தை இயங்குகின்றது. அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட உற்பத்தியாளர்களின் நன்மை கருதி கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முள்ளியவளை ஐயன் கோயிலுக்கு அருகில் வாராந்த சந்தைக்கான இடம் ஒதுக்கப்பட்டு அதற்குரிய கட்டட வசதிகளும் கரைதுறைப் பற்று பிரதேச சபையால் செய்து கொடுக்கப்பட்டன.

வாராந்த சந்தைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சந்தை நடைபெறாது. கடந்த சில மாதங்களாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முள்ளியவளை நீராவிப்பிட்டியில் வாரந்த சந்தை நடைபெறுகின்றது. முதன்மைச் சாலையில் இருபக்கமும் கடைகளை போட்டு நடத்துவதால் வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதுடன், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அருகாமையில் சந்தை இருப்பதால் கழிவுகள் கொட்டப்பட்டு சூழல் மாசடைகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக வாராந்த சந்தையில் வரி அறவீடு செய்வதில்லை. அதைப் பயன்படுத்தி இங்கு வெளிமாவட்ட வியாபாரிகள், வியாபார நடவடிக்கைகளில் அதிகமாக ஈடுபடுகின்றனர் என்று கரை துறைப்பற்று பிரதேச சபை செயலாளர் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். நீராவிப்பிட்டியில் இயங்கிவரும் வாராந்த சந்தை நேற்று ஞாயிற்றுக்கிழமையில் இருந்து சந்தைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்க வேண்டும் என்று ஒருங்கிணைப் புக் குழு இணைத் தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றினர்.

"தீர்மானத்தை மீறி நீராவிப்பிட்டியில் இயங்கும் வாராந்த சந்தை தொடர்ந்தும் அங்கேயே இயங்க வேண்டும் என ஆர்ப்பாட்டங்கள், கையெழுத்து போராட்டங்கள் நடத்தப்பட்டன. நேற்று ஞாயிற்றுக்கிழமையும் சந்தை அதே இடத்தில் நடைபெற்றது.

முள்ளியவளை ஐயன்கோயில் பகுதியில் வாராந்த சந்தையை நடத்த வேண்டும் என்று எல்லா வியாபாரிகளுக்கும் தெரிவித்திருந்தோம். அதையும் மீறி அவர்கள் அதே இடத்தில் சந்தை நடத்துகின்றனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபை அடுத்த கட்ட நடவடிக்கையாக நீதிமன்றத்தை நாடவுள்ளது" -என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார், (ற-21,7)



# தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிட்டார் செல்வம்

மன்னார், ஜன.16

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டனர். பொங்கலை முன்னிட்டு அன்பளிப்புப் பொருள்களையும் அவர்கள் வழங்கினர்.

சிவன் அறக்கட்டளை நிறுவுநர் கணேஸ்வரன் வேலாயுதம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமைப்பாளர்களில் ஒருவருமான பொன்.காந்தன், முன்னாள் பிரதேச சபை உப தலைவர் சதீஸ் ஆகியோரும் நாடாளுமன்ற உறுப்பினருடன் சென்றிருந்தனர். (ற-56)

# கைக்குண்டு வைத்திருந்த தம்பதிகள் காட்டில் கைது!

வவுனியா, ஜன.16



வவுனியாவில் காட்டுப்பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பத்தலைவரும், அவரது மனைவியும் கைக் குண்டு, இடியன் துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் வவுனியா பாலமோட்டை, காட்டுப்பகுதியில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா-பாலமோட்டை காட்டுப்பகுதியில் ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் வசித்து வந்த கணவன், மனைவி கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் இடியன் துப்பாக்கி, ஜே.ஆர். ரக கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன. இருவரும் காட்டில் பல காலமாக வசிக்கின்றனர். இளம் குடும்பத்தலைவர் கசிப்பு உற்பத்தி செய்கின்றமை தொடர்பான முறைப்பாடுகள் மாங்குளம், ஓமந்தை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

# புதிய நிர்வாகம் தேவை என வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, ஜன.16

வவுனியா, கண்ணாட்டி கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பகுதி பொது மக்கள் நேற்றுக் காலை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தினர்.

"பல ஆண்டுகளாக நிர்வாகம் தெரிவு செய்யப்படவில்லை. தற்போதைய நிர்வாகத்தினர் கிராமத்தின் தேவைகளை அறிந்து கிராமத்தில் அபிவிருத்திகளைச் செய்யவில்லை. கிராம அலுவலர் தமக்கு வேண்டியவர்களை நிர்வாகத்தில் [illegible] செயற் படுகின்றார். [illegible] கூட்டப்படுகின்றது என்று தெரிவித்து விட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தைத் தெரிவு செய்கின்றார். இதை நாம் எதிர்க்கின்றோம். எமது கிராமத்திலுள்ளவர்களை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்" - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.



ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான், வட மாகாண சபை உறுப்பினர் செ. மயூரன் ஆகியோர்-மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். புதியநிர்வாகத்தைத் தெரிவு செய்வது தொடர்பில் வவுனியா மாவட்ட செயலாளருடன் இன்று கலந்துரையாடி தீர்வு பெற்றுத்தருகின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். கவனவீர்ப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை விடுவித்து உதவவேண்டும் ஜனாதிபதி மைத்திரி

## முல்லைத்தீவு, செல்வபுரம் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை


கோப்புப்படம்

முல்லைத்தீவு, ஜன. 16
முல்லைத்தீவு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு நல்லிணக்க வாரத்திலாவது தீர்வு கிட்ட வேண்டும். முல்லைத் தீவுக்கு வரும் ஜனாதிபதி இது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு, செல்வபுரம் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"முல்லைதத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் சொல்லி அடங்காதவை. பலரிடம் அவை குறித்துச் சுட்டிக்காட்டியும் இது வரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. செவ்வபுரம் கடற்றொழிலாளர்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

வட்டுவாகல் சந்தியில் இருந்து வட்டுவாகல் ஆற்றுக்குச் செல்வதற்கு நாம் பயன்படுத்தி வந்த வீதியை தற்போது இராணுவம் மறித்து முட்கம்பி வேலியை அடைத்துள்ளது. நாங்கள் இரண்டு கிலோ மீற்றருக்கு மேல் சுற்றியே கரைக்குச் சென்று தொழில் செய்ய வேண்டியுள்ளது.

வியாபாரிகளும் சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு மேல் மணற் தரையால் சைக்கிளை உருட்டிக் கொண்டே செல்ல வேண்டியுள்ளது. வட்டுவாகல் ஆற்றுக்கரையில் இராணுவத்தினரும், மறுகரையில் கடற்படையினரும் முகாம் அமைத்துள்ளனர். நல்லிணக்க வாரம் என நாடு முழுவதும் பல வேலைத் திட்டங்களை செய்து வரும் கூட்டு அரசு, எங்கள் மீதும் கருணை கொண்டு, செல்வபுரம் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி அந்த வீதியை விடுவிக்க வேண்டும்.

முல்லைத்தீவுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி வரும் ஜனாதிபதி இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்"- என்று அவர்கள் கேட்டுள்ளனர். (ந-7)

## உச்ச வறுமை கொண்டோருக்கு மருத்துவ உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.16
வடக்கு மாகாணத்தில் நோய் மற்றும் உச்ச வறுமையில் வாடும் 35 பேருக்கு கடந்த வெள்ளிக்கிழமை வடமாகாண தலைமைச் செயலாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

யாழ். நூலகத்தில் தலைமைச் செயலாளரின் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் 2 மில்லியன் ரூபா உதவிகள் வழங்கப்பட்டன.

உதவிகளை வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ. கே. சிவஞானம் மற்றும் ஆளுநரின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் வழங்கினர்.

மருத்துவ சிகிச்சை, மருத்துவ உதவிகள் பெறுவோரிலும், வாழ்வாதார உதவிகள் கோரிய குடும்பங்களிலும், மிகவும் வறுமையில் வாழ்பவர்களிலும் தேர்வு செய்யப்பட்ட 35 பேருக்கு அவை வழங்கப்பட்டன.

உதவிகளில் அதிகமானவை, புற்றுநோய் உள்ளிட்ட மருத்துவ வசதிக்காக பணமாகவும் உதவிகளுமாக வழங்கப்பட்டன. (ந-101)

## போதைப்பொருள் வழக்குகளில் ரூ. 58 லட்சம் தண்டம் அறவீடு

### தருமபுரம் பொலிஸ் பிரிவில்

கிளிநொச்சி, ஜன.16
கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் கடந்த வருடம் போதைப் பொருள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பாக 217 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுக்கு நீதிமன்றம் ஊடாக 58 இலட்சத்து 96ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தருமபுரம் பொலிஸ் நிலையம் கடந்த வருடம் மார்ச் மாதம் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டதன் பின்னர் 9 மாதங்களில் போதைப்பொருள் மற்றும் மணல், மரம் கடத்தல் தொடர்பாக 217 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அதிகளவில் கசிப்பு தொடர்பாக 94 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 94 வழக்குகளில் 2ஆயிரத்து 215 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. 101 பேர் கைது செய்யப்பட்டனர்.

கோடா தொடர்பாக 63 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 62ஆயிரத்து 500 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது. கஞ்சா தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 118 கிலோ 741 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. ஒரு வழக்கில் மாத்திரம் 118 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

அரச சாராயம் விற்பனை செய்தமை தொடர்பாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 4 லீற்றர் அரச சாராயம் மீட்கப்பட்டது. மணல் கடத்தல் தொடர்பாக 47 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 93 கியூப் மணல் கைப்பற்றப்பட்டது. மரம் கடத்தியமை தொடர்பாக 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

மொத்தமாக 217 வழக்குகள் 9 மாதங்களில் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டன. நீதிமன்றம் 58 லட்சத்து 96 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிட்டது.

தருமபுரம் பொலிஸ் பிரிவில் அதிகளவாக கசிப்பு கோடா தொடர்பாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தர்மபுரம் பொலிஸ் பிரிவாக இருந்தபோது பெறப்பட்ட கசிப்பு கோடா வழக்குகளைவிட பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்ட பின்னரான வழக்குகள் குறைந்துள்ளன- என்றார். (ந-21,6)

இலங்கை மத்திய வங்கியிலிருந்து ஓர் செய்தி

எந்த ஒரு வங்கியினதும் ATM இனைப் பயன்படுத்துங்கள்



இதனை
எந்த ஒரு வங்கியிலிருந்தும்
காசினை மீளப்பெற அல்லது
நிலுவை விசாரணைகளுக்கு
பயன்படுத்துங்கள்

அனைத்து ATM பொறிகளும்
lanka pay
ஊடாக இணைக்கப்படுகின்றன.

பொதுவான ATM ஆழி (CAS)

- 2013இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 3700 + ATM பொறிகளுடன் நாடளாவிய 22 உறுப்பினர் வங்கிகள்
- 59.6 மில்லியன் கொடுக்கல்வாங்கல்கள்; 2016 ஒத்தோபர் வரை ரூ.303 பில்லியன்

உயர்ந்தபட்ச CAS கட்டணம்: காசு மீளப்பெறுகை - ரூ.30.00 நிலுவை விசாரணை - ரூ.7.50

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

பொதுவான ATM ஆழி இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது.

தொலைபேசி: 011 2398596 / தொலைநகல்: 011 2387009 / மின்னஞ்சல்: pad@cbsl.lk

# வடக்கு மாகாண சபையை ஊடக மையமாக்க முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் சிவமோகன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன.16
வன்னியைப் பிராந்தியத்தால் பிரதிநிதித்துவப்படுத்தும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் மாகாண சபையை ஊடக மையமாகப் பாவிக்க முயல்கின்றனர். அர்த்தமற்ற, பொருத்தமற்ற கருத்துக்களை வெளியிட்டு, ஊடகத்தில் இடம்பிடிக்க அவர்கள் முயல் கின்றனர். தமது வங்குரோத்து அரசியலை நடத்த அவர்கள் முன் நிற்கின்றனர். இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவ மோகன் தெரிவித்தார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

காந்தி சிலை முல்லை நகரில் அமைக்கப்பட்டபோது காந்தி என்ன செய்தார், முல்லைத்தீவுக்கு என ஒரு அடிப்படையற்ற கருத்தை தெரிவித்திருந்த ஒருவர், அதன் மூலம் மகாத்மா காந்தியின் உலகம் ஏற்றுக்கொண்ட அகிம்சை என்ற கருத்தை கேள்விக்குறியாக்கியுள்ளார். காந்தி சிலை உடைப்புக்கு உந்துதலாக இருந்து வன்னி மண்ணின் கௌரவத்தை யும் நிர்மூலமாக்கியுள்ளனர். மகாத்மா காந்தியின் அகிம்சை எனும் கொள்கையை நேசிக் கும் இந்திய மற்றும் இலங்கை தமிழர்கள் பல லட்சம் பேர் வாழும் இந்த மண்ணில் ஒரு சில புல்லுருவிகள் தமது அறிவீனமான கொள்கை களை இங்கு புகுத்தநினைப்பது அனைத்து மக்களின் மனங்களையும் புண்படுத் தும் என்பதை இவர்கள் அறியாது இருப்பது கவலைக்குரியதே.

பண்டார வன்னியனுக்கு ஒரு சிலை அமைத்து மல்லாவி நகரமே ஒன்றுசேர்ந்து கௌரவமளித்த நேரத்தில் 7 1/2 அடி உயரத்துக்கு அமைக்கப்பட்ட சிலையை தமது கமரா தந்திரம் மூலம் சிறுப்பித்து தமது வங்குரோத்து அரசியல் செய்ய முற்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் அரசியல் செய்யும் இவர்கள் வெளியிறங்கி மக்களுக்காக சேவைசெய்ய முன்வரவேண்டும். மக்களுக்கான சேவை ஊடக வெளியீடு மட்டுமே என செயற்படுவதை அவர்கள் தவிர்க்க வேண்டும்.

அனுமதியற்ற கொப்பேகடுவவின் சிலை வவுனியா நகரில் நிமிர்ந்து நிற்கும் போதும், முல்லை நகர வீதிகளில் இராணுவத்தினரின் பெயர் சூட்டப்பட்ட நிலையிலும் இராணுவ அடையாளங்கள் வீதியில் உள்ள நிலையிலும், வட மாகாண சபையில் தங்களது கரங்களை உயர்த்த முடியாதவர்கள் இவர்கள்.

2016 பங்குனி மாதம் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதிக்கு வந்தபோது மௌனமாக இருந்தவர்கள் இன்று கோடரி தூக்கி அலைகிறார்கள். ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்ட அறிக்கைகள் புரிவின்மை இருப்பின், பக்கத்தில் இருப்பவர்களையாவது கேட்கலாம். அதையும் விடுத்து முடிவுக்கு வந்தவிடயத்தை பொய்களை உரக்க கூறி அசிங்க அரசியல் செய்வதை எப்படி ஏற்க முடியும். அனைத்துக்கும் மக்கள் தீர்ப்பு மீண்டும் வரும் போது பதில்களாக அமையும்-என்றுள்ளது. (ந-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியை எதிர்கொள்ள ஜனாதிபதி செயலணி

கொழும்பு, ஜன.16
வறட்சியால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்கு ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரிலேயே இந்த செயலணி அமைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.
நாட்டில் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியை அடுத்து, வறட்சி நிலைமைகளுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது, அதற்காக மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் என்ன என்பதை ஆராய்வதற்காக ஜனாதிபதி தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் சிறப்புக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.
பாதிக்கப்படும் மக்களுக்கு குடிதண்ணீர் பெற்றுக்கொடுத்தல், சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல், உணவு உள்ளிட்ட ஏனைய தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், மின்சார உற்பத்தி தொடர்பான சவால்களை வெற்றிகொள்ளுதல் போன்றவை தொடர்பாக அதில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.
தேவையான தண்ணீர் பவுஸர்கள், நீர்த் தாங்கிகளை விநியோகிப்பதில் வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்கள் மற்றும் பன்னாட்டு தொண்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தேவையாயின் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஊடாக தண்ணீர் பவுஸர்களை கொள்வனவு செய்யவும் ஆலோசனை வழங்கியுள்ளார்.
வறட்சி நிலவும் பிரதேசங்களை இனங்கண்டு, அந்தப் பிரதேசங்களின் பூகோள நிலைமைகளையும் கண்டறிய வேண்டும் என்று ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக நீர் ஊற்றுக்களை கண்டறியவும், குழாய்க் கிணறுகள், நீர் பம்பிகளை புதுப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும் நீர் வழங்கல் சபைக்கு பணித்தார்.
வறட்சியால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான உணவுகளை விநியோகிப்பதற்கு உதவ உலக உணவு நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது. வறட்சி நிவாரணங்களை விநியோகிக்க முறையான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.
நீர் மின்சார உற்பத்தி தற்போது படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. அதற்கு மாற்றீடாக அனல் மின் உற்பத்தி மற்றும் சூரிய சக்தி ஊடாக மின் உற்பத்தி முறைமைக்கான புதிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
வறட்சி நிலைமையுடன் ஏற்படக்கூடிய சவால்களை குறைப்பதற்கு நீர் மற்றும் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து மக்களுக்கு அறிவூட்டவேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது தொடர்பில் ஊடகங்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.
கலந்துரையாடலில் அமைச்சர்களான அநுர பிரியதர்ன யாப்பா, ரவி கருணாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, ரஞ்சித் சியாம்பலாபிட்டிய, துமிந்த திசாநாயக்க, பீ. ஹரிசன், பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற)

## சிலருக்கு மட்டுமே அரசு தண்டனை வழங்குகிறது

### குற்றஞ்சாட்டுகின்றார் டலஸ்



கொழும்பு, ஜன.16
அரசு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் தண்டனை வழங்கின்றது.
இவ்வாறு மகிந்த ஆதரவு பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும குற்றஞ்சாட்டினார்.
அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற குழப்ப நிலையின் போது கைது செய்யப்பட்டு, தங்கல்ல சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ளவர்களைச் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது நல்லாட்சி அரசு இல்லை. கொடுங்கோல் ஆட்சியே தற்போது நடைபெறுகின்றது. தற்போதைய ஆட்சியில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் மாத்திரமே தண்டிக்கப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## ரவியின் கருத்துக்கு விஜேயதாஸ எதிர்ப்பு

கொழும்பு, ஜன.16
மூன்று லட்சம் அமெரிக்க டொலருக்கு அதிகமான நிதியை முதலீடு செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஐந்து வருடங்களுக்கு தங்குமிட நுழைவிசைவு வழங்கப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்துள்ள அறிவிப்புக்கு, நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.
"மூன்று லட்சம் அமெரிக்க டொலர் என்ற குறைந்தளவான முதலீட்டுக்கு தங்குமிட நுழைவிசைவு வழங்குவது எவ்வாறு? இவ்வாறான செயற்பாடுகள், இலங்கையில் உள்ள மத்தியதர வர்த்தகர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும்.
இது தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டால் எதிர்ப்புத் தெரிவிப்பேன். பல அமைச்சர்களும் இந்த யோசனைக்கு எதிர்ப்பு வெளியிடுவார்கள் என நம்புகின்றேன்" என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். (ற)

## அம்பாந்தோட்டை தாக்குதலுக்கு அரசே முழுப்பொறுப்பு

### றுகுணு பிக்குகள் முன்னணி கண்டனம்

கொழும்பு, ஜன.16
கொழும்பிலிருந்து அழைத்து வந்த குண்டர்கள் குழுவால் பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அதனை தடுக்காமல் பொலிஸ்மா அதிபர் உட்பட கூட்டு அரசின் தலைவர்கள் வேடிக்கை பார்த்தனர்.
இவ்வாறு றுகுணு பிக்குகள் முன்னணி கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.
பிக்குகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் மற்றும் அதனைத் தடுக்க முயற்சிக்காத அரசு மற்றும் அதிகாரிகள் மிக விரைவில் அதன் பிரதிபயனை அனுபவிப்பார்கள் என்றும் றுகுணு பிக்குகள் முன்னணி சாபமிட்டுள்ளது.
அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ச துறைமுகத்தை அண்மித்த பகுதியில் சீனா முதலீடுகளை மேற்கொள்ள வலயமொன்றை அமைப்பதற்கான முதன்மை நிகழ்வு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 7ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் நடைபெற்றது.
முதலீடுகளை செய்ய சீனாவுக்கு காணிகளை வழங்க கூட்டு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிராக ஒன்று திரண்ட அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்ட பிக்குகள் கடந்த 7ஆம் திகதி பிரதேச மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.
ஆர்ப்பாட்டத்தின் போது கலகத்தை ஏற்படுத்தும் வகையிலும், கற்கள் பொல்லுகளால் தாக்குதல் நடத்த முயற்சித்தவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.
இந்த நிலையில் குறித்த சம்பவத்தைக் கண்டிக்கும் நோக்கில் றுகுணு பிக்குகள் முன்னணி மாத்தறையில் செய்தியாளர் சந்திப்பை நடத்தியது. அதில் கருத்துத் தெரிவித்த றுகுணு பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் உமாரே கசப்ப தேரர், அரசிலுள்ள உயர்பீட அனுமதியின்றி இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயற்பாடு அரங்கேற்றப்பட்டிருக்காது -என்றார்.
அவர் தெரிவித்ததாவது:
அம்பாந்தோட்டை மிரிச்சவில பகுதியில் கசப்பான ஒரு அனுபவத்துக்கு நாங்கள் முகங்கொடுத்தோம். சத்தியக்கிரகம் ஒன்றை நடத்தி எமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதற்காகவே நாங்கள் அங்கு சென்றோம். அதனை செய்ய எம்மால் முடியாமற்போனது. வீதியில் அமர்ந்து கடவுளிடம் மன்றாடி, மாகம்புர காணியை சீனாவுக்கு விற்பனை செய்வதை தடுப்பதற் கான வழிபாடுகளைச் செய்யவுமே நாங்கள் சென்றிருந்தோம். எம்மிடையே எந்தக் குழப் பமும் இருக்கவில்லை.
எமக்கு எதிரே பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். எமது செயற்பாட்டை ஆரம்பித்த போதே பெரிய கல் எனக்கெதிராக வந்தது. அதன் பின்னர் கற்களும், பொல்லுகளும் பயன்படுத்தி எதிர்திசையிலிருந்தவர்கள் தாக்குவதற்கு ஆரம்பித்தனர். பிக்குகள் பலர் கீழே விழுந்தனர். சீருடைகள் கிழிந்தன, காயமடைந்தனர். பிக்கு சீருடைகளைக் கழற்றுங்கள் என்ற கூச்சலும் எதிர்திசையிலிருந்து கேட்டது. பொலிஸ்மா அதிபர் அங்கிருந்தார். அவர் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.
பொலிஸார் பிக்குகளின் வாய்களையே அடைத்தனர். கண்ணீர்ப் புகைப் பிரயோகமும், நீர்த்தாரை தாக்குதலும் நடத்தப்பட்டது. உயர் பீடத்திலிருந்து அனுமதி கிடைத்திருக்காவிட்டால் இவ்வாறு தாக்குதல் நடந்திருக்காது. அரசின் இந்த முயற்சியை தோற்கடிப்போம். தாக்குதல்கள், பிக்குகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் என்பவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனைச் செய்தவர்களுக்கு மிக விரைவில் பிரதிபயன்கள் கிடைக்கும். நிராயுதமாக சென்ற அப்பாவி பிக்குகள் மீது கொழும்பிலிருந்து அழைத்துவரப்பட்ட காடையர்கள் காட்டு மிராண்டித் தனத் தாக்குதலை நடத்தியபோது அரசு பொறுப்புணர்வோடு செயற்படத் தவறியது. இதற்கான பொறுப்பை அரசு பொலிஸ்மா அதிபர் ஆகியோர் ஏற்க வேண்டும்' – என்றார். (ற-ஜ)

## தரகர்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியான பொங்கல்

### இப்படி வாழ்த்துகின்றார் மகிந்த

கொழும்பு, ஜன. 16
கூட்டு அரசின் இந்த வருடத் தைப்பொங்கல் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் நடுவில் இருக்கும் தரகர்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியான பொங்கலாக அமைந்திருக்கிறது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
தைத்திருநாளை முன்னிட்டு விடுத்திருந்த வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"பழையன கழிதலும், புதியன புகுதலும்", என்கிற நோக்கத்தில், வடக்கு- கிழக்கில் நாம் தொடங்கிய அபிவிருத்திகளை நிறுத்தி, விவசாயத்துக்கு எவ்வித பயனும் தராத இந்த அரசை அகற்றி, 'தைபிறந்தால் வழிபிறக்கும்', என்கிற முன்னோர் கூற்றுப்படி எம்நாட்டு மக்கள் அனைவரது வாழ்விலும் ஒளிபிறக்கும் ஆண்டாக இவ் ஆண்டு அமையும் என்பதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம். புதிய சிந்தனைகளோடும், புதிய முயற்சிகளோடும், பிறந்துள்ள புத்தாண்டில் நம்பிக்கையோடு அனைவரது வாழ்விலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கி, ஆனந்தம் தங்கிட இந்தப் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம். இந்த விவசாய நாட்டில்,



அரசு விவசாயத்துக்காக நாம் வழங்கிய மானியங்களை நிறுத்தியதோடு நில்லாது, நெல் விலையைக் குறைத்து விவசாயிகளுக்கும், அரிசிவிலையை வரலாறு காணாத விலைக்கு ஏற்றி, மக்களுக்கும் பெரும் சுமையை தந்து இருக்கிறது. இந்தப் பொங்கல் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் நடுவில் இருக்கும் தரகுக்காரர்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியான பொங்கல்.
எவ்வாறாயினும், புதிய திட்டங்களோடும், சிந்தனைகளோடும் இவ்வருடம் சிறந்தவருடமாக அமையும் என்பதில் எள்ளளவும் கூட சந்தேகம் வேண் டாம். சர்க்கரைப் பொங்கலை போல அனைவரின் வாழ்விலும் சந்தோசமும், அமைதியும் இனிக்கட்டும்–என்றார். (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வைபவ செலவைக் குறைத்து ஏழைகளுக்கு உதவுங்கள்

*ஜனாதிபதி அறிவுரை*

கொழும்பு,ஜன.16
திருமண வைபவங்களுக்காகச் சிலர் செலவிடும் செலவினங்களைப் பார்த்து அதிர்ச்சியடைகிறேன். இவர்கள் திருமண வைபவங்களுக்கு குறைந்த அளவில்செலவிட்டு, மிகுதியை ஏழைகளுக்கு வழங்கினால் அந்த உதவி சிறந்ததாக அமையும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். 'அதிகாரபூர்வ பயணம்' எனும் ஜனாதிபதியின் மக்கள் சேவை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு காலி ஸ்ரீதம்ம வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணா திலக்க உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

அரசின் அனைத்து சேவைகளையும் கிராமிய மக்களுக்கு வழங்கும் கொள்கை அடிப்படையில் ஜனாதிபதியின் ஆலோசனையின் படி 'அதிகாரபூர்வ பயணம்' திட்டம் பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படுகின்றன. (ஐ)

# சலாவ வெடிப்பு சம்பவத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

*ரூ. 1,329 மில்லியன் நிதி ஒதுக்கீடு*

கொழும்பு,ஜன.16
சலாவ ஆயுத களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தின்போது பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானவர்களுக்கு கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி இழப்பீடு வழங்கப்பட்டது. இதற்காக 1,329 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டதாக அரசு தெரிவித்தது.

வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீத மாணவர்களுக்கு1,041 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டதாக இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எஸ்.எஸ்.மியன வல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சம்பவத்தின் சேத விவரங்களை கணக்கிடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே, ஏனைய வர்களுக்கு இழப்பீடு வழங்கமுடியவில்லை. அவற்றை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆயுதக் களஞ்சிய வெடிப்புச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களையும், குடிமனைகளையும் மீளமைக்கும் பணிகளும் இந்த நிதி மூலம் இடம்பெற்று வருகின்றன." என்று இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஐ)



# பயணிகளின் நெரிசலை கட்டுப்படுத்த ரேல்பஸ் சேவை

கொழும்பு,ஜன.16
பயணிகளின் நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு பெரதெனிய மற்றும் கம்பளை ரயில் நிலையங்களுக்கு இடையே ரேல்பஸ் சேவை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி, காலை 9.23 மணிக்கு பெரதெனிய ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் ரேல்பஸ் சேவை காலை 9.51 மணிக்கு கம்பளைப் ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

பிற்பகல் 1.20 மணிக்கு பெரதெனியவிலிருந்து புறப்படும் ரேல்பஸ் சேவை பிற்பகல் 1.48 மணிக்கு கம்பளை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

அதேவேளை, முற்பகல் 10 மணிக்கு கம்பளையிலிருந்து புறப்படும் ரேல்பஸ் சேவை 10.55 மணிக்கு பெரதெனியவைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் 2.10 மணிக்கு கம்பளையில் சேவையை ஆரம்பிக்கும் ரேல்பஸ் 2.44 மணிக்கு பேராதனையைச் சென்றடையும்.

அதேபோன்று சனநெரிசல் மிக்க பிரதேசங்களில் பயணிகளின் நலன் கருதி குறித்த ரேல்பஸ் சேவையை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்து மற்றும் பொது வான்போக்குவரத்துச் சேவை அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வாவின் ஆலோசனைக்கு அமைய இந்தச் சேவை முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில், திருகோணமலை, கல்ஓயா, மட்டக்களப்பு, சிலாபம் - புத்தளம், அநுராதபுரம் - மதவாச்சி, குருநாகலை, மஹவ, பேராதனை, கண்டி, கொஸ்கம ஆகிய நகரங்களுக்கு இடையிலும் குறித்த சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

# வறட்சியான காலநிலை தொடரும்

கொழும்பு,ஜன.16
நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரவு மற்றும் அதிகாலையில் நிலவும் கடும் குளிரான காலநிலையும் தொடரும். மலையகத்தில் அவ்வப்போது கடும் காற்று வீசக் கூடும். நுவரெலியா மாவட்டத்தில் கடும் பனிப்பொழிவு காணப்படும் என்றும் அத்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# அரச காணிப் பிணக்குகள்; இன்று இடம்பெயர் சேவை

*மட்டக்களப்பு, ஜன.16*
மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று மற்றும் ஏறாவூர் நகரம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள அரச காணிகள் தொடர்பான பிணக்குகளைத் தீர்க்கும் சிறப்பு இடம்பெயர் சேவை இன்று காலை கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நசீர் அஹமட் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

போர் மற்றும் அதற்குப் பின்னரான அசாதாரண சூழ் நிலைகளின் போது இந்த இரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வசிக்கும் மக்கள், நீண்டகாலமாக முகம்கொடுத்து வரும் காணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு இதன்போது தீர்வு காணப்படும் என்று முதலமைச்சர் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-ய-46)

# சமுர்த்திப் பயனாளர்களுக்கு இலவச மின்சார விநியோகம்

**சமூக வலுவூட்டல் அமைச்சுத் திட்டம்**


கொழும்பு,ஜன.16
எதிர்காலத்தில் சமுர்த்திப் பயனாளர்களுக்கு சூரியசக்தி மூலம் இலவசமாக மின்சாரம் வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

ஹிங்குராங்கொட, சமுர்த்தி மாதிரி கிராமத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் மின் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு பதிலீடாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

இலங்கை மின்சார சபை மற்றும் சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சும் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

அதற்கமைவாக அனைத்து வீடுகளுக்கும் சூரியசக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். (ஐ)



# நிந்தவூர் அனல்மின் நிலைய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

அம்பாறை, ஜன.16
அம்பாறை - நிந்தவூரில் அமைந்துள்ள அனல்மின் நிலையப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று சுகாதாரப் பிரதியமைச்சர் பைசால் காசிம் தெரிவித்தார்.

நிந்தவூர் - அட்டப் பள்ளத்துக்கு நேற்றுமுன்தினம் சென்ற அவர் மக்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்த மின்நிலையத்தின் பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிகாரிகளுடனும், மின்நிலைய உரிமையாளருடனும் பேச்சு நடத்தியுள்ளதாகவும், இந்த விடயம் சம்பந்தமாக எதிர்காலத்தில் முடிவொன்று கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தார். (ஐ-ய-48)

# அரச சொத்துக்களை முறைகேடு செய்வோருக்கு சட்ட நடவடிக்கை அவசியம்

கொழும்பு,ஜன.16
அரச சொத்துக்களை அவதூறாகப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக, தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலின் டி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மாத்தறை, நுபே பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே நலின் டி ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச அரசியல் பழிவாங்கலுக்காகக் கைது செய்யப்பட்டார் எனக் கூறும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

நாட்டுக்காகச் சேவையாற்றிய பின்னர் அவர் சிறை சென்றாலும் பரவாயில்லை என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ளன.

அவர் நாட்டுக்காக உண்மையாக சேவையாற்றவில்லை. தனது குடும்பத்துக்காகவே கடமையாற்றிவிட்டு வீரவன்ஸ சிறைச்சாலைக்குச் சென்றார். எவ்வாறாயினும். ஊடகங்களுக்கு முன்பாக விரவன்ஸவுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் உறவினர்கள், அவர் ஆளும் கட்சியில் இருந்தபோது அரச சொத்துக்களை அனுபவித்து சுகபோகமாக வாழ்ந்தவர்கள். உண்மையாக அரச காணிகள், வாகனங்களை முறையற்றவகையில் பயன்படுத்தியவர்களுக்கு ஆளும் கட்சி அல்லது ஐக்கிய தேசியக் கட்சி என்று பாரபட்சம் பாராது தண்டனை வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறட்சியால் குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு

வவுனியா, ஜன.16

வறட்சியால் வவுனியா மாவட்டத்தின் பல இடங்களில் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

செட்டிகுளம், பாவற்குளம் 6ஆம் யுனிட்டை அண்டிய பகுதியில் உள்ள பொதுக் கிணற்றில் நீர் வற்றியுள்ளது. அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

"இந்தக் கிணற்றிலேயே நாம் குடிதண்ணீர் பெற்றோம். இப்போது அது வற்றிவிட்டது.

கிணற்றை ஆழப்படுத்தித் தர வேண்டும். எமது பகுதிக்குக் குழாய்க் கிணறு ஒன்றையும் பெற்றுத் தர வேண்டும்" என்று அந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கோரிக்கை ஒன்றை விடுத்தனர்.

"கிணற்றை ஆழப்படுத்தவும் மற்றும் குழாய்க் கிணறு அமைப்பது தொடர்பில் இடர் முகாமைத்துவப்பிரிவுடனும். மாவட்ட திட்டப் பணிப்பாளருடனும் கலந்துரையாடி- விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(ற-21)

## பேருந்து நிலைய திறப்பு விழாவை புறக்கணிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.16

வவுனியாவில் நாளை நடைபெறவுள்ள பேருந்து நிலையத் திறப்பு விழா நிகழ்வை மக்கள் பிரதிநிதிகள், புறக்கணிக்கவேண்டும் என்று வடமாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் கோரியுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

"வவுனியாவில் கொழும்பு அமைச்சர்களால் திறக்கப்படவுள்ள புதிய மையப் பேருந்து நிலையத் திறப்பு விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். வடமாகாண முதலமைச்சர் வெளிநாடு சென்றுள்ள நிலையில், அவரையும் புறக்கணித்து இந்தப்பேருந்துநிலையம்திறக்கப்பட உள்ளது. நாம் அனைவரும்ஒன்றிணைந்து நாளை திறந்துவைக்கப்படவுள்ள பேருந்து நிலையத்தின் திறப்பு விழாவை புறக்கணிக்கவேண்டும்-என்றுஅந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-21)

# அரச வைத்தியசாலையில் பரிசோதனைக் கருவிகள் இன்மையால் பெரும் சிரமம்

தென்மராட்சி, ஜன. 16

தனியார் ஆய்வுகூடங்களில் எந்தவொரு பரிசோதனைகளும் செய்யக்கூடாது என கொழும்பு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. ஆயினும் அரச வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்களுக்கு உரிய பரிசோதனைக் கருவிகள் இன்னமும் வந்துசேரவில்லை. அதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகள் டெங்கு ஆபத்து பிரிவுகளாக அறிவிக்கப்பட்டன. அந்தப் பகுதிகளில் உள்ள ஆதார வைத்தியசாலைகளில் சாதாரண வைரஸ் தொற்று பரிசோதனைக் கருவிகள் உள்ளன. டெங்கு பரிசோதனைக்கான தனியான கருவி இன்னமும் யாழ்.போதனா வைத்தியசாலைதவிர்ந்த இடங்களுக்கு வழங்கப்படவில்லை.

வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் உள்ள வைரஸ் தொற்றுக் கருவிகள் மூலம் டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளும் போது அந்த அறிக்கையில் டெங்கு உள்ளது எனச் சந்தேகத்துடன் குறிப்பிடப்படுகின்றது.

அந்த அடிப்படையில் மருத்துவ அதிகாரிகள், வைத்தியசாலை டெங்கு சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்குகின்றனர். காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வரும் அனைத்து நோயாளர்களும் ஆய்வுகூடத்தில் பரிசோதனை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் உள்ள வைரஸ் பரிசோதனை கருவிகளில் பரிசோதனை மேற்கொள்ளும்போது குருதிச் சிறுதட்டுக்கள் குறைவடைதல் மற்றும் வெண்குருதிக்கலங்கள் குறைவடைதல் போன்றவற்றைக் கொண்டே டெங்கு வைரஸ் தொற்று தீர்மானிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் மத்தியில் மழை மற்றும் பனி காலங்களில் பரவும் வைரஸ் தொற்றுக்கள்கூட பரிசோதனை மூலம் டெங்கு வைரஸ் என அடையாளப்படுத்தப்பட்டு அவர்களை விடுதியில் அனுமதித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் சேவைகளால் ஏற்படும் செலவைவிட டெங்கு நோயை கண்டறியக்கூடிய பிரத்தியேக பரிசோதனையை அனைத்து காய்ச்சல் நோயாளர்களுக்கும் பிரயோகிப்பதில் ஏற்படும் செலவு குறைவாகும்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோய் அதிகமென கடந்த வருடமே சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு டெங்குத் தொற்றை அறிவதற்கான பிரத்தியேக பரிசோதனைக் கருவிகளை வழங்க கொழும்பு சுகாதார அமைச்சும், மாகாண சுகாதார அமைச்சும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது.

"கடந்த வருடமும் இந்த வருடமும் டெங்குத் தொற்றுக்குள்ளான நோயாளர்களை விடுதியில் தங்க வைத்து சிகிச்சை வழங்கி வருகின்றோம். டெங்கு பரிசோதனைக்கென தனியான பரிசோதனைக் கருவி இல்லாத நிலையிலும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வரும் நோயாளர்களுக்கு சாதாரண தொற்றுப் பரிசோதனைக் கருவி மூலம் பரிசோதனைகளை மேற்கொண்டு கிடைக்கும் அறிக்கையின் பிரகாரம் சிகிச்சை வழங்கிவருகின்றோம்" என்று சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(ற-21,9)



## கட்டடம், சிலை திறப்பு நிகழ்வு

மன்னார், ஜன.16

மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாப்பாமோட்டை, றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன்பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக்கட்டத்தொகுதியும், பாடசாலைச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட 'அன்பான ஆசானும் மாணவர்களும்' என்னும் சிலையும் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டன. நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு அமைச்சர் பா. டெனீஸ்வரன் கலந்து கொண்டார்.

'அன்பான ஆசானும் மாணவர்களும்' என்ற தொனிப்பொருளில் கலை நயத்துடன் பாடசாலையில் அமைக்கப்பட்ட சிலையை உருவாக்கிய பாடசாலையின் ஆசிரியருக்கு அமைச்சர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நிகழ்வில் பங்குத்தந்தை, இந்துக் குருக்கள், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-21)



## வன்னி மாணவர் கல்விக்கு 'தாயக விருட்சம்' அமைப்பு

முல்லைத்தீவு, ஜன.16

வன்னியில் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளுக்காக தைப்பொங்கல் தினத்தன்று 'தாயக விருட்சம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு சுவிஸ் நாட்டைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்களால் உருவாக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது. அமைப்பின் இலச்சினையை மாவீரன் பசிலனின் தாயார் நல்லையா தங்கம்மா மற்றும் அமைப்பின் பொறுப்பாளர் செல்வரட்ணம் ஜீவாவின் தாயார் செல்வரட்ணம் செல்லம்மா ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தனர். 30 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதியும் அவர்களின் பெற்றோர்களுக்கு தென்னம் பிள்ளைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் ஓய்வு நிலை கோட்டக் கல்வி அதிகாரி க. மார்க்கண்டு, ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.உதயசங்கர் மற்றும் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் 'நாளை முல்லைத்தீவு ' அமைப்பின் தலைவர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியொன்று புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. போட்டியில் 24 அணிகள் மோதவுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (ற-433)




தலைமன்னார் மேற்கு புனித லோறன்சியார் தேவாலயத்தில் நேற்றுமுன் தினம் பண்பாட்டுப் பொங்கல் விழா நடைபெற்றது. அதில் இளைஞர், யுவதிகள் பொங்கலைச் சிறப்பிக்கும் வகையில் கோலமிட்டனர். (ற)

# சவாரி மாட்டைக் கடத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது

கிளிநொச்சி, ஜன.16

6 லட்சம் ரூபா பெறுமதியான சவாரி மாடு ஒன்றை கடத்தி, அதனை இறைச்சியாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

"கிளிநொச்சி-தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்தனாறு என்னும் இடத்தில் வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த சவாரி மாடு கடந்த வியாழக்கிழமை காணாமற் போனது. அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் 6 லட்சம் ரூபா பெறுமதியான சவாரி மாடு இறைச்சி ஆக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது. சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் விசுவமடு மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள இறுவட்டு விற்பனை நிலையத்துக்கு அருகே நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றைத் திருட முற்பட்டவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். விசாரணைகளின்போது அந்த நபரும் சவாரி மாடு கடத்தலில் தொடர்புடையவர் என்று தெரிய வந்தது.

கிளிநொச்சி மாவட்ட சோகோ பிரிவினர் அழைக்கப்பட்டு மாடு அழிக்கப்பட்ட இடம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர். மாடுகள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட அதிகளவான மாடுகளின் எச்சங்கள் அண்மையில் கிளிநொச்சி, உருத்திரபுரம்-சிவநகர்ப் பகுதியில் மீட்கப்பட்டன"- என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

(ற-21,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீக்காயமடைந்த சிறுமி சாவு

கொழும்பு,ஜன.16
தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் கண்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட, கந்தகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நிபுணி ஹன் சமாலி (வயது - 4) என்ற சிறுமி சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்.

தனது வீட்டிலுள்ள அடுப்புக்கு அருகிலிருந்து குளிர் காய்ந்து கொண்டிருந்த போது, சிறுமியின் ஆடையில் தீப்பற்றியுள்ளது. உடல் முழுவதும்தீக்காயங்களுக்கு சிறுமி உள்ளான நிலையில் கந்தகெட்டிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மஹியங்கனை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காககண்டிவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிறுமி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## 15 ஏக்கர் காணி தீக்கிரை

கொழும்பு,ஜன.16
ஹாலிஎல, உணகொல்லவத்த பிரதேசத்தில் இறப்பர் தோட்டமொன்றில் ஏற்பட்ட தீ பரவலில் 15 ஏக்கர் காணி தீக்கிரையாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 7 மணித்தியாலங்கள் வரை நீடித்த இந்தத் தீப்பரவலை, ஹாலி எல பொலிஸார், பிரதேசவாசிகள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக ஹாலிஎல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# வறட்சியால் 20 ஆயிரம் விவசாய குடும்பங்கள் பாதிப்பு

### மட்டக்களப்பு மாவட்டத்தில்



மட்டக்களப்பு, ஜன.16
மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சியால் 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த முறை பருவமழை பொய்த்துப் போனதால் மாவட்டத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

வறட்சியின் காரணமாக 20 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் உட்பட ஒட்டுமொத்தமாக 70 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு சுத்தமான குடிதண்ணீரை விநியோகிப்பது தொடர்பாகவும், வறட்சியான காலநிலை மேலும் நீடிக்குமானால் அதற்குத் தாக்குப் பிடிக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன் ஆயத்தப் பணிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பபட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நசீர் அஹமட் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு சிறப்புக் கூட்டத்தில், மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களான இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாழேந்திரன், அலிசாஹிர் மௌலானா, மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜ சிங்கம், கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மாவட்டச் செயலர் சறோஜினிதேவி சார்ள்ஸ், மாகாணசபை உறுப்பினர் ஆர். துரைரெட்ணம் மற்றும் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-ய-46)

## அதிக கடன்களைப் பெற்றதால் அரசு நிபந்தனைகளை ஏற்றது



கொழும்பு,ஜன.16
தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. அரசின் பொருளாதாரக் கொள்கையானது தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் இல்லை. மாறாக பன்னாட்டுச் சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்கான கொள்கையாகவேஅமைந்துள்ளது.

இதனால்தான் அவசியமற்ற முறையில் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறப்பட்டுள்ளதோடு, அந்த நிதியத்தின் நிபந்தனைகளையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

அரசு முன்னெடுக்கும் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மூலம் மக்கள் மீது வரிச்சுமை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் மக்கள் போராடிபெற்றுக்கொண்ட சலுகைகளும் தற்போது பறிக்கப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசு இராணுவத்தை மாத்திரமல்லாமல், அரசியல் தலைவர்களையும் பன்னாட்டு நீதிமன்றுக்கு கொண்டுச் செல்ல நடவடிக்கைகளைமுன்னெடுத்துவருகிறது என்று திஸ்ஸ விதாரண தெரிவித்தார். (ஐ)

## நாட்டில் நிரந்தர அமைதிக்கு அரசின் முயற்சி போதாது

கொழும்பு,ஜன.16
நாட்டில் வாழும் அனைவரும் இலங்கையர் என்றமனப்பான்மையை ஏற்படுத்த தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

ஆனால் நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு இது மாத்திரம் போதாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டார நாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இணங்களுக்கிடையிலான தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதன்முறையாக தற்போதைய அரசு, நாட்டில்வாழும்அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் உண்மையாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட முன் வந்துள்ளது. எனினும் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்த முயற்சிமாத்திரம்போதாது. முதலில் நாட்டை ஆட்சி செய்யும் அரசுக்கு அது தொடர்பில் முழுமையான அர்ப்பணிப்பு அவசியம்.

என்னைப் பொறுத்த வரையில் தற்போதைய அரசுக்கு இந்த விடயத்தில் எந்தவொரு சிக்கலும் இல்லை. ஜனாதிபதி, தலைமை அமைச்சர் மற்றும் அரசின் முக்கிய தலைவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அர்ப்பணிப் புடன் செயற்பட்டு வருகின்றனர்.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் சகல உரிமைகளையும் பெற்றுக் கொடுத்து, அவற்றை உறுதிப்படுத்துவது அவசியம். அதேபோல் அவர்கள் வாழும் பகுதிகளுக்கு அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான அதிகாரங்களையும் வழங்க வேண்டும் என்றார். (ஐ)

## ஹெரோயின் விற்பனை சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜன.16
ஹெரோயின் போதைப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கிராண்ட்பாஸ் மாடிக் கட்டட வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றவிசாரணை பிரிவின் அதிகாரி களுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்று வளைப்புக்களின் அடிப்படையில், குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்த 106 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், ஒரு தொகை பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொட்டிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இதன்போது கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். (ஐ)

# அரசுக்குக் கிடைக்கும் புகழை தடுப்பதற்குச் சிலர் முயற்சி

### ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.16
ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளதை அடுத்து, அரசுக்குக் கிடைக்கும் புகழையும், கௌரவத்தையும் தடுப்பதற்கு சிலர் பண்பற்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார்.

காலி லபுதுவ சிறிதம்ம கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நல்லிணக்கத்தை உறுதிசெய்யும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் ஒரு போர் ஏற்படுவதைத் தவிர்த்து தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்தி, உலகின் அங்கீகாரத்தைப் பெற்ற உன்னத நாடாக எமது நாட்டை மிளிரச்செய்யும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

நாட்டு மக்களால் நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், நாட்டின் முன்னேற்றப் பயணத்துக்குப் பலவேறு தடைகள் காணப்பட்டன.

தற்போதைய அரசு நாட்டைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து, அனைத்து நாடுகளுடனும் நட்புறவைக் கட்டியெழுப்பி அபிவிருத்தி மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறோம்.

வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குக் கொண்டு வரும்போது நாட்டை விலை பேசுவதாக சிலர் கோசம் எழுப்புகின்றனர். பல்லாண்டு கால வரலாற்றுப் புகழ்வாய்ந்த எமது தாய்நாட்டின் பெறுமதியை நன்றாகப் புரிந்துகொண்டு, நாட்டைப்பாதுகாப்பதற்கும், வளப்படுத்துவதற்கும் அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறது -என்றார்.

சமய நல்லிணக்கத்தை உறுதி செய்யும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் மகா சங்கத்தினருக்கு ஆயிரம் காவியுடைகளை அன்பளிப்புச் செய்தல், சமய நிறுவனங்களின் அபிவிருத்திக்காக நிலையான கணக்குச் சான்றிதழ் பத்திரங்கள் மற்றும் உறுதிகளை வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான வஜிர அபேவர்தன, கயந்த கருணாதிலக, சந்திம வீரக்கொடி, தென் மாகாண முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை அதிகப்படுத்த திட்டம்

### சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதரவுள்ள சுற்றுலாப் பயணிகளை கவரத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வருகை தரவுள்ள நான்கு மில்லியன் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கான தீர்மானங்களையும் புதிய திட்டமிடல்களையும் மேற்கொண்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவமத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மொத்தமாக 20 இலட்சத்து 58 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனம குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி தொகை மதிப்பீடானது 17 சதவீத அதிகரிப்பாக காணப்படுகிறது.நடப்பாண்டிலும் நாட்டினுள் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் சுற்றுலாப் பயணிகள் மேற்கொள்கின்ற செலவினங்களின் தொகையை அதிகரிப்பதற்கும் முன்னாயத்தமான திட்டமிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அத்துடன் கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலே நாட்டினுள் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்படலாமென்பதான தகவலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# வெளிநாட்டவர்கள் இலங்கையில் மூன்று வழிமுறைகளினூடு முதலீடு செய்துகொள்ள முடியும்



“வெளிநாட்டவர்கள் இலங்கையில் தங்கியிருப்பது தொடர்பிலான சட்டப் பின்புலங்களும் அதுதொடர்பிலான திருத்தங்களும் எதிர்வரும் இரண்டு மாதங்களில் ஏற்படுத்தப்படவுள்ளது”.


“கடன்களைப் பெறாது வட்டி செலுத்தாத செலாவணியைப் பெற்றுக் கொள்வதனூடு கடந்த காலங்களில் அண்ணளவாக 7 மில்லியன் வரையான பண உள் வருகை சேமிப்பாக கிடைக்கப் பெற்றுள்ளது”.

### கடன்களைப் பெற்றுக்கொள்ளாது வட்டி செலுத்தாத செலாவணியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை

மூன்று இலட்சம் டொலர் தொகை மதிப்பீடுடைய சேமிப்புகளுடன் அல்லது செலாவணியுடன் இலங்கைக்குள் வருகை தரும் வெளிநாட்டவர்கள் ஒவ்வொருவரும் 5 வருட காலப்பகுதிக்கு இலங்கையில் தங்கியிருப்பதற்கான விசா அனுமதி வழங்கப்படும் என்பதான அறிவுறுத்தல் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்றிருந்த ஊடக சந்திப்பின் போதே மேற்கண்ட கருத்து அவரால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க,

“உலக வாழ் மக்கள் தங்களிடமுள்ள மேலதிகமான பணத் தொகையை இலங்கையில் வைப்பிலிடும்படி வேண்டிக்கொள்கிறோம். அவர்கள் தங்களது பணத்தை மூன்று முறைகளினூடே முதலீடு செய்துகொள்ள முடியும். முதலாவது விடயமாக பங்குச் சந்தையில் வெளிநாட்டவர்கள் முதலீடு செய்யலாம்.அதேபோன்று வங்கித்துறை மற்றும் முறிகளில் முதலீடுகளை மேற்கொள்ளலாம்.

பணப் பரிமாற்றுதல் தொடர்பிலான கட்டுப்பாடுகளை நாம் முற்றாக நீக்கவுள்ளோம். கோடிக்கணக்கான பணத் தொகையை ஒரே தடவையில் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்ல முடியாது. அது சார்ந்த செயற்பாடுகள் மாத்திரம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மூன்று இலட்சம் டொலர் செலாவணி அல்லது சேமிப்புடன் வெளிநாட்டவர் ஒருவர் இலங்கைக்குள் வருவாராக இருந்தால் தற்காலிகமாக அவர் தங்குவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளது”- என்றார்.

# சிறந்த சுவர் பூச்சு உற்பத்திகளை மேற்கொள்ளும் நிபொன் பெயின்ற் தங்க விருதைப் பெற்றுக்கொண்டது

தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் நிகழ்வில் இலங்கையின் சிறந்த சுவர் பூச்சு உற்பத்தி வகைகளின் தயாரிப்பினை மேற்கொள்ளும் நிபொன் பெயின்ற் தங்க விருதைப் பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வர்த்தக நிறு வனங்களின் சிறப்புத்தன்மைகளை அங்கீகரிக்கும் விதமாக இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தால் மேற்படி விருது வழங்கும் நிகழ்வுகள் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்றது.

கூட்டுமுயற்சியின் மூலம் நாட்டைக் கவர்ச்சிகரமாக மாற்றுவதற்கும் முதலீடுகள் உள்ளிட்ட உற்பத்தி மற்றும் சேவைகள் தொடர்பிலான சிறப்புத்தன்மை வாய்ந்த நிறுவனங்களாக திகழ்வதற்கும் இலங்கையிலுள்ள உற்பத்தி நிறுவனங்கள் குறித்து சம்மேளனம் ஊக்குவிப்புகளையும் கரிசனையையும் வழங்கி வருகின்



றமை குறிப்பிடத்தக்கது.

“நீண்ட காலமாக இலங்கையில் நிலைத்திருக்கும் நாம் மக்களுக்கு சிறந்த தரமான உற்பத்திகளை வழங்கி வருகின்றமையால் தற்போது தேசிய அளவில் பாராட்டையும் பெற்றுள்ளோம். நிபொன் பெயின்ட்ஸ், மிகப்பெரிய வகை தயாரிப்பு மற்றும் ஏனைய உற்பத்திகள் என்ற வகைப்பாடுகளினுள் அங்கீகாரம் பெற்று இரண்டு தங்க விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. தலைமைத்துவம், செயல்திறன் மேலாண்மை, உள்ளூர் மற்றும் பன்னாட்டு சந்தையின் ஆய்வு, கூட்டாண்மை சமூகப்பொறுப்பு, சூழல்பேண்தகைமை, வர்த்தக மற்றும் நிதி முடிவுகள் போன்ற எட்டு மதிப்பீட்டு அடிப்படையின் கீழ் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. தரமான உற்பத்திகளையும் தேவைப்படும் உற்பத்திகளையும் வழங்கவேண்டும் என்பதையே நாம் உறுதியாக கொண்டுள்ளோம்” என நிபொன் பெயினற் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நேமந்த அபேசிங்க தெரிவித்தார்.




# தந்திகளற்ற ஹெட்போன்கள்

### இயர் பாட்ஸ் என்ற பெயரில் அறிமுகமாகவுள்ளது



சம்சங் நிறுவனம் தனது சொந்த தயாரிப்பாக எயர் போட் போன்றதான சாதனத்தை அறிமுகப்படுத்தவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி இயர் பாட்ஸ் என்ற பெயரில் தந்திகளற்ற ஹெட்போன்கள் எஸ் - 8 அதிதிறன் பேசிகளுடன் வெளியிடப்படவுள்ளது.

அப்பிள் எயர் போட் சாதனத்திற்கு போட்டியாக சம்சங் நிறுவனம் இதனை அறிமுகம் செய்யவுள்ளது.. புதியதான அதிதிறன் பேசியில் 3.5 மில்லி மீற்றர் ஹெட்போன் ஜாக் வழங்கப்படுவது குறித்து எவ்வித தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதான தகவல்களும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் சம்சங் இயர் பாட்ஸ் இல் ஹர்மன் தொழில்நுட்பங்களும் எயர் போட்களில் அண்ட்ரோய்ட் சிங் அம்சம் வழங்கப்பட்டதைப் போன்றதான விசேட அம்சங்களும் இவற்றில் உள்வாங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சம்சங் கியர் ஐகான் ஓ என்ற ஹெட்போன்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையிலே எயர் போட் போன்றதான சாதனம் சந்தையில் அறிமுகம் பெறவுள்ளமை நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 மாவிலைகள் ரூபா 12 ஆயிரம்

நியூயோர்க், ஜன. 16

தைத் திருநாளை முன்னிட்டு பிரபல இணைய வர்த்தக நிறுவனம் ஒன்று 25 மாவிலைகள் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படும் என்று விளம்பரப்படுத்தியது.

பொங்கல் விழா என்றாலே வீடுகளின் வாசலில் மாவிலைத் தோரணம் இன்றியமையாத அம்சமாக இருக்கும். உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களும் தைப்பொங்கலை வெகு விமரிசையாக நேற்றுமுன்தினம் கொண்டாடினர். அவர்களின் பாரம்பரியம் சார்ந்த தேவையான மாவிலையை விற்பனை செய்ய பிரபல இணைய வர்த்தக நிறுவனம் வலை விரித்துள்ளது. சிறப்பு விற்பனை என்ற தொகுதியில் 25 மாவிலைகள் இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 12



ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்படும் என்று அந்த நிறுவனம் விளம்பரப்படுத்தியது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை இலக்கு வைத்தே குறித்த வர்த்தகம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் தெற்கு புளோரிடா மாநிலத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தாமல் இயற்கையான முறையில் வளர்க்கப்படும் மாமரங்களில் இருந்து பறிக்கப்பட்ட இலைகள், பறிக்கப்பட்ட அன்றே மரப் பட்டையால் செய்யப்பட்ட சிறப்பு பெட்டிகள் மூலம் பாதுகாப்பாக விநியோகம் செய்யப்படும் என்றும் இணைய வர்த்தக நிறுவனம் அறிவித்தது. (ம)



# லிபியக் கடலில் மூழ்கியது படகு

## 100 பேர் சாவு எனச் சந்தேகம்

உரோம், ஜன. 16

லிபியக் கடலில் படகொன்று நேற்றுமுன்தினம் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 100 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

படகில் பயணித்தவர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் படகில் 120 பேர் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. லிபியாவின் கரையோர பாதுகாப்புப் படையால் 4 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். 8 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. விபத்து நடைபெற்று நீண்டநேரமானதால் ஏனையவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

சிரியா, ஈராக், ஈரான், ஆப்கானிஸ்தான், துருக்கி ஆகிய நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக அங்கிருக்கும் மக்கள் பலர் லிபியாவுக்குச் சென்று லிபியாவில் இருந்து அகதிகளாக இத்தாலிக்குப் படையெடுக்கின்றனர். பின்னர் இத்தாலியில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் செல்கின்றனர். அவ்வாறு செல்லும் அகதிகள் படகுகள் பல விபத்துக்குள்ளாகியும் உள்ளன.

கடந்த ஆண்டு மாத்திரம் 5 ஆயிரம் அகதிகள் அவ்வாறு உயிரிழந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

இந்த வருடத்தின் முதல் இரு வாரங்களில் மட்டும் ஆயிரம் அதிகள் ஐரோப்பியாவுக்குச் சென்றுள்ளனர் என்று பன்னாட்டு ஊடகங்களின் புள்ளி விவரங்கள் குறிப்பிடுகின்றன. (ம-எ)

# அரச திட்டங்களை ஆரம்பிக்க பன்னீர்செல்வத்துக்குத் தடை?

சென்னை, ஜன. 16

அரச திட்டங்களைத் ஆரம்பித்து வைக்க தமிழ்நாட்டு முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு கட்சித் தலைமை தடை விதித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்ட கட்டடம், பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்டவற்றை இணைய உரையாடல் முறையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திறந்து வைப் பதாக இருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் நிகழ்ச்சிகள் கைவிடப்பட்டன. அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள சசிகலாவின் எதிர்ப்பே இதற்கு காரணம் என சில ஊகங்கள் வெளியாகின. எனினும் உத்தியோகபூர்வமாக எந்தத் தகவல்களும் வெளி யாகவில்லை. பெப்ரவரி 19ஆம் திகதி சசிகலா முதலமைச்சராகவும் பொறுப்பேற்கவுள்ளார் என்றும் இணையங்களில் அண்மைக் காலமாக சில செய்திகள் பரவி வருகின்றன. (ம)



# 451 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானது சந்திரன்

வோஷிங்டன், ஜன. 16

பூமியின் துணைக் கிரகமான சந்திரன் 451 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்று நாசா நிறுவனம் தனது ஆய்வின் அடிப்படையில் கணித்தது.

1971 ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாசா மையம் அப்பல்லோ 14 விண்கலம் மூலம் மனிதர்களை முதன் முறையாக சந்திரனுக்கு அனுப்பியது. அப்போது அங்கிருந்து கனிமங்கள் வெட்டி எடுக்கப்பட்டு வந்தன. அவை 'சிர்கான்ஸ்' என அழைக்கப்படுகின்றன. அவற்றில் அமெரிக்காவின் கலிபோர்னியா-லொஸ்ஏஞ்சல்ஸ் பல்கலைக்கழக நிபுணர்கள் ஆய்வை மேற்கொண்டனர். அதன் மூலம் சந்திரன் 451 ஆண்டுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்தனர். (ம-எ)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் தனித்துவச் சின்னமாகத் திகழ்ந்த பழைமை மிகுந்த மரம் பனிப்புயலால் கடந்த திங்கட்கிழமை தரைதொட்டது. பல நூற்றாண்டுகளைச் சந்தித்த குறித்த மரத்தைக் குடைந்து ஆயிரத்து 880ஆம் ஆண்டு பாதை உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த புயலால் கலிபோர்னியா தேசிய வனப் பூங்காவும் சொல்லிக்கொள்ளும் படியான சேதத்தை எதிர்கொண்டது என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ற்பல இடங்களில் நற்றும் ஜல்லிக்கட்டு

ல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள லையில் தமிழ்நாட்டின் பற்பல இடங்களில் ற்றும் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது.
ந்திய மத்திய அரசு தமிழர்களின் பாரம்பரிய ளையாட்டான ஜல்லிக்கட்டை தடை செய் ள்ளது. தடையை நீக்க வலியுறுத்தி தமிழ் டெங்கும் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடை ற்றுவருகிறது. சில இடங்களில் தடையை ஜல்லிக்கட்டு இடம்பெற்றுள்ளது. இதனால் ாங்கள் திருநாளான நேற்றுமுன்தினமும் ற்றும் ஜல்லிக்கட்டை நடத்த விடாது பாது ப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன. னினும் தடையை மீறி மதுரையிலும் னைய பல இடங்களிலும் நேற்றும் ஜல் க்கட்டு இடம்பெற்றது. (ம-எ)

## மோசூல் பல்கலை. மீண்டது

பக்தாத், ஜன. 16
ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூலின் பல்கலைக் கழகம் அரச படைகளால் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. கடந்த ஒக்ரோபர் மாதம் நகரை மீட்கும் போரில் அமெரிக்காவின் ஆதரவுடன் களமிறங்கியது ஈராக் அரசு. போர் ஆரம்பித்து சில வாரங்களிலேயே குவையாராப் பெருங் கிராமம், பழைமைகளை உள்ளடக்கிய நிம்ரூட் கிராமம் ஆகியன மீட்கப்பட்டிருந்தன. சிலதினங்களுக்கு முன்னர் தைகிரீஸ் நதிக்கரை மீட்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மோசூலின் பிறிதொரு அடையாளமான பல்கலையும் அதன் அருகில் இருந்த ஆளுநர் மாளிகையும் கைப்பற்றப்பட்டது. ஆளுநர் மாளிகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடி ஏற்றப்பட்டிருந்தது. தற்போது அது தூக்கி எறியப்பட்டு, ஈராக் அரசின் கொடி நிறுவப்பட்டது. (ம-எ)






## 'ட்ரம்ப் பிரசிடன்ட் ஆன டேக்இட் ஈசி பொலிஸி'

### மறுவடிவம் பெற்றது ரகுமானின் 'ஊர்வசி' பாடல்

புதுடில்லி, ஜன. 16
22 ஆண்டுகளுக்குப் பிறகு ரகுமானின் 'ஊர்வசி ஊர்வசி டேக் இட் ஈசி ஊர்வசி' பாடல் வரிகளில் சில மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் ரசிகர்களிடம் புயலை உருவாக்கியுள்ளது.
1994ஆம் ஆண்டு சங்கர் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'காதலன்'. பிரபுதேவா, நக்மா, எஸ்.பி.பாலசுப்பிரமணியம் உள்ளிட்டோர் நடித்திருந்த இந்தப் படத்துக்கு ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருந்தார்.
பாடல்களும், படமும் சூப்பர் ஹிட் ஆனது குறிப்பாக 'டேக் இட் ஈஸி ஊர்வசி' பாடல் இன்றளவும்பிரபலமான பாடலாக உள்ளது.
இந்தப் பாடலை ஒரு இசை நிகழ்ச்சியில் மறுபிரவேசம்செய்துமேடையேற்ற முடிவு செய்தார் ஏ.ஆர்.ரகுமான். அந்தப் பாடல் சரணத்தின் வரிகளை இன்றைய சூழ லுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க விரும்புவதாகவும், அதற்கு ரசிகர்களே சுவாரஸ்யமான,நகைச்சுவையான வரிகளைத் தரலாம் என்றும் கடந்த டிசெம்பர் தனது முகப் புத்தகப் பக்கத்தில் ஏ.ஆர்.ரகுமான் கோரிக்கை விடுத்திருந்திருந்தார்.
இந்த நிலையில் வரிகள் மாற்றியமைக்கப்பட்ட 'டேக் இட் ஈசி ஊர்வசி' பாடலின் புதிய வடிவம் அண்மை[illegible] வெளியிடப்பட்டது. மாற்றியமைக்க[illegible] பாடல்வரியில் 'ஹி[illegible] கிளிங்டன் தோத்[illegible] போனால் - டேக்[illegible] ஈசிபொலிசி'பொனா[illegible] ட்ரம்ப்பு பிரசிடன்[illegible] ஆனால் - டேக் இட் ஈ[illegible] பொலிசி', '500 ரூ[illegible] செல்லாமல் போனால் - டேக் இட் ஈசிபொலிசி', '1000 ரூபாய் செல்லாமல் போனால் - டேக் இட் ஈசி பொலிசி' போன்ற சமகால நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தப் பாடல் இது வரை ஒரு கோடிக்கும் அதிகமானோரால் பார்க்கப்பட்டுள்ளது. (ம)

## இந்தியாவில் படகு விபத்து: 24 பேர் நீரில் மூழ்கிச் சாவு

புதுடெல்லி, ஜன. 16
இந்தியாவின் பட்னா பகுதிக்கு அருகில் உள்ள கங்கை ஆற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற படகு விபத்தொன்றில் 24 பேர் உயிரிழந்தனர்.
பட்டம் ஏற்றும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக சென்றவர்களை ஏற்றிச் சென்ற படகே அவ்வாறு விபத்துக்குள்ளானது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 4 லட்சம் ரூபா நிதியுதவி வழங்க இந்தியப் பிரதமர் மோடி உத்தரவிட்டார். காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.
25 பேரை மட்டுமே ஏற்றக்கூடிய படகில் 50 பேர் பயணித்தமையே விபத்துக்குக் காரணம் என முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)




## வேற்றுக்கிரக வாசிகளை அவதானிக்க சிலியில் அமைகிறது தொலைநோக்கி

சான்ரியாகோ, ஜன.16
சிலியில், வேற்றுக் கிரகவாசிகளை அவதானிக்கவும்-தொடர்புகொள்ளவும் பிரத்தியேகமான மிகப் பெரிய தொலைநோக்கி உருவாக்கப்படவுள்ளது.
வேற்றுக் கிரகங்களை ஆராய்வதுடன், வேற்றுக் கிரகவாசிகளின் நகர்வுகளை அவதானிக்கவும் குறித்த தொலைநோக்கி உதவும். இதன்மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் பெறப்படும் முடிவுகள் என்பன துல்லியத் தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். 2020 ஆம் ஆண்டு செயற்படத் தயாராகவுள்ள நிலையில், தொலைநோக்கிக்கான தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தும் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ம-எ)

## செருப்பில் காந்தி: மீண்டும் சர்ச்சை




அமெரிக்க இணைய விற்பனை நிறுவனமான அமெசன், மகாத்மா காந்தியை செருப்பில்பொறித்து சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது. முன்னதாக இந்தியக் கொடியில் கால் துடைப்பங்களை உருவாக்கி இணைய விற்பனையில் அறிமுகப்படுத்தியது. இதனால் இந்தியர்கள் சமூகவலைத் தளங்களில் அமெசன் இணையத்துக்கு எதிரான கருத்துக்களைப் பகிர்ந்தனர். இந்த நிலையில் காந்திப் படம் பொறித்த செருப்புக்கள்மேலும்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய அயலுறவுத்துறை அமைச்சர்சுஸ்மா சுவராஜ், அமெசன் மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கேட்டுள்ளார். (ம-எ)



## அல் குவைதாவுக்கான அரேபியத் தலைவர் கொலை

சனா, ஜன. 16
ஏமனில் அமெரிக்க வான்படை நடத்திய தாக்குதலில் அல் குவைதாவின் அரேபிய தீபகற்பத் தலைவர் அல் கானி அல் ரசாஸ் கொல்லப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தாக்குதலிலேயே அவர் கொல்லப்பட்டார்.
அல்குவைதாவின் இராணுவத் தளபாடங்கள் பலவும் அழிக்கப்பட்டன. இந்தத் தாக்குதல் அல்குவைதா அமைப்புக்குப் பெரும் பின்னடைவைகொடுக்கக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டது.
ஏமனில் அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாக இந்தத் தாக்குதல் அமைந்துள்ளது என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது. (ம-எ)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இம்முறையும் தமிழ்த்தரப்பு ஏமாந்துவிடலாகாது

இலங்கை அரசின் மூத்த தலைவர்கள் பலரும் நிலைமாற்று நீதி பொறிமுறைகளில் பன்னாட்டு நீதிபதிகள் இடம்பெறுவது தொடர்பாக ஒருவருக்கு ஒருவர் முரண்பாடான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்துக்கு நேர்மாறாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும்கூட இதில் உள்ளக நீதிபதிகள் மாத்திரமே இடம்பெறுவார்கள் என்று அழுத்திக் கூறிவருகிறார்கள்.

ஐ.நா.தீர்மானத்தின்படி இலங்கை அரசானது நான்கு நிலைமாற்று நீதி பொறிமுறைகளை நிறுவுவதாக உறுதியளித்திருந்தது. இதில் முக்கியமாகப் பன்னாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்கள், சட்டவல்லுநர்கள் அடங்கியிருப்பார்கள் என்றும் – இவர்களுக்கு அனுசரணையாக சுயேச்சையான புலனாய்வு மற்றும் வழக்குத் தொடங்கும் அமைப்பொன்று செயற்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்தத் தீர்மானமானது காணாமற்போனவர்கள் மற்றும் காணாமற்போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் ஒன்றும், உண்மையைக் கண்டறியும் பொறிமுறை, இவை மீண்டும் நிகழாமல் இருக்கச் செய்யவும் பாதிக்கப்பட்டவ ருக்கு இழப்பீடு வழங்கவுமான பொறிமுறைகள் காணப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்படவில்லை. ஒரு சிலவற்றில் மட்டுமே ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வோஷிங்டனில் இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனம் தனது உலகளாவிய மனித உரிமைகள் நிலைப்பாடுகள் தொடர்பான அறிக்கையில் இலங்கை தொடர்பான பகுதியில் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது. அந்த நிறுவனத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கென்னத் றொத் இந்த அறிக்கையை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார்.

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விவகாரம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் நிலையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு முழுதும் நிறைவேற்றப்படாமலிருக்கும் தீர்மானம் குறித்து காரசாரமான கருத்துக்கள் பரிமாறப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதனால். சில சமயம் மிகக்கடுமையான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படக்கூடிய நிலைமையை சமாளிப்பதற்காக இலங்கை அரசு இப்போதிருந்தே மேற்குலக நாடுகளை 'தஜா' செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. அந்த வகையிலேயே அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இலங்கையில் போரினால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறேனும் இப்போதைய அரசு பதவியிலிருக்கும் காலத்திலேயே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு விட வேண்டும் என்பதில் தனது தீவிரப் போக்கைத் தளர்த்திக் கொண்டிருப்பதை அரசுத்தலைவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்வதாகவும் கருத இடமிருக்கிறது. நியாயமான தீர்வு ஒன்று கிடைப்பதற்கு வசதியாக மேலும் ஒருவருடகாலம் விட்டுக் கொடுக்க அவர்கள் தயாராய் இருப்பதாக சமிக்ஞை வெளியிட்டிருப்பதானது மேலும் ஒரு தடவை தமிழர்கள் ஏமாற்றப்பட்டதாக இருந்து விடலாகாது என்பதே இதில் அக்கறையுள்ள தரப்புகள் அனைவரதும் கவலை. விசாரணை பொறிமுறையைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தக் காரணம் கொண்டும் பாதிக்கப்பட்ட மக்களின் வேணவாக்களுக்கு மாறாக செயற்பட முடியாது. அரச தலைவரும் , தலைமை அமைச்சரும் எடுக்கும் முடிவுகள் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காதெனின் அவர்களை நம்புவதில் அர்த்தமில்லை. விசாரணைப் பொறிமுறையைமாற்றி அமைக்க விரும்பும் அரசின் கொள்கைக்கு மனித உரிமை சபையின் ஆணையர் செய்யித் அல் ஹுசேன் இணங்கியிருப்பதாக அரசு வெளியிட்ட கருத்து போலியானது என்பது இப்போது தெளிவாகியுள்ளது. அடுத்த கூட்டத்தில் தமது நிலைப்பாட்டை அவர் தெளிவுபடுத்துவார் – இலங்கை அரசுக்கு அதிகபட்சமாகவே அவகாசம் கொடுக்கப்பட்டுவிட்டது என்ற முறையில் அவரது அறிக்கை இந்த முறை கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டும்.

எதுவானாலும் ஜெனிவாவில் இம்முறை தமிழர் தரப்பிலான குரல் பலத்து ஒலிக்கவேண்டும். பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்கள் நீதியைத்தான் கோரிநிற்கிறார்கள். அது இலங்கை அரசின் காதுகளில் மட்டுமல்ல, பன்னாட்டுச் சமூகத்தின் காதுகளிலும் ஓங்கி ஒலிக்கவேண்டும். அந்த வகையில் பன்னாட்டு மனித உரிமை ஆர்வலர்களும், நிறுவனங்களும் நம்மோடு இணைந்து நிற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.





# இரண்டாண்டுகள் ஆட்சியின் முடிவில்

# நல்லாட்சி அரசு எதிர்நோக்கும் சவால்கள்



மு.ஈழத்தமிழ்மணி

தாங்கள் எந்தத் தீர்வுக்கும் இணங்கப்போவதில்லை என்பதை மைத்திரியின் தலைமையிலான நல்லாட்சி அரசும் வெளிப்படையாகவே உணர்த்தியுள்ளது என்பதை, மைத்திரி அரசின் கடந்த இரண்டு வருடகால ஆட்சியின் போது தமிழ் மக்களால் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. ஈழத்தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலோ, சுயாட்சி அடிப்படையிலோ தீர்வை வழங்குவதற்கு, சிங்கள இனவாதத் தரப்புக்கள் ஒருபோதும் உடன்பட மாட்டா. இதுவே மைத்திரி நல்லாட்சி அரசின் நிலைப்பாடும் என்பதை கடந்த இரண்டு ஆண்டுகளில் மைத்திரி அரசு தெளிவுபடுத்தி வருகின்றது.

2009இல் போர் முடிவுக்கு வந்த பின்னரும், எந்தத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காமல் முன்னைய மகிந்த அரசு காலத்தைக் கடத்தி வந்தது. பேச்சுக்கள் மூலம் தீர்வொன்றை எட்டும் முயற்சி கடந்த 60 ஆண்டு கள் கால இலங்கை அரசியல் வரலாற்றில், ஒருபோதிலும் சாதகமான பயனை ஏற்படுத்தியதில்லை.

தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அகிம்சை வழியிலும், ஆயுதரீதியிலும் சுமார் அறுபது ஆண்டுகளாகப் போராடினார்கள். போர் முடிந்த பின்னர், ஜனநாயக வழியில் போராடி வருகின்றனர். அபிவிருத்தி, சலுகைகள், உடமைகள், உயிர்கள் என பலவற்றை இழந்து நிர்க்கதியான தமிழினம், இன்றும் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றது.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களுக்குரிய நிரந்தர, நியாயமான உரிமைகளை வழங்க வேண்டும் என மேற்குலக நாடுகள் முன்னைய ஆட்சியாளர்களுக்கும், தற்போதைய மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசுக்கும் அழுத்தம் திருத்தமாகவே கூறிவந்தன; வருகின்றன.

ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்து கடந்த எட்டாம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், அவரால் தமிழர்களுக்குரிய அடிப்படைப் பிரச்சினைகளைக்கூட தீர்த்து வைக்க முடியவில்லை. நாட்டை ஆட்சி செய்த இரண்டு பெரிய தேசியக்கட்சிகளும், தமிழ் மக்களைப் போரால் மட்டும் அழிக்காமல், பொருளாதார ரீதியிலும் நசுக்கி வந்துள்ளன. படையினரால் கையகப்படுத்த தமிழ் மக்களின் பாரம்பரியக் காணிகளில் பெரும்பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் பிடிக்குள்ளேயே இருக்கின்றன.


### தமிழ் மக்களது சந்தேகத்தைச் சம்பாதிக்கும் நல்லாட்சி அரசு

தமிழ் மக்களின் பிரச்சினைகள் யாவும் படிப்படியாகத் தீர்த்து வைக்கப்படும் எனக்கூறிய நல்லாட்சி அரசு, சிறைக்கைதிகள் விடுவிப்பு, காணாமல்போனோர் தொடர்பில் சரியான தீர்வு பெற்றுக்கொடுக்காமை, இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றாமல் இழுத்தடிப்பது, ஒற்றையாட்சியின் அடிப்படை யிலேயே தீர்வு எனத்தெரிவித்து வருவது போன்ற தனது செயற்பாடுகளால், தமிழ் மக்களது அதிருப்தியைச் சந்தித்துள்ளது. புதிய அரசமைப்பின் ஊடான, தமிழர்களுக்கான தீர்வு குறித்த விவரங்கள் எதுவும் வெளிவராத நிலையில், அரசு தமிழ் மக்களை ஏமாற்றும் நோக்குடன் செயற்படுகின்றதா என தமிழ் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

2017 ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு, தன்னுடைய மூன்றாவது ஆண்டில் பிரவேசித்துள்ளது. கடந்த இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்து கடந்த எட்டாம் திகதியுடன் இரண்டு ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், அவரால் தமிழர்களுக்குரிய அடிப்படைப் பிரச்சினைகளைக்கூட தீர்த்து வைக்கமுடியவில்லை. நாட்டை ஆட்சி செய்த இரண்டு பெரிய தேசியக்கட்சிகளும், தமிழ் மக்களைப் போரால் மட்டும் அழிக்காமல், பொருளாதார ரீதியிலும் நசுக்கி வந்துள்ளன. படையினரால் கையகப்படுத்த தமிழ்மக்களின் பாரம்பரியக் காணிகளில் பெரும்பகுதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை.



வருடகால ஆட்சியின் பிரதிபலன்கள் யாவும் தமிழ்மக்களுக்கு எது வித நன்மையையும் ஏற்படுத்தியதாக இல்லை.

ஜெனிவாவில் உறுதியளிக்கப்பட்டவாறு பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகள் எதுவும் அரசினால் இந்த இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் முன்னகர்த்தப்படவில்லை. ஆட்சி மாறிய போதிலும், தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகள், கைதுகள், அச்சுறுத்தல்கள் இன்னமும் குறையவில்லை. புதிய ஆட்சியில் தமிழ் மக்களுக்கு நிம்மதி ஏற்படும் என எதிர்பார்த்தபோதிலும், அது தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

மைத்திரி ஆட்சியிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விகாரைகள், புத்தர் சிலைகள் நிறுவுதல், சிங்கள மக்களைக் குடியேற்றுதல், சிங்கள இனத்தவர்களை தமிழர் பகுதிகளில் அரச அதிபர்களாகவும், பல்வேறு திணைக்களங்களில் உயரதிகாரிகளாகவும் நியமித்தல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆளுநர்களாக சிங்கள இனத்தவர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது, இனவாத செயற்பாடுகளாகவே அமைந்திருக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல தடவைகள் வடபகுதிக்கு வந்து சென்றுள்ளார். தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளினாலேயே தாம் ஜனாதிபதியாக வரமுடிந்தது என்று அடிக்கடி நன்றியுணர்வோடு கூறுகின்ற அவர், முதலில் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும். சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்கள் முன்வைக்கும் தேசிய இனம் என்ற தர்க்கரீதியான நிலைப்பாட்டை ஏற்று, அதனடிப்படையில் புதிய அரசமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பார் என்ற தமது நம்பிக்கை கானல் நீராகிப்போயிருப்பது குறித்து தமிழ் மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

நல்லாட்சி அரசும், முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்சவின் பாதையில் செல்கின்றது என்பதைத் தமிழ் மக்கள் தற்போது புரிந்து கொண்டுள்ளனர். ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்பதற்கு மேலாக, வேறு எந்தத் தீர்வையும் தமிழ் மக்களுக்கு வழங்காது, காணிகள் விடுவிப்பு, படைக்குறைப்பு போன்ற நிலைப்பாடுகளில் இருந்து மைத்திரி அரசு சிறிதளவேனும் கீழிறங்கி வரவேயில்லை.

### போர்க்குற்ற விசாரணை விடயத்தில் இழுபறி நீடிக்கிறதா?

மைத்திரி அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான கடப்பாட்டைக் கொண்டுள்ளது. போர்க்குற்றவிசாரணை, அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஆகிய இரண்டும் பன்னாட்டின் கவனத்தை ஈர்த்த விடயங்களாகும். புதிய அரசியல் யாப்பு சீர்திருத்த யோசனைகள், 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்வைக்கப்படவுள்ளன. போர்க்குற்ற விசாரணை விடயம் இழுபறியாகிக் கொண்டே போகவுள்ளதா? போர் முடிவுக்கு வந்து 90 மாதங்கள் கழிந்துவிட்டன. தமிழ் மக்களுக்கு விரோதமாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள், இனவாதத்தைத் தூண்டி, இன முறுகல்களைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பொலிஸார் ஆயுதப்படையினர் முன்னிலையிலேயே இடம் பெற்றிருந்தன.

மைத்திரி ஆட்சியிலும் இனவாதத்தைத் தூண்டும் வலிமைமிக்க சக்திகள் பின்னணியில் இருக்கின்றன. இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கக்கூடிய முயற்சியில் மைத்திரி–ரணிலின் தேசிய அரசு பல முட்டுக்கட்டைகளையும் தாண்டி வந்திருப்பினும், தமிழ் மக்களுக்கான தீர்வு, கண்துடைப்புத் தீர்வாகத் திணிக்கப்படுகின்ற ஆண்டாகவே 2017 ஆம் ஆண்டு அமையப்போகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரான இரா. சம்பந்தன் கடந்த வருடம் இறுதிப் பகுதியில், 2016 இல் தமிழர்களுக்கான தீர்வு கிடைப்பதற்கான நம்பிக்கை தனக்கிருப்பதாகக் கருத்து வெளியிட்டிருந்தார். அதைத் தமிழர்கள் எவரும் நம்பவில்லை. தந்தை செல்வா, சிங்கள அரசுகளை நம்பிக்கெட்டிருந்தார். தமிழ் மக்களுக்கான தீர்வை எந்தவொரு அரசும் எந்தவொரு காலத்திலும் பெற்றுத்தரப் போவதில்லை என்ற உண்மையை உணர்ந்து கொண்டமையால், தமிழ் மக்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும் என்ற தீர்க்கமான வார்த்தையை தந்தை செல்வா தமது இறுதிக் காலகட்டத்தில் வெளியிட்டிருந்தார்.

### தீர்வு முயற்சியைக் குழப்பியடிக்க முயலும் சிங்கள இனவாதத் தரப்புக்கள்

2016 இல் தீர்வு என்பது சாத்தியப்படவேயில்லை. புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு எதிராக மகிந்த தலைமையிலான எதிர்ப்பு அணியும், இனவாத அமைப்புகளும், பௌத்தபிக்குகளும் அணிதிரளப் போகின்றனர். சிங்கள மக்களில் பெரும்பான்மையோர் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கு வாய்ப்பளிக்கமாட்டார்கள் என்பது வரலாறாகும்.

மைத்திரி – ரணில் நல்லாட்சி அரசு, தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் நியாயபூர்வமாக நடந்து கொள்ளும் என்றோ, 2017 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசினால் கொண்டுவரப்படுகின்ற புதிய அரசமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் தமிழர்களின் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டு முற்றுப்பெறும் என்றோ எதிர்பார்க்க முடியாது. புதிய அரசமைப்பு யாப்பை ஏற்றுக் கொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு 2017 இல் நடைபெறும்போது, அதற்கான அங்கீகாரம் அரசு எதிர்ப்பார்த்தவாறு கிடைக்குமா? இதற்குத் தென்னிலங்கை மக்களே விடையளிக்கவேண்டும்.

2017 ஆம் ஆண்டில் மூன்றாவது ஆண்டுஆட்சிக்காலத்தை ஆரம்பித்துள்ள நல்லாட்சி அரசு, பலகோணங்களில் சவால்களை எதிர்நோக்குகிறது. புதிய அரசமைப்புச்சீர்திருத்தம் தொடர்பான மக்கள் கருத்துக் கணிப்பு, நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றத்துக்கும் நடைபெற இருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட தென்னிலங்கையிலுள்ள மற்றும் இருமாகாணசபைகளுக்கான தேர்தல்கள் போன்றவற்றை அரசு எதிர் கொள்ளப் போகின்றது.


2016 இல் [illegible] யும் அவரது [illegible] நிலையைப் பார்க்கும்போது, 2017இல் மைத்திரிபால சிறிசேன, பலவீனத்தையும் தோல்வியையும் மட்டுமே எதிர்பார்க்கும் சூழ்நிலை தோன்றியிருப்பதாகத் தெரிகின்றது. ஐ.தே.கட்சி, மைத்திரியின் பலவீனத்தைத் தனக்குச் சாதகமானதாக ஆக்கிக் கொண்டுள்ளதான தோற்றத்தையும் உணர முடிகின்றது.

நல்லாட்சி அரசு கொண்டு வருகின்ற புதிய அரசமைப்பு சீர்திருத்தச்சட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு சாதகமாக அமையாதுவிட்டால், பிரச்சினை தொடர்ந்து கொண்டே செல்லும். தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான, சாத்தியமான, ஏற்றுக் கொள்ளத் தக்க, நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்படும்வரை தமிழர் பிரச்சினைக்கு முடிவே கிட்டாது.

இந்த அரசும், தமிழ் மக்களை ஏமாற்றி விடமுடியாது. தமிழ் மக்கள் தாங்கள் தோற்றுப்போனோம் என்று கருதியோ, பலவீனப்பட்டுவிட்டோம் என்று நினைத்தோ மைத்திரியை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்க முன்வரவில்லை. மாற்றம் ஒன்று வேண்டும் எனக் கருதியே, அவர்கள் மைத்திரியைத் தெரிவு செய்திருந்தனர்.

தமிழ் மக்களின் வாழ்வு அமைதியையும் நிரந்தரமான இருப்பையும் நோக்காகக் கொண்டது. மைத்திரியின் நல்லாட்சி அரசு, 2017 இல் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தள்ளிப்போட்டுக்கொண்டு செல்லுமானால், தமிழ் மக்கள் [illegible] எந்தச் சிங்கள அரசு [illegible] கொள்ளவே மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசகர் திருமுகம்

### காய்த்த மரம் கல்லெறிக்கு உள்ளாவது வழமையே

இந்திய அமைதிப் படையினரால் குடாநாட்டில் பரவச் செய்யப்பட்ட பாதீனியம், சுற்றுச் சூழலுக்கும், பொது மக்களது சுகாதாரத்துக்கும் ஏற்படுத்தும் பாதிப்பைப் போக்கிக் கொள்ள இயலாது தடுமாறுகின்றோம்.

அந்த வகையில், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் வகைகளது பயன்பாட்டால் எமக்கு ஏற்படும் பாதிப்பும்.இதற்குச் சற்றும் குறைந்ததல்ல.

அடுத்த வாரம் முதல் யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தின் வகைப் பொருள்களை எடுத்துச் செல்வதை வைத்தியசாலை நிர்வாகம் தடைசெய்வது நோயாளர்களது சுகாதார நிலை பாதிக்கப்படக் கூடாது என்ற நன்னோக்கிலேயே.

ஆயினும் இதனால் தமது வழக்கமான நடைமுறை மற்றும் சுதந்திரம் பாதிக்கப்படுகிற தென்ற ஒரு சிலரது குற்றச்சாட்டு நியாயமற்றது, என்பதை இங்கு குறிப்பிட்டுத் தானாக வேண்டும்.

*த.அருமைநாயகம்,*
*நல்லூர்.*

### தவறை உணர்ந்து திருந்துவார்களா?

மனித பாவனைக்கு உதவாத அளவுக்குப் பழுதடைந்த ஒரு தொகை மாட்டிறைச்சி, அண்மையில் யாழ். நகரிலுள்ள மாட்டிறைச்சிக் கடையொன்றிலிருந்து சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதென்பது புத்திரிகைச் செய்தி.தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்களில் பழுதடைந்த உணவுப் பொருள்களின் பாவனை முக்கிய இடம் வகிக்கிறது என்பது சுகாதாரத்துறை நிபுணர்களது கருத்து.

அந்த வகையில், எப்படியும் பணம் ஈட்டிவிடும் நோக்கில், தாம் விற்பனை செய்யும் பழுதடைந்த இறைச்சி வகைகளும் பொது மக்களை நோயாளிகளாக்கக் காரணமாகின்றன என்பதை இத்தகைய ஒரு சில இறைச்சி விற்பனையாளர்கள் உணர்ந்து திருந்துவது எப்போது?

*எஸ்.எம்.யோசெப்,*
*யாழ்ப்பாணம்.*

# வரலாற்றில் இன்றைய தினம்



1989 - பூசா தடுப்பு முகாம்; சிறைச்சாலையாக மாற்றம். நிர்வாகம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் கீழ்

1994 - கிட்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு.

1995 - பண்டா - செல்வா ஒப்பந்த அடிப்படையிலான தீர்வு; தமிழர்களுக்குத் திருப்தி தராதென கேணல் கிட்டு நினைவுக் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

2004 - காணாமற் போனோர் தொடர்பில் 7 வருடங்களாகத் தேடியும் கிடைக்காதவர்களை ஓரிரு நாளில் என்னால் கண்டுபிடிக்க முடியாது என இராணுவத் தளபதி சுசில சந்திரபால தெரிவிப்பு.

2008 - மனிதாபிமானப் போர் வடக்கில் முன்னெடுக்க ஜனாதிபதி உறுதியென அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தகவல்.




# சிரிக்க... சிந்திக்க...

**மகன்**- அப்பா...நான் இனிமேல் படிக்கப் போகமாட்டேன்

**அப்பா**- ஏன்?

**மகன்**- கணினி படிச்சாத்தான் வேலை கிடைக்குமென சேர் சொல்லுறார். அப்புறம் நான் எதுக்குப் படிக்கனும்...?

**அப்பா**- ஆ...! அப்படியா???

(பல வருடங்கள் கழித்து)

**மகனின் மகன் (பேரன்)**- தாத்தா! இனிமேல் கணினி படிச்சாத்தான் வேலை கிடைக்கும்

**தாத்தா**- அப்ப..... நீ படிச்சா வேலை கிடைக்காதா???

# தைப்பொங்கல்



மீனா வீட்டில் தைப்பொங்கல் முடித்து, சூரியனுக்குப் படையலிட்டு அனைவரும் வணங்கி நின்றனர். வருவாய் வருவாய் சூரியனே வான விளக்கே வணங்குகிறோம். இருளைப் போக்கி ஒளிதருவாய் இறைவன் அருளே வணங்குகிறோம் என்று பாடிக் கொண்டிருந்தார் தாத்தா. ஆனால், மீனாவின் மனம் முழுதும் சியானியின் நினைவு தான். அவர்கள் வீட்டிலும் பொங்கினார்களா என்று அறியும் ஆவல் அவளுள் இழையோடியது.

சியானியும் மீனாவும் உயிர் நண்பிகள். ஒன்றாகவே பாடசாலை சென்று வருபவர்கள். வெள்ளிக்கிழமை பாட வேளையில், வீட்டில் தைப்பொங்கல் செய்வோர் கை உயர்த்துங்கள் என்று வகுப்பாசிரியை கேட்டபோது, சியானியைத் தவிர அனைவரும் கை உயர்த்தினர். அவளைப் பார்த்ததும், மீனாவுக்கு மிகுந்த பரிதாபம் ஏற்பட்டது.

சியானியின் தந்தை போரில் உயிரிழந்து விட்டார். அவளையும் சகோதரனையும் தாயார்தான் வேலைக்குச் சென்று வளர்த்து வருகிறார். இந்த நிலையில், அவர்களால் எப்படிப் பொங்கல் செய்ய முடியும்?

அவர்கள் வீட்டிலும் பொங்கல் செய்ய வேண்டும் என்று நினைத்த மீனா, ஒரு காரியம் செய்தாள். தான் சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருந்த பணத்தின் மூலம் பொங்கலுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் வாங்கியதுடன், மிகுதிப் பணத்தை ஒரு பையில் இட்டு ஒட்டினாள். இவற்றுடன், 'உங்கள் வீட்டிலும் பொங்கல் பொங்கட்டும்,' மனை தன்னில் மங்கலம் தங்கட்டும் இனிய வாழ்த்துக்கள்– அன்புடன் தேவதை என்று எழுதப்பட்ட கடிதத்தையும் எடுத்துச் சென்று எவருக்கும் தெரியாமல் சியானி வீட்டு வாசலில் வைத்துவிட்டு வந்து, தன் செயலைப் பெற்றோரிடம் கூறினாள். தம் மகளைக் கட்டியணைத்து உச்சி மோந்தனர் பெற்றோர்கள்.

தீபத்தை கண்ணில் ஒற்றி வணங்கு மீனும்மா என்ற தாத்தாவின் குரல் கேட்டு, நிஜவுலகம் மீண்டாள் மீனா. பூசை வழிபாடு முடித்து, திருநீறு நெற்றியில் தரித்து, அனைவரும் பொங்கல் உண்டு மகிழ்ந்தனர். அயலவர்களுக்கும் பகிர்ந்தளித்தனர். சியானிக்கு பொங்கல் எடுத்துச் செல்ல ஆயத்த மானாள் மீனா. அச்சமயம், அகத்திலும் முகத்திலும் மகிழ்ச்சி பொங்க– அவர்கள் வீட்டுக்குப் பொங்கல் கொண்டு வந்தாள் சியானி. அவளை ஆரத் தழுவி, வாழ்த்துரைத் தாள் மீனா. பிறர் மகிழ்ச்சியில் தன் மகிழ்ச்சியைக் காணும் மீனாவை எண்ணி, வியந்து நின்றனர் பெற்றோர்கள்.

*அதிசயா*





# இதுதான் தன்னம்பிக்கை

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் வந்து நின்றது.

ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

சிரித்துக்கொண்டே அந்த இளைஞன் சொன்னார், இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது.

சிறுவன் முகத்தில் வியப்பு.

உனக்கும் அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா? என்ற அந்த இளைஞன் கேட்டான்.

சிறுவன் சொன்னான், இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகிறேன்.

நம்பிக்கையுணர்வு நல்லெண்ணங்களையே வளர்க்கும்.



# ஓரெழுத்துச் சொற்களும் அவற்றுக்கான ஒத்த கருத்துக்களும்

01. அ- எட்டு
02. ஆ - பசு
03. ஈ - கொடு, ஒருவகைப் பறக்கும் பூச்சி
04. உ - சிவன்
05. ஊ - தசை, இறைச்சி
06. ஏ - அம்பு
07. ஐ - ஐந்து, அழகு, தலைவன், வியப்பு
08. ஓ - வினா, மதகு - நீர் தாங்கும் பலகை
09. கா - சோலை, காத்தல்
10. கூ - பூமி, கூவுதல்
11. கை - கரம், உறுப்பு
12. கோ-அரசன், தலைவன், இறைவன்
13. சா - இறப்பு, மரணம், பேய், சாதல்
14. [illegible] திருமகள்
15. சே - எருது, அழிஞ்சில் மரம்
16. சோ - மதில்
17. தா - கொடு, கேட்பது
18. தீ - நெருப்பு
19. து - கெடு, உண், பிரிவு, உணவு, பறவை இறகு
20. தூ - வெண்மை, தூய்மை
21. தே - நாயகன், தெய்வம்
22. தை - ஒரு மாதம்
23. நா - நாக்கு
24. நீ - நின்னை
25. நே - அன்பு, நேயம்
26. நை - வருந்து, நைதல்
27. நொ - நொண்டி, துன்பம்
28. நோ - நோவு, வருத்தம்
29. நௌ - மரக்கலம்
30. பா - பாட்டு, நிழல், அழகு



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பலன்கள்

**உத்தர நட்சத்திரப் பலன்கள்**

நவக்கிரகங்களில் முதல் கிரகமும், ஒளிக்கிரகங்களில் முதன்மையானதும் உலக உயிர்கள் உற்பத்திக்குக் காரணமான சூரியபகவான் உதித்த நட்சத்திரமும் ஆகும். இதன் அதிபதிக் கிரகம் சூரியன் ஆகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அழகிய கண்களும், கவர்ச்சியான உதடும் உள்ளவர்கள். இவர்கள் தெய்வபக்தி நிறைந்தவர்கள், நல்ல வசதி, செல்வம்–செல்வாக்கும் உடையவர்கள், எப்பொழுதும் படபடப்புடனும், கோபக் குணத்துடனும் இருப்பார்கள். மனைவி மேல் அன்பும் பற்றும் பாசமும் உடைய இவர்கள், கதை, கட்டுரை, கவிதை, எழுதுவதில் ஆர்வம் உடையவர்கள். சற்று செருக்குடன் காணப்படுவார்கள்.

**உத்தரம் : 1ஆம் பாதம்**

நேர்வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் உடைய இவர்கள், நல்ல இறை சிந்தனையும், தெய்வபக்தியும் உடையவர்கள். தன் உற்றார், உறவினர்களை, நண்பர்களைப் பெரிதாக எண்ணிப் போற்றுவர். தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் இவர்கள் பித்த சம்பந்தமான வியாதியால் அவதியுறுவர்.

**உத்தரம் : 2ஆம் பாதம்**

பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட இவர்கள், சபலபுத்தி உடையவர்கள். மற்றவர்களுக்கு எதுவும் ஈயாத கஞ்சத்தனம் உடையவர்கள். மனைவி மேல் பற்றும் மனைவிக்கு அடங்கியும் நடப்பர். பணம் இருந்தும் தரித்திரமாகக் காட்சியளிப்பார்கள். எப்பொழுதும் வெளியே சுற்றும் பழக்கம் உடையவர்கள்.

**உத்தரம் : 3ஆம் பாதம்**

கர்வமான இவர்கள் மனைவி மேல் பற்றும் பாசமும் உள்ளவர்கள். ஆடம்பர செலவு செய்வார்கள். மனதில் நல்ல எண்ணம் இல்லாத இவர்கள் மற்றவர்களை அனுசரித்து நடக்கமாட்டார்கள். குடும்பத்தோடு உறவில்லாமல் வாழ்வர். நண்பர்களால் ஆதாயம் அடைவர்.

**உத்தரம் : 4ஆம் பாதம்**

மற்றவர்களைக் கேலி செய்து பேசுவதில் சமர்த்தர். பிறர் குற்றங்களைக் கண்டு பிடித்து அவர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பர். இவர்களது சொத்துக்களின் மதிப்பை எவரும் அறிய முடியாது. உண்மையை மறைத்துப் பேசும் இவர்கள் மற்றவர்களைத் தூக்கி எறிந்து பேசும் சுபாவம் உடையவர்கள்.

**நாளை**
**தை-04**
செவ்வாய்க்கிழமை -17.01.2017
திதி: பஞ்சமி பி.ப.03.17
நட்சத்திரம்: உத்தரம் பி.இ.04.01
ராகுகாலம்:03.35-05.05 வரை
சுபநேரம்:11.05-12.35 வரை
சண்டேசுரர் குருபூஜை

## "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளைக்கொரு வரம் பெறுவோம்"

மழை பொழியும் மாதம் கார்திகை என்பது இயற்கை நியதி. கார்த்திகை மாதத்தில் எமது உறவுகளுடைய நினைவாக மரங்களை நட வேண்டும் என்பதற்காக வடக்கு சுற்றாடல் அமைச்சால் 2014ஆம் ஆண்டு, கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாக பிர கடனப்படுத்தப் பட்டது.

மரம் நடுகைக்காக அமைச்சு கூறிய காரணங்கள் இரண்டுமே ஏற்றுக்கொள்ளக் கூடியன. இதை எம்மவரும் ஏற்றுக் கொண்டார்கள். பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும், ஏன் வறண்டு போன நிலங்களிலும் ஏராளமான மரங்கள் நடுகை செய்யப்பட்டன. இன்று வரை நடுகை செய்யப்படுகின்றன.

அந்த வகையில் "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்" என்பதை மகுட வாசகமாகக் கொண்ட மரநடுகை மாதத்தின் கடந்த ஆண்டுக்குரிய கருப்பொருள். "சொந்த மண் சொந்த மரங்கள்" என்பதாகும். எமது சொந்த மண்ணில் எம்மோடு சேர்ந்தே பரிணமித்து வளர்ந்த-சொந்த மரங்கள் ஏராளம் உண்டு. எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்க வைத்திருப்பவை மரங்கள்தான். அந்த வகையில் உயிர்ச்செழிப்பின் உயிர் நாடியாக விளங்கும் மரங்களுக்கு கடந்த ஆண்டு மரநடுகை மாதத்தின்போது கூடுதல் முக்கியத்துவம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

"நடுகை செய்வதோடு தொடர்ச்சியாகப் பராமரிப்போம் என்ற உறுதிமொழியுடன் சுற்றாடல் அமைச்சை அணுகும் எவருக்கும் இயன்ற அளவுக்கு மரக்கன்றுகளை வழங்குவதற்குச் சித்தமாயுள்ளதாகவும், எமது மண்ணின் பசுமையையும் எமது வருங்காலத் தலைமுறையின் வளமான வாழ்வையும் பாதுகாக்கும் இந்தப் புனிதமான காரியத்தில் பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், வணக்கத்தலங்கள் ஆகியவற்றோடு, பொதுமக்கள் அனைவரையும் பங்கேற்குமாறு வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கேட்டிருந்தார்.

"வாய்ப்பேச்சில் வீரரடி கிளியே பேசிப்பயன் என்னடி" என்று ஒரு பழமொழி உண்டு, அந்த பழமொழி இவர்களுடைய செயலை உணர்த்துவதாகவே தோன்றுகின்றது.





வேடிக்கையான வெடிப் பேச்சுகளுக்கு மத்தியில் நாம் வாழ்கின்றோம் என்பது வேதனையைத் தருகின்றது.

ஆம்! முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்ட பல தேக்கு மரக்காடுகள் அழிக்கப்பட்டு வந்தமை அனைவருக்கும் தெரிந்த விடயம். வனவளத் திணைக்களத்தினரே தேக்கு மரங்களை வெட்டுகின்றார்கள், இதை மறுக்க முடியாது. எதற்காக வெட்டப்படுகின்றன என்று கேட்டால், தேக்கு மரங்களை வெட்டும்போதே வீரியம் பெறுகின்றன என அவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த காலங்களில் அதிகளவான மழை பெய்ததால் மாவட்டத்தில் வறட்சி இல்லை. எனினும், விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு-பராமரிக்கப்பட்ட தேக்கு மரங்கள் அண்மைக் காலமாக வன இலாகாத் திணைக்களத்தின ரால் அழிக்கப்படுகின்றன. தீவைத்து கொளுத்தப்படு கின்றன.

இது தொடர்பாக மக்களும், விவசாயிகளும் அதிகாரிகளிடம் முறையிட்டார்கள், பத்திரிகைகள் மூலம் உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்கள். இருந்தும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. இப்போதும் முள்ளியவளைப் பகுதியில் உள்ள தேக்கங்காட்டில் மரங்கள் வெட்டப்படுகின்றன. அங்கு வீரியம் குறைந்த சிறிய மரங்கள் கூட வெட்டப் படுகின்றன. மழைவீழ்ச்சி குறைந்துள்ள இந்தக் கால நிலையில், இவ்வாறு மரங்களை வெட்டுவது பெரிதும் சூழலுக்குத் தீங்கானது.

மழை பெய்கின்ற மாதத்தில் மரங்களை நடுகை செய்ய வேண்டும் என்றும்- உயிர்நீத்த உறவினர்களுடைய நினைவாக மரங்களை நடுகை செய்யவேண்டும் என்றும்- மேடைப் பேச்சுக்களில் முழங்கித் தள்ளிய அமைச்சர், கொழும்பு அரசு மரங்களை வெட்டுகின்றது என்றவுடன் பம்முவதாகவே இது அமைகின்றது. இங்கு கூறப்படும் விடயம், கொழும்பு அரசுடன் தொடர்பு பட்டதாக இருந்தாலும், அது எமது மாகாணத்துடனும் தொடர்புடையது. எமது போராட்டத்துடன் தொடர்புடையது. இது அமைச்சருக்கு புரியவில்லையா? அல்லது நாம் எமது வேலையைப் பார்ப்போம் என்று தனது அரசியலை முன்னெடுகின்றாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.எஸ்.சிவஞானராஜா

# எழுத வாசிக்கத் தெரியாதோர் தொகை உலகில் நூறுகோடி

நூறு மாணவர்களுக்கு இருவர் என்ற அடிப் படையில் முழுமையாக எழுத, வாசிக்கப் படிக்க, கிரகிக்க, விடை எழுத, விலாசமிட, பேச, கதைக்க, முடியாதவர் களாக இலங்கையில் கடைசி வாங்கில் ஒதுங்கியுள்ளனர். இவர்களது பின்ன ணியை எவருமே ஆராய் வில்லை. அல்லாம லும் இவர்களது முன்னேற்றத்தில் துணிந்து இறங்கி மனம் வைத்து அவர்களை ஆளாக் கியதும் இல்லை. எழுத் தறிவிக்கும் பணியில் வெற்றி கண்டது மில்லை.

1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற கணக்கெடுப்பின் பிரகாரம், அதாவது இற்றைக்குப் பதினேழு வருடங்களுக்கு முன்னதாக 'யூனிசெப்' தெரிவித்த செய்தியை உதயன் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 17ஆம் திகதி பிரசுரித்திருந்தது. இது வொரு கவலைதரும் செய்தியாகும். ஐக்கிய நாடுகள் சபை இந்த விடயத்தில் அதீத கவனமும், அதிக சிரத்தையும் எடுக்காவிட்டால், உலகம். திசைமாறிப் போவதை எவராலும் தடுக்க முடியாமல் போய் விடும். இதற்கு மேலாக ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு ஆசானும், ஒவ்வொரு தமிழ் மாநாடும், ஒவ்வொரு பன்மொழிப் பேரவையும், ஆபிரிக்கா தென் கிழக்காசிய நாடுகளும் மற்றும் வளர்ந்த, வளர்ந்து வரும் நாடுகளும் கூடிய கவனம் எடுக்காவிடின், உலக மக்கள் அனைவருமே கண்ணீர் வடிக்க வேண்டிவரும் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகிறது.

2016 இல் 116 கோடியாக எட்டிவிடும் என்பது ஒரு கணிப்பீடாகும். ஆபிரிக்கா மத்திய கிழக்கு நாடுகள், இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவுகள் மியன்மார், தாய்லாந்து, தென்னமெரிக்கா நாடுகள், நேபாளம், பூட்டான், சீனா, இந்தோனேசியா, பலஸ்தீனம், ஈரான், ஈராக், துருக்கி, சிரியா போன்ற நாடுகளில்தான் மேற்படி தொகை பகிரப்படுகிறது. எல்லாம் வல்ல ஆண்டவனின் கிருபா கடாட்சம் இவ்வாறான வர்களுக்கும் கிடைக்க வேண்டுமென மன் றாடுவோமாக. எழுத வாசிக்க படிக்க இயலாத பிள்ளைகளுக்காகப் பழைய மாணவர் சங்கம், தமிழ்ச் சங்கங்கள், ஆலய தரும பரிபாலன சபைகள், சனசமூக நிலையங்கள் ஊருக்குப் பெரியவர்கள் மனமுவந்து கரிசனை காட்டும் பட்சத்தில் எமது நாட்டிலும், எமது மண்ணிலும், எமது மொழி நிச்சயம் வனப்பும், வாழ்வும், வளமும் பெறும் என்பது திண்ணமே.

**கடிதம்**

படித்தவர்களிலும் படிக்கும் மாணவர்களிலும் (எல்லோருமல்ல) ஒரு தொகுதியினர் இன்று வரைக்கும் ஒருகடிதம் எழுதவோ, படிக்கவோ, வாசிக்கவோ, பதில் எழுதவோ, விலாசம் எழுதவோ, பதிவுத்தபால் அனுப்பவோ, தந்தி எழுதி அனுப்பவோ, முத்திரை ஒட்டவோ முடியாதவர்களாகி இடாம் பீகமாய் அல்லாத பட்சத்தில் வசதிகளற்றவர்களாக வறுமையில் ஒதுங்குபவர்களாக வாழ்கிறார்கள். பதிவுத் தபால் அனுப்ப வந்த ஒருவர் சொந்த முகவரி எழுதாமலும், எழுத முடியாமலும் எப்படி எழுத வேண்டும் என்றும் தெரியாமலும் ஒருகடித உறையில் எந்தப் பக்கத்தில் எழுத வேண்டுமென்ற நியதி தெரியாமலும் அவதிப்பட்டதை நான் மிக அண்மையில் ஒரு தபாலகத்தில் கண்டு மிகவும் வருந்தி உதவி புரிய வேண்டி வந்தது. வெட்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், அவர் ஓர் அரசஊழியர். பிறகு என்ன சொல்லவும் வேண்டுமா? ஒரு கடித உறையில் முகப்பு நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். யார்? யாருக்கு? முத்திரை விடயம் ஆகிய பகுதிகள் முகப்பை அலங்கரிக்கும் உதாரணமாக யாருக்கு என்ற பகுதி முகப்பின் வலது பக்க கீழ் மூலையில் எழுதப்படுவது. திரு, திருமதி, செல்வி, செல்வன், வணக்கத்துக்குரிய, கௌரவ, கலாநிதி, கௌரவ, கலாநிதி, வைத்திய கலாநிதி ஆகிய முன் அடைமொழிகளில் ஏதாவதொன்றை எழுதப்படும் பெயருக்கு முன்னதாக எழுதி கடிதத்துக்கு உரியவரின் முழுப் பெயரை எழுதி மொட்டையாக விட்டிடாமல் அவர்கள் என்றும் குறிப்பிட்டு அந்த வரிக்குக் கீழே உரியவரின் வீடு எந்த வீதியிலுள்ளது என்றும் அதன் முன்னுக்கு இலக்கத்தையும் குறிப்பிட்டு அடுத்த வரியில் தபால் சென்றடைய வேண்டிய இடத்தையும் எழுதிய பின்னர், இடதுபக்கக் கீழ் மூலையில் யாரால் அனுப்பப் படுகிறதோ அவரது முகவரியும் மேல்பக்க வலது மூலை முத்திரையும் மேல்பக்க இடது மூலையில் உள்ளடக்கப்பட்ட விடயத்தின் சுருக்கமான விவரமும் இடப்பட வேண்டும். எவ்வாறு என்று இப்பொழுது பார்ப்போம்.

ஒருநாட்டில் முத்திரையைத் தலைகீழாக ஒட்டினால் குற்றம் அறவிடப்படும். பணமும் கொஞ்ச நஞ்சமல்ல!

நூறு மாணவர்களுக்கு இருவர் என்ற அடிப் படையில் முழுமையாக எழுத, வாசிக்கப் படிக்க, கிரகிக்க, விடை எழுத, விலாசமிட, பேச, கதைக்க, முடியாதவர்களாக இலங்கையில் கடைசி வாங்கில் ஒதுங்கியுள்ளனர். இவர்களது பின்னணியை எவருமே ஆராய்வதில்லை. அல்லாமலும் இவர்களது முன்னேற்றத்தில் துணிந்து இறங்கி மனம் வைத்து அவர்களை ஆளாக்கியதும் இல்லை. எழுத்தறிவிக்கும் பணியில் வெற்றி கண்டது மில்லை. வேறு பாதை வகுத்ததுமில்லை. எனவே சின்னச் சின்ன விடயங்களில் நாம் தோற்றுப்போவதை எண்ணாமல் பெரிய பெரிய விடயங்களில் வெற்றிபெறக் கங்கணம் கட்டி நிற்கின் றோம். அந்தச் சின்னச்சின்ன விடயந்தான், இன்று உலகிலேநூறுகோடிக்கு மேலே எழுத, பேச வாசிக்க முடியாதவர்களாக இருக்கின்ற பெரியதொரு பூதாரகரமான பிரச்சினையாக மாறியுள்ளது. இதைத் தீர்க்க முடியாதா?

**விழவு**

இலங்கைமுழுவதுமாகக் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட நான்கு இலட்சம் பேர் எழுத வாசிக்க கிரகிக்க விடையளிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் சராசரியாக நாற்பத்தையாயிரம் பேர் அடங்குகின்றனர். இதில் பிள்ளைகளின் தொகையாக ஒவ்வொரு மாகாணத்திலும் மூவாயிரம் பேர் இருக்கிறார்கள். வடமாகாணத்தில் மட்டும் ஐந்து மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட அறுநூறு பேர் உள்ளனர். இவர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானதாகும். இவர்களுக்கு ஏற்ற ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மேடைகளால் மட்டும் இந்தப் பிரச்சினை தீரவாய்ப்பில்லை! தயவு செய்து இறங்கி வாருங்கள். இரங்குவோம் - திட்டமிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WhatsApp

என்கிட்ட
ஜெராக்ஸ் கடை
வச்சி இருக்கிற நண்பர்
ஒருத்தர் வந்து வெள்ளை ஏ4
பேப்பர் விலை ஏறிடுச்சி எப்படி
சமாளிக்கிறது? என்று யோசனை கேட்டார்.

நான் சொன்னேன்...
"ஒரே ஒரு ஏ4 பேப்பர் வாங்கி உங்களுக்கு
எவ்வளவு வெள்ளை பேப்பர் வேணுமோ
அவ்வளவு செராக்ஸ் காப்பி எடுத்துடுங்க!"

அன்னைக்க கடைய மூடிட்டு
போனவர்தான் ஆளையே
காணாம்...

எப்படி என் யோசனை...

கருணைமலர் @karunaimalar
சில நிராகரிப்புகள் திமிர்
என்று தவறாக அர்த்தம் பெறுகின்றன!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | | | 8 | 6 | |
| 3 | | | 2 | 8 | | | | |
| | 9 | | | | | | 1 | 4 |
| 5 | | | | 9 | | | | |
| | 8 | 4 | | | | 5 | 9 | |
| | | | | 5 | | | | 3 |
| 1 | 3 | | | | | | 8 | |
| | | | | 2 | 6 | | | 1 |
| | 4 | 6 | | | | | 3 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 4 | 7 | 9 | 3 | 6 | 8 |
| 4 | 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 5 | 9 |
| 9 | 7 | 8 | 6 | 3 | 5 | 2 | 4 | 1 |
| 6 | 8 | 4 | 9 | 5 | 7 | 1 | 3 | 2 |
| 3 | 5 | 9 | 8 | 1 | 2 | 4 | 7 | 6 |
| 7 | 2 | 1 | 3 | 6 | 4 | 9 | 8 | 5 |
| 1 | 6 | 7 | 5 | 2 | 3 | 8 | 9 | 4 |
| 5 | 4 | 3 | 1 | 9 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 9 | 2 | 7 | 4 | 6 | 5 | 1 | 3 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல யமானது.

வருசா வருசம் கலண்டர் தான்
புதுசு புதுசா மாறுது...



நம்ம வாழ்க்கையில ஒரு மாற்றமும்
வரமாட்டேங்குது...

நகைக் கடையில் கொள்ளை- செய்தி



அட நகை வாங்கிறவங்களும்
இதையே தான் சொல்றாங்க

விளம்பரங்களில் வரும் அம்மா
மட்டும் தான் முத்தமிட்டு தலைகோதி
குழந்தைக்கு ஹார்லிக்ஸ் தருவாங்க
போல...



பக்கத்து வீட்டில எல்லாம் "சனியனே! இதை
சீக்கிரம் குடிச்சுதொலை"யென்ற
சவுண்டு தான் வருது...

"இரவுப் படிப்பின்"
நான்கு நிலைகள்...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** இனிய பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

**இடபம்:** குடும்ப விடயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலத்தைப் பாதுகாக்கவும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திக்க நேரிடலாம்.

**மிதுனம்:** நண்பரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**கடகம்:** சிலரது பேச்சு மன சங்கடத்திற்கு ஆளாக்கலாம். தொழில் வியாபாரத்தில் சராசரி பணவரவு கிடைக்கும். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**சிங்கம்:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** சுயநலத்துடன் சிலர் உங்களுக்கு உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டாரின் ஆதரவைப் பெறுவர். உடல்நலனில் கவனம் தேவை.

**துலாம்:** அவமதித்தவரும் இணக்கமுடன் நெருங்கி வருவர். வருமானம் பன்மடங்கு உயரும். பணி யாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்ப பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் உயரும். உறவினரின் தேவையறிந்து உதவுவீர்கள். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**தனுசு:** மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**மகரம்:** மற்றவர் விமர்சனத்தைப் பொருட்படுத்த வேண்டாம். தொழில் வியாபாரத்தில் குறுக்கிடும் தடைகளைச் சரி செய்வீர்கள். லாபம் படிப்படியாக அதிகரிக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கும்பம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**மீனம்:** மனதில் புத்துணர்ச்சி மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

# ஒரே பாடலில் 27 நடிகர்கள்

சாந்தனு, சிருஷ்டி டாங்கே, தம்பி ராமையா, ரவிபிரகாஷ், அப்புக்குட்டி உட்படப் பலர் நடித்துள்ள படம் முப்பரிமாணம். அதிரூபன் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். ராசாமதி ஒளிப்பதிவு, ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைத்துள்ளார். படம் பற்றி அதிரூபன் கூறியதாவது: இது காதல் திரில்லர் படம். கதிர், நிஷா என்ற இரண்டு பாத்திரங்களில் பள்ளிப்பருவத்தில் இருந்து 22 வயது வரை நடக்கும் சம்பவங்களின் தொகுப்புத்தான் இந்தப் படம். வாழ்க்கையில் இரண்டு விடயங்கள் எப்போதும் இருக்கிறது. ஒருவருக்கு சரியெனப்படுவது மற்றொருவருக்கு தவறாகத் தெரியும். மற்றவருக்கு தவறாகத் தெரிவது, பிறருக்கு சரியெனத் தெரியும். இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு முடிவெடுப்பதுதான் மூன்றாவது கோணம். அதைத்தான் படத்தில் சொல்லியிருக்கிறேன். இதுவரை பார்த்த சாந்தனு இதில் வித்தியாசமாக இருப்பார். அதே போல சிருஷ்டி டாங்கே சில படங்களில் நடித்திருந்தாலும் இதில் அவரது நடிப்புப் பேசப்படும். ஜி.வி.பிரகாஷ்குமார் இசை அமைத்திருக்கிறார். பின்னணி இசைக்கு மட்டும் 55 நாள்கள் ஆனது. படம் பார்க்கும்போது எல்லோரும் தங்கள் வாழ்க்கையை இதில் பொருத்திப் பார்த்துக் கொள்ள முடியும். படத்தில் ஒரு பாடலில் 27 நடிகர்கள் பங்கேற்றுள்ளனர். இது வித்தியாசமாக இருக்கும். பொள்ளாச்சி வி.விசு, பொள்ளாச்சி கோல்டு வி.குமார் தயாரித்துள்ளனர். அடுத்த மாதம் படம் வெளியீடு இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்குகள்



## இது புதுசு

மூடிகள் பொருத்தப்பட்ட மண்ணால் உருவாக்கப்பட்ட விளக்குகள் அறிமுகமாகியுள்ளன. இவை 60 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இத்துடன் பல கோண விளக்குகளும் அறிமுகமாகியுள்ளன. பல திரிகளை ஒருங்கே கொழுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 40 ரூபாவிலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## குழந்தைகள் புத்தகம் வாசிப்பது புத்திசாலித்தனத்தையும் ஞாபகத்திறனையும் வளர்க்கும்

சிறு வயதிலிருந்து புத்தகம் படிக்கும் குழந்தைகள் புத்திக்கூர்மை மற்றும் ஞாபக சக்தி கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். கணினி மூலம், அலைபேசிகள் மூலம் நாம் நிறைய விடயங்கள் படிக்கலாம், கேட்கலாம் பார்க்கலாம். ஆனால் பிடித்த ஒரு புத்தகத்தை கையில் வைத்து படிப்பதென்பதே மிகவும் சுகமான ஒரு அனுபவம் என்பது படிப்பவர்களுக்கே தெரியும். அமைதியான ஓர் இடத்தில் அமர்ந்து, புத்தகத்தின் வாசத்தை அனுபவித்துக் கொண்டு படிப்பது மிகவும் ரசனைக்குரிய ஒன்று. ஆனால் ரசிப்பது என்பதைக் கடந்து புத்தகம் வாசிப்பது நம் உடல் மற்றும் மனதின் ஆரோக்கியத்தை வளர்க்கிறது என்பதே சுவாரசியமான உண்மை.

**புத்திசாலித்தனத்தையும் ஞாபகத்திறனையும் வளர்க்கிறது**

சிறு வயதிலிருந்து புத்தம் படிக்கும் குழந்தைகள் புத்திக்கூர்மை மற்றும் ஞாபக சக்தி கொண்டவர்களாக திகழ்கிறார்கள் என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. புத்தகம் வாசிப்பது, டி.வி. பார்ப்பதை விட 50 சதவிகிதம் அதிக வார்த்தைகளை தெரிந்துகொள்ள உதவுகிறதாம். இதனால் இக்குழந்தைகள் வார்த்தை விளையாட்டு, பொது அறிவு போட்டிகளில் இயல்பாகவே அதிகளவில் வெற்றி பெறுகிறார்களாம். தொடர்ந்து புத்தகம் படிப்பவர்களுக்கு வயதாவதால் ஏற்படும் ஞாபக மறதி ஏற்படுவதில்லை. படிக்கும் போது நரம்பு செல்களிடையே தகவல்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பதாலும், புதுப்புது தகவல்களைப் படிப்பதால் புதிய நரம்பு செல்களின் தடங்கள் ஊக்கப் படுத்தப்படுவதாலும் டெமன்ஷியா, அல்சீமர் போன்ற ஞாபக மறதி நோய்கள் தவிர்க்கப்படுகிறது அல்லது அதன் தாக்கம் குறைகிறது.

**உறவுகள் மேம்படுகிறது :**


புத்தகம் படிக்கும் பழக்கத்தினால் பிறருடைய இடத்தில் இருந்து பார்க்கவும், பிறருடன் தொடர்பு கொள்வதில் திறமையும் மேம்படுகிறது.

**தூக்கம் சீராகிறது :**

குழந்தைகளுக்குப் படுக்கும் முன்பு புத்தகம் படித்துக் காண்பிப்பது, பெரியவர்களும் படுக்கைக்குச் செல்லும் முன் படிப்பது உடல் மற்றும் மனதைத் தளர்வடைய வைக்கிறது. இதனால் உறக்கம் நன்றாக வருகிறது. படித்த விடயங்களை ஆழ்மனது உள்வாங்கிக் கொண்டு அசைபோடவும் இது உதவுகிறது.

**குழந்தைகளின் பதற்றம் குறைகிறது :**

புத்தகம் படிக்கும் குழந்தைகள் பதற்றம் இல்லாமல் அமைதியாக அதிக நேரம் இருக்கிறார்கள். வீடியோ கேம் போன்றவைகள் அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதாக இருந்தாலும் ஒருவித பதற்றத்தையும் கிளர்ச்சியையும் தொடர்ந்து அவர்களிடம் ஏற்படுத்தி விடுகிறது. ஆனால் புத்தகம் படிக்கும் போது மகிழ்ச்சி கிடைப்பதுடன் நிதானம், பொறுமை போன்ற குணங்களும் மேலோங்குகின்றன.



## வாயுத்தொல்லை, மலச்சிக்கலுக்கு தீர்வு தரும் சுப்த வஜ்ராசனம்

வாயுத்தொல்லை மற்றும் மலச்சிக்கல் பிரச்சினையால் அவதிப்படுபவர்கள், இந்த சுப்த வஜ்ராசனத்தைத் தினமும் செய்துவந்தால்விரைவில்நல்லபயனைக் காணலாம்.

சுப்த என்றால் மல்லாந்து படுத்தல் என்று பொருள்படும். வஜ்ரம் என்றால் வைரம் என்று பொருள்படும். அதாவது இந்த ஆசனத்தில் இருக்கும் போது கிடையாக வைக்கப்பட வைரம் போல் தோன்றுவதால் இந்தப் பெயர் உண்டாகியிருக்கலாம்.

**செய்முறை :**


பாதங்களின் மேற்பகுதி தரையில்படுமாறு முழங்காலிட்டபடி அமர்ந்திருப்பது வஜ்ராசனம். அப்படியே பின்னுக்குச் சரிந்து கைகளைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டோ அல்லது கைகளை முடிந்த அளவு பின்னால் நீட்டிய நிலையிலோ படுத்திருப்பது சுப்த வஜ்ராசனம் எனப்படும். சாயும் போது' வெளி மூச்சும் நிமிரும்போது உள் மூச்சும் வாங்குதல் சிறப்பு. ச.முத்துப் பிடிப்புள்ளவர்கள், மூட்டுப் பிடிப்புள்ளவர்கள், இதய நோயுள்ளவர்கள் இதனைத் தவிர்க்க வேண்டும்.

**நன்மைகள் :**

தொடை, இடுப்புப் பகுதியிலுள்ள தேவையற்ற சதை மற்றும் கொழுப்பைக் குறைக்கும்.
கூன் முதுகு நிமிரும்.
வயிறு, இடுப்பு என்பன நன்கு நீட்டப்பட்டு உரம் பெறும்.
வாயுத்தொல்லை, மலச்சிக்கலுக்கு நல்ல ஆசனம்.
கால்களை மடக்கி அமர்ந்து பின்னால் முழுமையாகச் சரிய முடியாதவர்கள், கைகளை ஊன்றி அல்லது முழங்கையை ஊன்றி படிப்படியாகச் செய்து பார்க்கலாம்.
மிகவும் சிரமப்பட்டு இந்த யோகா பயிற்சியைச் செய்ய முயற்சிக்க வேண்டாம்.



## ஆண்களுக்கான அழகுக் குறிப்புகள்



சில ஆண்களுக்கு பதின்ம வயதில் ஏற்படும் மிகப்பெரிய பிரச்சினை முகப்பரு. சில நாள்கள் இருந்தாலும் அதன் வடு மாறாது. இதற்குச் சரியான தீர்வு காண சாதிக்காய், சந்தனம், மிளகு இவை மூன்றையும் சேர்த்தரைத்த விழுதை பருக்களின் மீது தடவிவரவும்.

பாசிப்பயறு மாவு, கடலைமாவு சிறிது தயிர் சேர்த்து குளிக்கும் போதும் அல்லது முகம் அலசும் போதும் இந்த விழுதைப் பயன் படுத்தவும்.

**முகம் வறட்சியைப் போக்க:**

கொத்தமல்லி மற்றும் புதினா ஆகியவற்றைச் சேர்த்து கெட்டியாக அரைத்து, முகத்தில் வாரம் ஒருமுறை பூசி வரலாம்.
ஒலிவ் எண்ணெயுடன் எலுமிச்சைச்சாறு கலந்து, முகத்தில் தடவி வந்தாலும் முக வறட்சி மாறும்.
வெயிலில் செல்லும்போது, சன் ஸ்கிரீன் அடங்கிய ஃபேர்னெஸ் க்ரீம் பயன்படுத்தலாம். இதைக் கை கால்களுக்கும் தடவிக் கொள்ள வேண்டும்.
உதட்டுக்கு வேசலீன் அடங்கிய லிப் ஜெல்களைப் பயன்படுத்தவும்.
கை மற்றும் கால்களில் நகங்களை ஒட்ட வெட்டி வைத்திருப்பதே ஆண்களுக்கு அழகு.


**இப்போது ஆடைகளை பற்றிப் பார்ப்போம்**

'ஆள் பாதி ஆடை பாதி' என்பார்கள். ஆண்கள் ஆடைகளைத் தேர்வு செய்யும் போது, நீங்கள் போகவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றி மனதில் கொள்ள வேண்டும். நண்பர்களுடன் போவதாக இருந்தால்சாதாரண உடையே போதுமானது.
நெருங்கிய உறவினர் வீட்டு திருமண நிகழ்ச்சிக்கு போகும் போது சர்வானி நன்றாக இருக்கும்.
சின்ன நிகழ்ச்சிக்கு நீளக் காற்சட்டை அணிந்துகொண்டு அதற்குப் பொருத்தமாக வெள்ளை குர்தா அணிந்தால், கவர்ச்சியாக இருக்கும்.
இன்னும் தென்னிந்திய அழகு கிடைக்க, பட்டுவேட்டியும் ஜிப்பாவும் நல்ல அழகாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு..! மகா நடிகன்



எம் ஸ்லோருக்கும் பாம்பு என்றால் பயம் தான். பார்த்தால் அடித்துக் கொல்லாமல் விடமாட்டோம். ஆனாலும் பாம்பு மனிதனுக்கு எந்தத் தீங்கையும் செய்வதில்லை. எப்போதும் நன்மை தான் செய்கிறது. உணவுப் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் எலிகளை அழிக்கிறது. பொதுவாகவே நாம் பாம்பை கொல்லாமல் விடுவது தான் இயற்கைக்கு செய்யக்கூடியதான மிகப் பெரிய நன்மையாக இருந்து விடமுடியும். பல்லுயிர் ஓம்பலை நாம் செய்தாக வேண்டும்.

நல்ல பாம்புகள் வந்தால் என்ன செய்வது என்பதான கேள்வி எழுகிறதா..? அவற்றைக் கொல்லாமல் விட்டுவிடுங்கள். அவ்வளவு தான். நாம் தொந்தரவு செய்தால் மட்டுமே அல்லது நாம் மிதிக்கும் போதுதான் அவை நம்மைக் கடிக்கிறது. எம்மைத் தேடி வீட்டுக்குள் வந்து கடிப்பது கிடையாது. நாம் அவைகளின் இடங்களை ஆக்கிரமிப்பு செய்வதால்தான் அவை நம் இடத்துக்கு நகர்கின்றன.

நாம் வழி வழியாக கதையாடுவதுபோல எந்த கட்டுவிரியனும் கொம்பேறி மூக்கனும் மனிதன் செத்துவிட்டானா என்று சுடுகாடு வரை வந்திருந்து இருந்து மரத்தில் ஏறிப்பார்ப்பதில்லை. எல்லாம் நாம் உருவாக்கிக் கொண்ட கட்டுக்கதைகள்தான். மூட நம்பிக்கையின் பொழிப்புத் தான்.

பாம்பைப் பற்றி ஏராளமான சுவையான தகவல்கள் உண்டு. அவற் றில் ஒன்றை எடுத்து நோக்குவோம். எம் ஊரில் தண்ணீர் பாம்பு உண்டு. அதே போன்று ஐரோப்பாவில் உள்ள ஒரு பாம்பு ஐரோப்பிய புல்பாம்பு எனப்படுகிறது. இந்தப் பாம்பு விஷத் தன்மை இல்லாதது. தண்ணீரில் ஆசுவாசமாக நீந்தும். வருடத்தின் அதிக நாள்களை குளிர்கால உறக்கத்தினுள் செலவிட்டுக் கொள்கிறன. அசைவின்றி அப்படியே கிடக்கும். உணவு உண்ணாது. மூச்சு விடுவதைத்தவிர எதுவும் செய்யாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இவை எதிராளியிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கென பல அற்புதமான நடவடிக்கைகளைக் கையாளுகின்றது. சிந்தனைத் திறன் கொண்ட மனிதனைப்போல, நடிப்புக் கலையில் தேர்ந்த நடிகன் என்றும்கூட சொல்லிவிட முடியும். குறிப்பாக இவை நீண்ட நேரம் நீருக்குள்ளேயே இருந்து எதிரியிடமிருந்து தப்பிக்கப் பார்க்கும். சில சந்தர்ப்பங்களில் தன் உடலை முடிந்தவரை உப்பிக்கொள்கிறது. பயமுறுத்த சிலசமயம் வேகமாகச் சீறுகிறது. இல்லாது போனால் உள்ளி அல்லது பெருங்காய மணமுடைய மலத்தை வெளியேற்றி எதிராளியை விரட்ட முயற்சிக்கிறது. இந்த செயற்பாடும் பயனளிக்கவில்லை என்று தெரிந்து கொண்டால் மட்டுமே எம்மைப் போன்று போர்க்கால தந்திரத்தை, அஸ்திரத்தை எடுத்து வீசுகிறது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஆக, அந்தத் தந்திரம் என்னவென்பது தொடர்பில் உங்களால் ஊகிக்க முடிகிறதா..? வேறொன்றுமல்ல அந்த புல்வெளிப் பாம்பு செத்ததுபோல நடிக்கிறது. தனது உடம்பைத் திருப்பி போட்டுக் கொள்கிறது. வாயைப் பிளந்து, நாக்கை வெளியில் நீட்டி, உண்மையாகவே செத்துவிட்டதுபோல 15 நிமிடங்கள் வரை மனிதர்களை மிஞ்சிய நடிப்புத் திறனை வெளிப்படுத்துவதாக சொல்லப்படுகிறது.

## மரண அறிவித்தல்



### திருமதி நல்லம்மா தம்பிராசா

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தம்பிராசா 13.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பிராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கமுத்து மற்றும் இராசம்மா, செல்லத்துரை, அன்னபூரணம், நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமலேஸ்வரி, பரமேஸ்வரன், சர்வேஸ்வரன், குகனேஸ்வரி, தர்மேஸ்வரி, யோகேஸ்வரன், இராஜேஸ்வரி, மகேஸ்வரன், காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் குனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிவராஜசிங்கம் மற்றும் யோகராணி, ஞானசக்தி, தர்மகோகிலம், சண்முகராசா, பவநந்தி, நகுலேஸ்வரன், மகாலட்சுமி, சிவாஜினி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

077 979 7407

(J/7394)
(12.17.18.)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 10 . 1922

மறைவு 12 . 01 . 2017

### நகுலாம்பிகை அம்பிகைபாகன்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை அம்பிகைபாகன் 12.01.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்ரமணியம் - பவளம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி சுப்ரமணியம், மகேஸ்வரி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அம்பிகைபாகனின் (வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் முன்னாள் அதிபர்) அன்பு மனைவியும்,ஆனந்தகுமாரசாமி (UK), காலஞ்சென்ற பூங்கோதை மற்றும் பாலசுப்ரமணியம்(USA), செந்தில்செல்வன் (Canada), கெளரி (USA)ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சர்வேந்திரன் மற்றும் சரோஜாதேவி (UK), காயத்ரி (USA), லோகேஸ்வரி (Canada), நவானந்தன் (USA) ஆகியோரின் அன்பு மாமியாரும், சரவணபவன், சங்கரா, வித்தியா, நகுலன், பிரணவன், நித்தியா (USA), அபிராமி, ஆரணி (UK), குருபரன், அம்பிகாபரன் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராஜராஜன், கிறிஸ்ஸான் (UK), ரிபேக்கா, இலேன், நிமலன் (USA), ராமலிங்கம் (J.P- சுன்னாகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சரிக்கா, ரக்சான், அரவிந்த், மாயூரி (UK), லலிதா, ரோகான், மயில், ஓவியா, கலியான், நீலன் (USA) ஆகியோரின் அன்புப் பூட்டியும், Dr. பத்மநாதனின் அன்புச் சின்னக்காவும், கன்னம்மா குடும்பம் ஆகியலட்சுமி, கோபி, முரளி ஆகியோரின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லமான 'மணிமனை' மல்லாகத்தில் நடைபெற்று பின்னர் மல்லாகம் கத்துப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மணிமனை',
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/7672)
(11,18)

021 720 0147

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தேவி சிவஞானம்



தோற்றம்: 01.05.1918
மறைவு: 10.01.2017

யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவி சிவஞானம் 10.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவஞானத்தின் (சட்டத்தரணி) ஆருயிர் மனைவியும் ஞானதேவி (லண்டன்), குலநாயகம் (ஜேர்மனி), கெங்காதேவி (லண்டன்), காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நிர்மலதாசன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), மகேசன் (கனடா), சிறீராம்(கனடா), கணேசன் (நியூயோர்க்),கலாதேவி (லண்டன்), சிறிஜெயதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவஞானசேகரம் மற்றும் செல்வரஞ்சிதம், சுப்பிரமணியம், ஜெயதேவி, லலிதாதேவி, பவானி, சுகுணா, சுசித்திரா, சாந்தா, சிவானந்தன், நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஞ்சன், மோகன், கீர்த்தி, கல்யாணி, ஜெயகணேசன், தனுயா, கௌசல்யா, கரணன், கவிதா, செலினா, செல்வின், பாரதி, ராங்கன், உமா, ஈசன், சங்கீதா, மயூரன், பைரவி, அபிராம், மகிழினி, மிலானி, வானதி, கரிசன், சியாமினி, சுபன், அரன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் லேயா, மாயா, றியா, சந்தோஸ், சியாமினி, ரோசினி, பிரவீன், ராகவி, மயூரா,லக்ஸ்மன், அனியா,அலக்சா, மயிலன், வேலன், பழனி, ஜெயசிவன், திரன், சாரு ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(J/7394)
(12.17.18.)

| | |
|---|---|
| சிறிஜெயதேவி - பிரித்தானியா: | +442030160098 |
| | +447540049790 |
| ரவீந்திரன் - பிரித்தானியா: | +441642788819 |
| Mrs. சேகரம் - பிரித்தானியா: | +447929555737 |
| குலநாயகம் - ஜேர்மனி: | +49421531024 |



### வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை செபஸ்ரியன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - கூட்டுறவு அச்சகம் )

இல.27, மாட்டின் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை செபஸ்ரியன் 14.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பிரான்சிஸ்கா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான எட்வின் டி சில்வா - யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற நீற்றாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்ரன் நைனஸ் ஜெயக்குமாரன், பற்றிக்டெஸ்மன், யோசவ் ஜெராட் மற்றும் பெனடிக்ராபிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, லலிதா, காலஞ்சென்ற அருள்நேசன் மற்றும் பற்குணராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்டாலின், விமேதா, சஜீவீ, அன்றூநெவின், ஒஸ்மன், விநோதராஜா, மக்சிமீலியன், பற்றிசியாசுஜீவீ, நோபேட் அமல்ராஜ் பிரசாத், ஜிம்கெலின், யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெரோன், ரிதிக்சன், அரவிந் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.01.2017) திங்கட்கிழமை யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்துக்கு பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.27, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/7694)
(11,18)
021 222 8195, 077 291 9254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Galaxy Star
வெற்றி வாரம் 127 திகதி 15.01.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 30,51,57,59
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,403,445 /-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 15.01.2017 வெற்றி வாரம் 2083 ஊதா
வெற்றி இலக்கங்கள் 16 18 44 52
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 6, 509, 090/=
2017.01.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
57 60
டபிள் சான்ஸ்
1919

## கண்ணீர் சொரிகின்றோம்



மலர்வு 28 . 06 . 1963

உதிர்வு 14 . 01 . 2017

மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த
**திரு. ஐ.சிவராசா** அவர்களின் அன்பு மனைவி

# சிவராசா ரோகினி

**பார் போற்றும் உத்தமியாய்
பாரினிலே வாழ்ந்திருந்த குலவிளக்கே
பாதி வழியில் எம்மைவிட்டு நீயும்
பரிதவிக்க சென்றதேனோ !
மண்ணில் உள்ள சொந்த மெலாம்
மண்ணுக்கே சொந்தம் என்று - நீயும்
மண்ணுலகில் எம்மைவிட்டு
மறைந்ததனை எப்படி மனதில் சேர்ப்போம்!**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் அவர் கணவருக்கும், குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அருள்விநாயகர் றேடர்ஸ்**
**(106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்),**
**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
**(262, கண்டி வீதி, சாவகச்சேரி),**
**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**
**(108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்),**
**அருள் நிலா நகைமாடம்**
**(74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)**

**உரிமையாளரும்,
குடும்பத்தினரும்,
ஊழியர்களும்.**

**மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறுவோர் விவரம்.**

| பரிசு | சீட்டு இலக்கம் | பெயர் / முகவரி |
|---|---|---|
| 01 | 02207 | சண்முகராகவன்- கவிசயன். லண்டன் |
| 02 | 03594 | நாகலிங்கம் அரவிந்தன், 4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு |
| 03 | 02894 | கோ. நிலுக்சன், முள்ளியவளை |
| ஆறுதல் பரிசுகள் | | |
| 1 | 08590 | த. ஶ்ரீபுஸ்பநாதன், 7ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு |
| 2 | 06898 | தாரணி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம். |
| 3 | 09133 | ஜனார்த்தனன் றாஜ்குமார் 1 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. |
| 4 | 03831 | வ.பிரவீன், மூங்கிலாறு, உடையார்கட்டு |
| 5 | 08615 | விக்கினேஸ்வரன் |
| 6 | 03358 | தில்லை நடராசா- சிறிக்குமார். |
| 7 | 01419 | பழையமாணவர் சங்கம் - லண்டன் |
| 8 | 05952 | பொ. சிவலிங்கம், ஆலடி, உடுவில், மானிப்பாய். |
| 9 | 09598 | அரிஸ்போன் சொப், புதுக்குடியிருப்பு. |
| 10 | 09083 | சிவரத்தினம்-குகப்பிரியா 4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. |
| 11 | 04591 | T.J.A பான்சி சொப், புதுக்குடியிருப்பு. |
| 12 | 08598 | த. ஶ்ரீபுஸ்பநாதன், 7 ஆம் வட்டாரம்., புதுக்குடியிருப்பு. |
| 13 | 00804 | - |

## யாழ்.குடாநாட்டில்...

சாலையில் சேர்க்கப்பட்டனர். குடாநாட்டில் சில வார அமைதியின் பின்னர் மீண்டும் தலை தூக்கியுள்ள வாள் வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மக்கள் அச்சமும் - பீதியும் அடைந்துள்ளனர்.

அச்சுவேலி தெற்கு கரதடி, ஏழாலை வடக்கு, அரியாலை முள்ளிப் பகுதியிலேயே இந்த மோதல்கள் - வாள்வெட்டுச் சம்பவங்கள் நடைபெற்றன.

அச்சுவேலி தெற்கு கரதடியில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே நேற்று இரவு 7 மணியளவில் நடந்த மோதலில் 7 பேர் படுகாயமடைந்தனர். அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவுக்கும், ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவுக்கும் நேற்றுமுன்தினம் கைகலப்பு நடைபெற்றுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே நேற்று இரவு இந்த மோதல் சம்பவம் நடைபெற்றதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த இளைஞர்கள் குழுவினர், அச்சுவேலி தெற்கு கரதடிக்குச் சென்று மோதல்களில் ஈடுபட்டதாக முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

இந்த மோதல்களின் போது, வாள் வெட்டில் காது, மூக்கு, கண் என்பன துண்டாடப்பட்ட நிலையில் இளைஞர் கள் 7 பேர் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக உட னடியாகவே அவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டனர்.

அரியாலை முள்ளிப் பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் இரு இளைஞர் குழுக்களுக்கு இடையே மோதல் நடைபெற்றது. இதன் போது வீடுகள் மீது கல் வீச்சுத் தாக்குதலும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. வாள் வெட்டில் காயமடைந்த 4 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்வதற்குள் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞர்கள் சிலர் தப்பிச் சென்று விட்டனர்.

ஏழாலை வடக்கில் நேற்றிரவு 7 மணியளவில் காரில் சென்று கொண்டிருந்தவர்களை, மூன்று இளைஞர்கள் மறித்துள்ளனர். அவர்களிடம் பணத்தைக் கேட்டு மிரட்டியுள்ளனர். கத்தி, வாள் ஆயுதங்களைக் காண்பித்து அவர்கள் மிரட்டியும் காரில் இருந்தவர்கள் பணம் வழங்க வில்லை. இதனையடுத்து காரில் பயணம் செய்தவர்களை தாக்கியுள்ளனர். மயானத்தில் கிரியை முடித்து திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தப் பகுதி கிராம அலுவலர் மீதும், மூவர்கொண்ட இளைஞர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு உடனேயே தகவல் வழங்கிய போதும் இரண்டு மணி நேரத்தின் பின்னரே சம்பவ இடத்துக்கு அவர்கள் வருகை தந்ததாக அந்தப் பகுதி மக்கள் குற்றம் சுமத்தினர்.

யாழ். குடாநாட்டில் சில வாரங்களாக வாள்வெட்டுச் சம்பவங்கள் ஓய்ந்திருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம் திடீரென மூன்று இடங்களில் வாள் வெட்டுச் சம்பவம் நடைபெற்றமை மக்களை மீண்டும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

(வ-5-11-101-106)

**இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு**
1kg இறைச்சிக்கோழி 300/= ரூபா
1kg கோழி இறைச்சி 450/= ரூபா
புனித அந்தோனியார் கோயில் முன்பாக
தொடர்பு : 077 491 1751
ஓடர் கவனிக்கப்படும்.
ஊர்காவற்றுறை. (J.7698) (14,17,18) RATNAM

**விவசாயி தேவை**
வட பகுதியில் இயற்கை விவசாயத்தை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட நவீன பண்ணையொன்றில் விவசாய வேலைகளைத் தாமே செய்யவும், அதேவேளை மற்றவர்களை மேற்பார்வையிடவும் உற்சாகமான விவசாயி ஒருவர் தேவை. விவசாயத்தில் அனுபவம் பெற்றோர், விவசாயம் கற்றோர், விவசாயத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றோர் உட்பட எவரும் விண்ணப்பிக்கலாம். முழு விவரங்களுடன் எதிர்வரும் சனிக்கிழமைக்குள் எழுத்து மூலம் விண்ணப்பம் அனுப்பவும்
முகவரி: மாதிரிப் பண்ணை, SLS Trust, நெசவுநிலைய வீதி, மாவிட்டபுரம் கிழக்கு, தெல்லிப்பழை.
email: slstrust@hotmail.com (J.7997) (13.16.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
**திரு. ச. கருணாகரன்**
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி **ரோகினி சிவராசா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம்,
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

## முதலாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 28.01.2016 இறைபதமடைந்த எமது அன்புச் செல்வம்
அமரர் **நல்லையா ரூபலக்சி**
(கிராம சேவையாளர் -உடுவில்)
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (16.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கசபை வீதி, மானிப்பாய். குடும்பத்தினர்.

**பெண் உதவியாளர் தேவை**
சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கிநின்று பணிபுரியக்கூடிய பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
071 519 6116

**பணிப்பெண் தேவை**
சிறியகுடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரியக்கூடிய 30 - 35 வயதுக்குட்பட்டவர் தேவை.
077 565 9888/ 077 536 9798

**வேலைவாய்ப்பு**
- துப்புரவு பணியாளர்
- Laundry (சலவைசெய்பவர்) பணியாளர்
- சமையல் உதவியாளர்
- வாகன ஓட்டுனர்
- மதுபான விற்பனையாளர்

ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
**கிறீன் கிறாஸ் ஹோட்டல்**
No. 33, ஆசீர்வாதம் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## 13ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்



திருமதி
**லில்லிகிறேஸ் தேவசகாயம்**

மலர்வு 28.12.1924 உதிர்வு 16.01.2004

உயரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்குப் புகழ் சேர்த்து
எம்மை விட்டகன்று பதின்மூன்றாண்டுகள் ஆனாலும்
அழகிய நினைவுகள் அழியவில்லை மனதைவிட்டு அம்மா!

இல. 28, நக்கா ஒழுங்கை,
சண்டுக்குளி.

**பாசத்துடன் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்ஸ்ஆப்பில் அனுப்பும் செய்தியை யார் வேண்டுமானாலும் படிக்கலாம்

நியூயோர்க், ஜன. 16

வாட்ஸ்ஆப்பில் அனுப்பப்படும் குறுந்தகவல்களை மற்றவர்களும் பார்க்க முடியும் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் இதனை வாட்ஸ்ஆப் நிறுவனம் மறுத்துள்ளது.

உலகில் மிகக் குறுகிய காலத்தில் பிரபலமான அரட்டைச் செயலி வாட்ஸ் ஆப். இன்று உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கானோர் பயன்படுத்தும் முகநூல் மற்றும் வாட்ஸ்ஆப்பில் அனுப்பப்படும் குறுந்தகவல்களை, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரியாமல் மற்றவர்களும் படிக்க முடியும் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது. இது பயனர்களின் கருத்து சுதந்திரத்துக்கு எதிரானது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. ஆனால் இந்தத் தகவலை வாட்ஸ்ஆப் நிறுவனம் மறுத்துள்ளது.

வாட்ஸ்ஆப் சிக்னல் ப்ரோடோகால் மூலம் வாட்ஸ்ஆப்பிற்கு என்க் ரிப்ன் வசதி வழங்கப்படுகிறது. இதில் புதிதாக வந்துள்ள என்க்ரிப்ன், வாடிக்கையாளர்கள் ஆப்லைனில் இருக்கும் போதும் கூட வாட்ஸ்ஆப்பை இயக்க வழி செய்கிறது என்றும், இது சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கே தெரியாமல் நடைபெறுவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் அப்படி ஒரு தொழிநுட்பமே வாட்ஸ்ஆப்பில் இல்லை என அந்தநிறுவனம் தெரிவித்துள்ளது. (வ)

# பிரேசில் சிறையில் கலவரம்; 10 கைதிகளின் தலை துண்டிப்பு

ரியோ டி ஜெனிரோ, ஜன. 16

பிரேசில் சிறையில் ஏற்பட்ட கலவரத்தில் 10 கைதிகள் தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்டனர்.

பிரேசில் நாட்டின் வட கிழக்கு நகரமான நடாலில் அல்காகஷ் என்ற மிகப்பெரிய சிறைச்சாலை உள்ளது. இங்கு ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று அங்கு அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் வெடி குண்டுகள் வீசியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்கிக் கொண்டனர். இதனால் அங்கு கலவரம் மூண்டது. தகவல் அறிந்ததும் சிறைக்காவலர்களும், பொலிஸாரும் விரைந்து சென்று கலவரத்தை அடக்கினர். அதில் 10 கைதிகள் உயிரிழந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் பிணமாகக் கிடந்தனர்.

கைதிகள் யாரும் தப்பி ஓடவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். ஆனால் சிறைக்குள் தொடர்ந்து துப்பாக்கி மற்றும் வெடிகுண்டுச் சத்தம் கேட்டு வருவதாக கூறப்படுகிறது. எனவே உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற தகவலும் வெளியாகி உள்ளது. (வ)




# சசிகலாவவை காத்திருக்கவைத்த முதல்வர் ஓ.பி.எஸ்.

சென்னை, ஜன. 16

பிறந்த நாளுக்கு தன்னிடம் ஆசி பெறுவதற்காக, முதல்வர் பன்னீர்செல்வம் வருவார் என எதிர்பார்த்த சசிகலா, கடும் அதிருப்தியில் இரவுவரை காத்திருந்தார். ஆனால், கடைசிவரை பன்னீர்செல்வம் வரவில்லை. அதனால், இரவு 9 மணிக்கு மேல், வாழ்த்து செய்தி அனுப்பியதாக கூறப்படுகிறது. இதற்கிடையில், பிரதமர் மோடியும் தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினும், பன்னீர்செல்வத்துக்கு பிறந்த நாள் வாழ்த்து சொல்லிவிட, வேறு வழியில்லாமல், தாமதமாக வாழ்த்து செய்தி அனுப்பினார் சசிகலா. (வ)

## தமிழர்கள்...

விக்கிரமசிங்க தெரிவித்தார்.தேசிய தைப் பொங்கல் விழா நுவ ரெலியா சினிசிட்டா மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் ஏனைய சமூகங்களுக்கு கிடைக்கின்ற அனைத்து சலுகைகளும் தமிழர்களுக்குக் கிடைக்கின்றது என்பது தேசிய பொங்கல் விழா நுவரெலியாவில் நடந்துள்ளதன் மூலம் உறுதியாகின்றது. இலங்கையில் இருக்கின்ற தமிழர் கள் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்தப் பொங்கல் விழாவானது கடந்த காலங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற நகரங்களில் நடைபெற்றது. இன்று மலையகத்திலும் நடைபெறுகின்றது. இந்து மக்களின் பொதுவான ஒரு உற்சவமாக இல்லாமல் அனைவருக்கும் பொதுவான ஒரு விழாவாக மாற்றமடைந்துள்ளது. நாட்டின் அனைத்து மக்களும் இந்த விழாவைக் கொண்டாடும் நிலை உருவாகியுள்ளது என்றார். (வ-5)

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி ஜெயராஜா (ஜெயம்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி ஜெயராஜா (ஜெயம்) 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான நல்லதம்பி - அருளம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் கச்சேரியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாதுரை - இராசலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியரஞ்சினியின் பாசமிகு கணவரும் அருள்பிரியா, சவீனா, சதிஸ், அர்ஜுன் ஆகியோரின் அன்புத்தந்தையும் புஸ்பராணி (லண்டன்), ஜெயராமச்சந்திரன் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அருமைச்சகோதரனும் லிகோட்ஜொகான் (பிரான்ஸ்), லொத்தி வசந்த் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனேஸ், அலிசியா ஆகியோரின் அருமைப்பேரனும் ஒப்பிலாமணி (ஓய்வு பெற்ற முகாமையாளர், உப்பு கூட்டுத்தாபனம், புத்தளம் - லண்டன்), அற்புதராணி (லண்டன்), அன்பரசி (லண்டன்), கமலரஞ்சினி (லண்டன்), பத்மரஞ்சினி (ஓய்வு பெற்ற தாதிய சகோதரி - யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீரஞ்சினி (விரிவுரையாளர் - ஆங்கில கற்கைகள் அலகு - யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பரமலிங்கம் (முன்னாள் யாழ். சிறைச்சாலை பிரதம ஜெயிலர்) மற்றும் கோபாலசிங்கம் (ஓய்வு பெற்ற பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஆனந்தகுமாரசாமி (ஓய்வு பெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர் - கமத்தொழில் காப்புறுதிச்சபை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**திரு.மா. ஆனந்தகுமாரசாமி**
**36/1 B, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கணபதிப்பிள்ளை



தோப்பு ஒழுங்கை, மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கணபதிப்பிள்ளை தனது 100 ஆவது வயதில் நேற்று (15.01.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- உலகாத்தபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பு-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக்கணவரும் சிவபாக்கியம், சுப்பிரமணியம், வல்லிபுரநாதன், புவனேஸ்வரி, வேலாயுதபிள்ளை, மயில்வாகனம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அம்பிகாபதி மற்றும் இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி, சிவஞானம், சறோஜினி, பத்மாவதி, கங்காதரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2017) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் முடக்கடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முடக்கடி,**
**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 8458 583**

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தவமணிநாயகம்



**(ஓய்வு பெற்ற முகாரி மின்சாரப்பகுதி-சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை, மேடைஒலி,ஒளி அமைப்பாளர்,மின் இணைப்பு ஒப்பந்தகாரர், நிர்வாகசபை உறுப்பினர்-தெல்லிப் பழை துர்க்கா தேவி தேவஸ் தானம், தலைவர்-மல்லாகம் கோணப்புலம் ஞான வைரவர் கோயில்)**

யாழ். மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தவமணிநாயகம் 15.01.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும் திலகமணியின் அன்புக் கணவரும் கருணாகரன்(நோர்வே), தயானந்தன்(மின் இணைப்பாளர், முன்னாள் ஊழியர்-லங்காசிமெந்து கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற முரளிகிருஸ்ணன் மற்றும் யமுனா(யாழ். மாநகரசபை) ஆகியோரின் அன்புத்தந்தையும் சாரதாவல்லி(நோர்வே), ரோகினி (அதிபர்-யா/ அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), கேதீஸ்வரி (பிரான்ஸ்), சண்முகராசா(களஞ்சியப்பொறுப்பாளர்-இலங்கை போக்குவரத்து சபை,காரைநகர்) ஆகியோரின் மாமனாரும் ரவிசாந், கோபிசாந், சம்புஜன், சங்கவி, சாம்பவி, யாதவி, மோகவி ஆகியோரின் அன்புப் பேரனும் கமலமணி, தயாளமணி, கனகமணி, காலஞ்சென்ற தனபால சிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் சகலனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'உதயதாரகை ;**
**கோணப்புலம் ஒழுங்கை,மல்லாகம்**
**021 224 1693**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை குணரட்னம்(காந்தி)



பிறப்பு 13.11.1960 இறப்பு 13.01.2017

யாழ்.சரசாலையைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை குணரட்னம் 13.01.2017 வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி -மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி (சுவிஸ்)அவர்களின் அன்புக் கணவரும் கீர்த்தனா(சுவிஸ்),கீர்த்திகன் (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்)ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவலோகநாயகி, மனோன்மணி (இலங்கை), குணபாலசிங்கம்(இலங்கை), ராமலிங்கம்(ராசா-சுவிஸ்) தனபால சிங்கம் (கிளி-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரூபன்(சுவிஸ்),கீர்த்திகா (சுவிஸ்), அபிர்த்தனன் (சுவிஸ்)ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சச்சிதானந்தம், சண்முகநாதன் (இலங்கை), சுசீலாதேவி (இலங்கை),இந்துமதி (சுவிஸ்), உதயமலர் (குமுதா-சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சயந்தன், சயதீபன், சசீபன், சஞ்சீவன், சாரூபன், கோபிகா, சயரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துஷிதன், கஸ்தூரி, விந்துஷன், அனோஜ், வினோத், யகிதா, கஜீபன், கஜிந்தா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஷன்றியா (சுவிஸ்)ஷ்றியான்(சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.01.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் பழனி கோயிலடி,டச்சு வீதி ,சாவகச்சேரி என்னும் இடத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாரூபன்(மருமகன்)சுவிட்சர்லாந்து:+41432888491**
**செல்லிடப்பேசி :+41765618287**
**குணபாலசிங்கம்(சகோதரன்) இலங்கை**
**செல்லிடப்பேசி:+94777044079**
**விந்துஷன்(பெறாமகன்)இலங்கை**
**செல்லிடப்பேசி :+94775239604**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் அகதியாய் நாம்!

பல்லுயிர்களின் பெருக்கத்தின் படிமுறையிலே உயிர்மச் சமநிலை என்பது இயற்கையாகப் பாதுகாக்கப்படுகிறது, பேணப்படுகிறது. உயிரிகள் ஒன்றுக்கொன்று உணவாகிக் கொள்வதன் மூலம் இந்தச் சமநிலையானது பாதுகாக்கப்படுகிறது. இதனிடை சர்வாதிகாரம் பெறும் ஏகாதிபத்திய முதலாளிகள் இலாப நலனுக்கான செயற்றிட்டங்களை குறுக்கீடு செய்வதன் காரணமாக இயற்கையான உயிர்மச்சுழற்சியில் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. இவை இயற்கையின் பண்புகளைச் சிதைவுறச் செய்கிறது. இயற்கையைச் சார்ந்துள்ள உயிரிகளின் வளர்ச்சியை அழிக்கின்றன.

இந்த உயிர்மச் சுழற்சியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள், முன்பு ஏற்பட்ட மாற்றங்களின் விளைதிறன் தற்போது புயலில் நிகழும் பாதிப்புக்களாக மாற்றங்கொண்டுள்ளதை நாம் கண்டு கொள்கின்றோம். அது பற்றி விவாதிக்கிறோம். எல்லா இடங்களிலும் திடீர் மழை பொழிவும், அதனோடு தொடர்புறும் வறட்சியும் அதிகரிக்கிறது.

இதற்கு முன்பதாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக் களையும், உயிர்மைச் சுழற்சியில் ஏற்பட உள்ள மிகப்பெரிய மாற்றங்களையும் பற்றியதான ஐ.நா. உறுப்பு நாடுகளின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட 800 அறிவியலாளர்களைக் கொண்ட குழுவானது, பருவநிலை தப்புதல் குறித்து 2012 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 30 ஆயிரம் ஆய்வறிக்கைகளைத் தொகுத்து உருவாக்கிய ஒருங்கிணைந்த ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஐ.நாவின் முன் னாள் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் இதை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வளிமண்டலத்தில் கடந்த ஆயிரத்து 400 ஆண்டு களைவிட 30 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வெப்ப நிலை உயர்வு மிக அதிகமானதாக இருக்கிறது. 1880 ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாத்திரம் வெப்பமாதல் காரணமாக புவியின் வெப்பமானது 0.850 செல்சியஸ் அளவு உயர்ந்துள்ளதாக சொல்லப்படுகிறது. துரு வப் பனிமலைகள் உருகி 30 ஆண்டுகளில் 10 லட்சம் சதுர கிலோ மீற்றர் அளவு குறைந்துள்ளது. கடல்மட்டம் 32 மில்லி மீற்றர் உயர்ந்துள்ளது.

கடல்நீரின் அமிலத்தன்மை அதிகரித்துள்ளது. கடல்நீரின் ஒட்சிசன் அளவு குறைந்துள்ளது. மேற்குலக நாடுகளில் பனிப் பொழிவு குறைவின்றி அதிகரித்துள்ளது. காடுகளில் கட்டுமீறிய காட்டுத் தீ உருவாகிறது.

இத்தகைய சூழலியல் மாற்றங்களின் விளைவாக ஏற்படும் உண்மையான இழப்பும்-பாதிப்பும் வறிய மக்களையே பாதிக்கிறது. வெள்ளம், புயல், கடல்சீற்றம் என இயற்கையின் எதிர்வினைகள் ஒரு நாளும், ஒரு போதும் எந்தவொரு ஏகாதிபத்திய, முதலாளித்துவ அரசுகளையும் சீண்டியதாகத் தெரியவில்லை.

புவிவெப்பமாதலுக்கு முக்கிய காரணம் காபனீரொக்சைட், மீதேன், நைதரசன் ஒக்சைட் போன்ற நச்சு வாயுக்கள் அதிகம் வெளியேற்றப்படுவதே. கடந்து சென்ற 10 ஆண்டுகளில் மட்டுமே ஏகாதிபத்திய முதலாளிகளின் அபிவிருத்தி என்பதான தொழிற்றுறை நடவடிக்கைகளால் வெளியிடப்பட்ட காபனீர் ஒக்சைட்டின் அளவானது 40 கோடி தொன்களாக காணப்படுவதாகத் தகவல் சுழலியலாளர்களால் சொல்லப்படுகிறது.

இந்த நிலையிலே மக்களின் நலன் சார்ந்து சிறிதளவேனும் சிந்திக்கத் தவறும் அரசுகள் இயற்கைப் பேரழிவுகள் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை அறிந்து கொண்டும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்றன.

ஆக, மக்களை சூழல் அகதிகளாக மாற்றுவதிலும், அதற்கான காரணங்களைக் கண்டறியாது மக்கள் மீதாக அந்தக் குற்றச் சாட்டுதல்களை சுமத்திக் கொள்வதிலும் கொண்டுள்ள கீழ் நிலைப் போக்கை முற்றாக கழைந்திட வேண்டும். மக்கள் நலன் சார்ந்து சிந்திக்க வேண்டும்! செயலாற்ற வேண்டும்.!

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
03 . 04 . 1958



ஆண்டவன் அடியில்
28 . 01 . 1997

**அமரர் தங்கராசா சந்திரகுமாரி (சந்திரா)**

நீதி வழுவா நெறி முறையில்
மேதினியில் நாம் வாழ
வழிகாட்டிய எமது தெய்வமே!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய்
ஆகிவிட்ட எம் தெய்வமே

நீங்கள் எம்மை விட்டு நீங்கி
ஆண்டுகள் இருபது
நகர்ந்து சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும்
பசுமையாகவே உள்ளன
உங்கள் நினைவுகள்
என்றும் மறைவதில்லை

ஊரெழு கிழக்கு,
நாவலம்பதி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி




எமது அன்பு நண்பன்
**கணபதிப்பிள்ளை குணரத்தினம் (காந்தி)**
13.01.2017 அன்று
காலமானதையிட்டு அவரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு.
ச.தவச்செல்வம் குடும்பம்

## ஓராண்டு சிரார்த்த தின நிகழ்வு

கடந்த 27.01.2016 புதன்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் சிவசம்பு உமாகரன் (உமா)**



அவர்களின் ஓராண்டு. சிரார்த்ததின நிகழ்வு இன்று (16.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாட்டின் பொருளறிந்து பரமன் பதம் பணிந்து
நாட்டில் நாம் சிறக்க நல்வழியும் காட்டி நின்று
வீட்டில் இணைந்திருந்து விதம்விதமாய்க் கனவுகண்டு
கூட்டில் குருவிகளாய் குலவியிருந்த வாழ்வு
நேற்றுப் போல் இருந்து நெஞ்சை
வாட்டி வதைக்குதப்பா!
ஆருயிர்க் கணவனாய் அன்புநிறை அப்பாவாய்
பாச மகனாய் பற்றுமிக்க சகோதரனாய்
நேச உறவினனாய் நிகரில்லாச் சேவகனாய்
தாங்கி இருந்தீர்கள் தவிக்கின்றோம் உமை இழந்து
ஆண்டு ஒன்றாகி ஆனதுவோ அப்பாவே!
ஆறாது எம் துயரம் அழுதழுதும் தீராது
அன்னையவள் பாதமதில்
அமைதிபெற வேண்டுகின்றோம்

**குடும்பத்தினர்.**
**திருவாலவாய், நயினாதீவு - 3.**
**தொ.பே. 021 321 4102**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறட்சியை...

நேரிடும். நீர் நிலைகள் மற்றும் ஆறுகளின் நீர் மட்டம் சடுதியாகக் குறைவடைந்து வருகிறது. மார்ச் மாதம் இரண்டாம் வாரம் வரையில் அதிக மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

50 அல்லது 60 வீதமான நிலத்தில் விவசாயம் செய்யுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கிய போதிலும், 75 வீதமான நிலப்பரப்பில்விவசாயம்செய்யப்பட்டுள்ளது. அதில் 24 வீதமான சுமார் 35 ஆயிரம் ஏக்கர் விளைச்சல் அழிவடையும் நிலையை எதிர்கொண்டுள்ளது. 76 வீதமான விளைச்சலினைப் பாதுகாக்க முடியும்.

பருவகாலத்தில் 8 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான வயல் நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளப்படும் நாச்சாதுவ பிரதேசத்தில் இம்முறை 3000 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டி, பொலன்னறுவை, அம்பாறை அம்பாந்தோட்டை உட்படப் பல மாவட்டங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது.

தெதுரு ஓயாவின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையினால் குருநாகல் நகருக்கான நீர் விநியோகம் 12 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கமலை மற்றும் இன்மோரி நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால் ஹட்டன் நகருக்கான நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மவுசாலை காசல் ரீ மற்றும் மேல் கொத்மலை ஆகிய நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்து வருகின்றது. இதனால் மொனராகலை நகரை அண்மித்த சில பகுதிகளுக்கான நீர் விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் நீர்த் தேவையின் 55 வீதம் இயற்கை நீர் நிலையங்கள் மூலமே பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

தொடரும் நிலமையின் கீழ் முதன்மையான நீர்த் தேக்கங்களின் மின் உற்பத்தியினை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை இணக்கம் தெரிவித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் தெரிவித்தார்.

புதிதாக 400 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், நாடு முழுவதும் மேலும் ஆயிரம் குழாய்க் கிணறுகளை சீரமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (வ-4)

## ஜனாதிபதியின்...

21 ஆம் திகதி அவர் பயணம் மேற்கொள்ள விருந்தார். எனினும், அவரால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள்களில், வேறு முக்கிய பணிகள் இருப்பதால், இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதாக ஈரானிய அதிகாரிகளுக்கு, இலங்கை அயலுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்கும் நிகழ்வில் பங்கேற்க மைத்திரிபால விருப்பம் கொண்டிருந்தார். இந்த நிகழ்வுக்கு வெளிநாட்டு விருந்தினர்களை அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை என்று அயலுறவுக் கொள்கை ஆலோசகர்கள் தெரிவித்ததையடுத்து, அந்தத் திட்டத்தையும் ஜனாதிபதி கைவிட்டுள்ளார்.

இதேவேளை, மைத்திரிபால எதிர்வரும் மார்ச் மாதம் ரஷ்யாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து டாக்காவுக்குச் செல்லும் மைத்திரிபால மார்ச் 26 ஆம் திகதி நடக்கும் பங்களாதேஷின் சுதந்திர நாள் விழாவில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## இரு...

பல வருடங்களாக ஓமந்தை சோதனைச் சாவடி இயங்கி வந்தது. விடுதலைப் புலிகளின் காலத்திலும் அதற்குப் பின்னரும் வடக்கையும் ஏனைய பகுதிகளையும் பிரிக்கும் இடமாக ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடி காணப்பட்டது. சோதனை நடவடிக்கைகள் கூட்டு அரசு ஆட்சிக்கு வந்ததும் முற்றாக நிறுத்தப்பட்டபோதும் ஓமந்தை இராணுவ முகாமில் இராணுவத்தினர் நிலை கொண்டி ருந்தனர்.

முகாம் அமைந்திருந்த காணி தனியாருடையது. குறித்த காணி உரிமையாளர் தனது காணியை கையளிக்குமாறு அரசிடம் வலியுறுத்தி வந்தார். குறித்த இராணுவ முகாமை அகற்றக்கோரி அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் அந்த இராணுவ முகாமிலிருந்து சகல காவலரண்களையும் படையினர் தகர்த்துவிட்டுச் சென்றனர். இராணுவத் தளபாடங்களுடன் முகாமைவிட்டு நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,402)

## மழை வேண்டி...

10 மணியளவில் ஆலயத்தில் வழிபாடுகள் நிறைவடைந்ததும் மங்கல விளக்கு ஏற்றப்பட்டு பொங்கல் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்த சமயம் இரணைமடு குளத்தில் இருந்து மழை வேண்டி குடை பிடித்தப்படி கோயில்வரை நடைபவனி இடம்பெற்றது. மழை வேண்டியும் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், கிளிநொச்சி விவசாய பணிப்பாளர், கிளிநொச்சி



மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டத்திற்கு அப்பால்சென்று இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் நாளை சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாடு முழுவதும் வறட்சியால் நெற்காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 70 வீதமான பயிர்கள் அழிவடைந்து விட்டன. கடன்பட்டுக் காணி செய்த விவசாயிகள் இன்று இதிலிருந்து மீளமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

விவசாயிகள் நம்பிக்கை தளராமல் இருக்க வேண்டும். அதேநேரம் இரணைமடுக் குளத்திலிருந்து நீரைக் கொண்டுசெல்ல முற்பட்டவர்களுக்கு விவசாயிகளின் இன்றைய நிலை ஒரு எடுத்துக்காட்டு -என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்ததாவது:

அனுபவங்களின் அடிப்படையில் இரணைமடுக் குளத்தின் வறட்சியை சமூகத்திற்கான ஒரு துர்க்குறியாகவே பார்க்கிறேன். இரணைமடுக்குளத்தின் வறட்சியை எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன்.

அவற்றை வைத்துத்தான் இதனைக் கூறுகிறேன். சில விடயங்களை வெளிப்படையாகக் கூறமுடியாது. இது எமக்கு ஒருவித தண்டனை என்றுதான் கூறுவேன். நான் கூறும் இந்த வார்த்தைகளின் உண்மைத்தன்மையை நீங்கள் எப்போதாவது உணர்வீர்கள்.

எது எப்படியிருப்பினும் கனகாம்பிகை தாய் எங்களை ஏதோ ஒருவழியில் காப்பாற்றுவார் - என்றார். (வ-ய,4,6,35)

## இலங்கை...

நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், சிவில் சமூகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை, அண்மையில் ஜெனிவாவுக்குச் சென்று சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போதே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நல்லிணக்கச் செயலணியின் மக்கள் கருத்து அறியும் அறிக்கை தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டுள்ளது. போர்க் குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றப் பொறி முறையைக் கோரும் பரிந்துரை தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை அரசு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை பன்னாட்டு நீதிபதிகளின் உள்ளடக்கத்தை ஏற்க மறுப்பது தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன், இலங்கை அரசு தான் இணை அனுசரணை வழங்கி 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஐ.நா. அந்த நிலைப்பாட்டில் இப்போதும் உறுதியாக இருக்கின்றது. அதிலிருந்து ஐ.நா. ஒரு போதும் பின்வாங்காது என்று ஆணையாளர் உறுதியளித்தார். (வ-5)

## ஜனாதிபதி...

உறுப் பினர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. செயலணியின் அறிக்கை வெளியீட்டில் ஜனாதிபதி மைத்திரி பால கலந்துகொள்ளவில்லை.

செயலணியின் பரிந்துரைக்கு கூட்டு அரசின் அமைச்சர்கள் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறானதொரு சூழலிலேயே, நல்லிணக்கச் செயலணியின்

11 உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் சந்திப்பு இடம்பெறப் போவதை, நல்லிணக்கச் செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து, 'உதயன் பத்திரிகையிடம்' உறுதி செய்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பொறிமுறைகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் கருத்து அறிவதற்காக நல்லிணக்கச் செயலணி கடந்த ஆண்டு ஜனவரி மாதம், கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்டது.

மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தி கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. அறிக்கை கையளிப்புக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பல தடவைகள் நேரம் கோரப்பட்டன. மூன்று தடவைகள் இறுதி நேரத்தில் அறிக்கை கையளிப்பு இடைநிறுத்தப்பட்டன. டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி இறுதித் தடவையாக அறிக்கை கையளிப்பு ஒத்திவைக்கப்பட்ட போது, ஜனவரி 3 ஆம் திகதி அறிக்கை கையளிப்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

அன்றைய தினமும் ஜனாதிபதி மைத்திரிபால அறிக்கையைப் பெற்றுக் கொள்ளத் தவறினால், அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்று நல்லிணக்கச் செயலணி அறிவித்திருந்தது.

ஜனவரி 3ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால அறிக்கையைப் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அந்த நிகழ்வில் அவர் பங்கேற்கவில்லை. ஆனாலும் அறிக்கை திட்டமிட்டபடி அவரின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதற்கு கூட்டு அரசின் அமைச்சர்கள் பலரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது நிலைப்பாட்டை இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.

இந்த நிலையில் நல்லிணக்கச் செயலணியின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார். அடுத்த வாரம் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (வ-5)

## குடாநாட்டில்...

களுடன் சிறுதானியங்களும் அழிவடைந்துள்ளன. வறட்சி நீடித்தால் பயிர்கள் 100 வீதமானவை அழிவடையும். அழிவைத் தடுக்க முடியாத சூழலே காணப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் நெற்பயிர் மற்றும் சிறுதானியச் செய்கையினை மேற்கொண்டுள்ள விவசாயிகளாக 73 ஆயிரம் பேர் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களது உற்பத்திகள் அழிவடையும் நிலமையில் குறித்த விவசாயக் குடும்பங்கள் [illegible] படைந்துள்ளனர்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்கள் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக பாதிப்படைந்தவர்கள் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 940 குடும்பங்கள், ஊர்காவற்றுறை 4[illegible] குடும்பங்கள், காரைநகர் 701 குடும்பங்கள் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 3 குடும்பங்களுடன் கோப்பாயில் ஆயிரத்து 242 குடும்பங்களும் பாதிப்படைந்துள்ளனர்.

சங்கானையில் 8 ஆயிரத்து 200 குடும்பங்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 5 ஆயிரத்து 838 குடும்பங்கள், உடுவிலில் 427 குடும்பங்களும், தெல்லிப்பழை பிரதேசத்தில் ஆயிரத்து 213 குடும்பங்களும், சாவகச்சேரியில் ஆயிரத்து 420 குடும்பங்களும் பாதிப்படைந்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 830 குடும்பங்களும், பருத்தித்துறையில் 255 குடும்பங்களும், மருதங்கேணியில் 430 குடும்பங்களுமாக மொத்தம் குடாநாட்டில் 24 ஆயிரத்து 324 குடும்பங்கள் இதுவரைக்கும் பாதிப்படைந்துள்ளனர்.

வரட்சி தொடர்வதால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். (வ-4,10)

## புதிய...

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

புதிய அரசமைப்பை அடுத்த ஆட்சியிலேயே கொண்டுவர முடியும் என்று அரசு தெரிவித்துள்ளமை தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பந்தன் முன்வைக்கின்ற கோரிக்கைகள் என்றுமே நிறைவேறப்போவதில்லை. எவ்வாறாயினும் மக்கள் விரும்பாத ஒரு அரசமைப்பை எந்த சந்தர்ப்பத்திலும் நிறைவேற்ற முடியாது என்பதே எமது நிலைப்பாடு. இதனை நாம் ஆரம்பத்திலிருந்து கூறிவருகிறோம். புதிய அரசமைப்பு நாட்டைக் கூறு போடக்கூடியது. அதனால் அது நிறைவேறாது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஏனோ அதனை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன மேலும் தெரிவித்தார். (வ-4)

## கனேடிய...

வேகமாகப் பரவிவருகின்ற[illegible] கனேடியத் தலைமை அமைச்சர் ஜஸ்டி[illegible]டோ தமிழ் மக்களுக்கு தனது பொங்கல் [illegible]ழ்த்தினை தமிழில் தெரிவித்தார்.

கனடாவில் ஆண்டு தோறும் [illegible]த மாதத்தினை நாடு முழுவதும் தமி[illegible] மரபுகளை கடைப்பிடிப்பதற்குரிய மாதம[illegible] அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 16

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட தாரகை அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் அணி மோதவுள்ளது.

**இளைஞர் வி.க. கால்பந்தாட்டம்**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் 3ஆம் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்பமாகிறது. இதன்படி இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)




# இணுவில் கலையொளி சம்பியன் இறுதியில் காமாட்சியை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 16

'உதயன்' நிறுவனத்தின் அனுசரணையுடன் றொட்டரி இ. கிளப் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகியவை இணைந்து தைத் திருநாளை முன்னிட்டு நடத்திய துடுப்பாட்டத் தொடரில் இணுவில் கலையொளி அணி சம்பியனானது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. கொக்குவில் காமாட்சி அணியை எதிர்த்து இணுவில் கலையொளி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காமாட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரம்மிய ராகுலன் 12 ஓட்டங்களையும், விதுசன் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி அணி 3.5 பந்துப் பரிமாற்றங்கள் ஒரு இலக்கை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக மோகன்ராஜ் 32 ஓட்டங்களைப் பெற்றார்.




ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் மோகன்ராஜ் தெரிவானார். இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். (ம-23)

# சென்றலைட்ஸ் தோற்றது

யாழ்ப்பாணம், ஜன. 16

இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய அனைத்து மாவட்டங்களின் கழகங்களுக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை 7 இலக்குகளால் வீழ்த்தியது அம்பேபுஸ்ச சிங்க அணி.

பல்லேகல மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 38.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எட்வேட் எடின் 62 ஓட்டங்களைப் பெற்றார்.

174 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பேபுஸ்ச சிங்க அணி 33.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக விஜயரட்ண 55 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# பொண்டிங்கின் தெரிவு

இந்தியாவை, அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்ளவல்லர்கள் என்று தான் கருதும் வீரர்களை வைத்து ஒரு கனவு அணியை அறிவித்தார் பொண்டிங்.

ஆஸ்திரேலிய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட அடுத்த மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. இந்த நிலையிலேயே பொண்டிங் தனது கனவு அணியை அறிவித்தார்.

டேவிட் வோர்னர், ரென்சொவ், கவாஜா, சிமித், கான்ட்ஸ்கொம், மிச்செல் மார்ஷ், வேட், ஸ்ராக், ஸ்வ் ஓ கேபி, கசில்வூட், நாதன் லையன், சோன் மார்ஷ், பேட், மக்ஸ்வெல், ஹெட், அகர். இந்த அணிக்கு சிமித்தை தலைவராக பொண்டிங் நியமித்தார். (ம)

# பாகிஸ்தான் பதிலடி ஆஸிக்குக் கவனிப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுத்தது பாகிஸ்தான். மெல்பேணில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் கவாயா. இருவருமே பதின்மங்களுக்குள் கட்டுப்பட்டனர். 17 ஓட்டங்களுடன் கவாயாவையும் 16 ஓட்டங்களுடன் வோர்ணரையம் வீழ்த்தினார் யுனைட் கான். அணித்தலைவரான சிமித், சரிவில் இருந்து அஸ்திரேலியாவைத் தலைதூக்க வைப்பதற்கு கடும்போராட்டத்தை வெளிப்படுத்தினார். இருப்பினும் அவருடன் நீண்ட இணைப்பாட்டம் ஒன்றை வழங்குவதற்கு பிறிதெவரும் முன்வரவில்லை. மத்திய வரிசையை பலமாகக் கருதப்படும் மிச்செல் மார்ஷ், ஆமிர் வீசிய ஒரே பந்தில் ஆட்டமிழந்தார். மக்ஸ்வெல் 23 ஓட்டங்களுடனும் வேட் 35 ஓட்டங்களுடனும் முறையே இமாட் வசிம், மலிக் ஆகியோரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். அரைச்சதம்இ கடந்து ஆறுதல் கொடுத்தார் சிமித். அவராலும் நீடிக்க இயலவில்லை. 60 ஓட்டங்களுடன் சிமித்தை வீழ்த்தினார் இமாட் வசிம். 220 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் ஆமீர் 3 இலக்குகளையும், யுனைட் கான், வசிம் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஹசன் அலி, மலிக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இதனால் இந்த ஆட்டத்திலும் அந்த அணி வெற்றிபெற்றால் பாகிஸ்தானுக்கு மேலும் நெருக்கடி ஏற்படும். எனவே வெற்றிபெறவேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு இருந்தது. ஆரம்ப வீரர்களாக கபீஸ் மற்றும் சர்ஜீல் கான். இணைப்பாட்டமாக 68 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் ஆட்டமிழந்தார் சர்ஜீல் கான். இலக்கை எட்டும்படியான ஆட்டத்தை வழங்கினார் அசாம். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது பாகிஸ்தான். கபீஸ் அரைச்சதம் கடந்தார். 72 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் பல்க்நெர். அசாம், சபிக் இருவரையும் வெளியேற்றினார் ஸ்ராக். மலிக், அக்மல் இணைந்து பாகிஸ்தானின் வாய்ப்பை உறுதிப்படுத்தினர். இணைப்பாட்டம் நிலைபெற ஆஸ்திரேலியாவின் வெற்றிப் படிப்படியாக இல்லாமல் போனது. முடிவில் பிறிதொரு இலக்கை இழக்காமல் இலக்கை அடைந்து 6 இலக்குகளால் வென்றது பாகிஸ்தான்.

பந்துவீச்சில் ஸ்ராக், பல்க்நெர் இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். கபீஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் போர்த்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)





# யங்ஹென்றிஸ் சம்பியன்

மகிபனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூஸ்ரார் அணியை வீழ்த்தி சம்பியனானது இளவாலை யங்ஹென்றிஸ் அணி.

தைத் திருநாளை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணி மோதியது. நியூஸ்ரார் அணியின் வாகீசன் பதிவு செய்த கோலே முதல் பாதியின் ஒரே கோலாக அமைந்தது. இரண்டாவது பாதியில் யங்ஹென்றிஸ் அணியின் மகிபன் இரு கோல்களைப் பதிவுசெய்தார். இதனால் யங்ஹென்றிஸின் ஆதிக்கம் அதிகரித்தது. மாற்றங்கள் ஏற்படாத நிலையில் யங்ஹென்றிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக இளவாலை யங்ஹென்றிஸ் அணியின் மகிபனும் தொடராட்டநாயகனாக அதே அணியின் தனேஸும் தெரிவாகினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சப்பலின் கருத்துக்கு மிஸ்பா தக்க பதிலடி

பாகிஸ்தான் அணியையும் அதன் தலைவரான மிஸ்பாவையும் பற்றி ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல் விமர்சனம் செய்திருந்த நிலையில் அவரின் கருத்துக்கு தக்க பதிலடி கொடுத்தார் மிஸ்பா உல் ஹக்.

ஆஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் அண்மையில் முடிவடைந்தது. ஆஸ்திரேலியா 3:0 என்ற அடிப்படையில் தொடரை வென்றது. இதனால் சரியாக விளையாடாத பாகிஸ்தான் அணியை ஆஸ்திரேலியா வந்து விளையாட ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அழைப்பு விடுக்கக் கூடாது. அவர்கள் சொந்த மைதானத்தில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய பின் அழைப்பு விடுக்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல் தெரிவித்தார். இந்தக் கருத்துக்கே மிஸ்பா பதிலடி கொடுத்தார்.

சப்பலின் விமர்சனங்கள் எல்லாம் தேவையில்லாதது. அதேபோல் நன்றாக கிரிக்கெட் விளையாடி, கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருக்கும் மிகுந்த அனுபவம் உடைய முன்னாள் வீரரின் தகுதிக்கேற்ற விமர்சனமாக இது இல்லை. ஆஸ்திரேலியா இலங்கை மண்ணில் 0:3 என தோல்வியடைந்தது. இலங்கை அணியில் ஜாம்பவானாக இருந்த மகேல. சங்கா போன்ற வீரர்கள்



இல்லை. 10 டெஸ்டிற்கும் குறைவாக விளையாடிய வீரர்களே அதிக அளவில் இருந்தனர். அவர்களிடம் படு தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவிற்கு எதிராக ஒருநாள் தொடரை 0:5 என இழந்தது. அதற்கு முன் நாங்கள் ஐக்கிய அரபு இராச்சியத்திலும், இந்தியா தனது சொந்த மண்ணிலும் ஆஸ்திரேலியாவை வழித்துத் துடைத்தோம். இதனால் அவர்கள் கட்டாயம் எங்கள் இடத்திற்கு (ஆசியா) சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டுமா? என மிஸ்பா தெரிவித்தார். (ம)



# இப்படியொரு தோல்வியை கண்டதில்லை

## மத்தியூஸ் புலம்பல்

என் கிரிக்கெட் வாழ்க்கையில் ஒரு தலைவராக நான் சந்தித்த மிகப்பெரிய தோல்வி இதுவே. இவ்வாறு தெரிவித்தார் இலங்கை அணித்தலைவர் மத்தியூஸ்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நிறைவடைந்த மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்தார்.

என் கிரிக்கெட் வாழ்க்கையில் எவ்வளவோ தோல்விகளை நான் பார்த்துள்ளேன். ஆனால் அணியின் தலைவராக இதுதான் மிகப் பெரிய தோல்வியாக கருதுகிறேன். எந்தவொரு ஆடுகளத்திலும் விளையாடும் நோக்கத்தோடுதான் நாங்கள் இலங்கையில் பயிற்சி எடுத்தோம். மற்றும் பவுன்சர் பந்துகளை எதிர்கொள்ளவும் சிறப்புப் பயிற்சி பெற்றோம். ஆனாலும் அதிக அனுபவம் இல்லாத சூழ்நிலையை திறம்படக் கையாள முடியவில்லை. எங்கள் அணியில் இருக்கும் வீரர்களில் 3 பேர் மட்டுமே இதுவரை தென்னாபிரிக்காவில் விளையாடிய அனுபவம் பெற்றவர்கள் என மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)

# மெஸ்ஸியை விமர்சித்தவர் பதவி நீக்கம்

பார்சிலோனா அணி தனது நட்சத்திர வீரரான மெஸ்ஸியை விமர்சித்த தனது அதிகாரியை பதவியில் இருந்து நீக்க முடிவு செய்துள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கோபா டெல்ரெய் தொடரில் அத்லெடிக் பில்பயோ அணிக்கெதிரான ஆட்டத்தில் பார்சிலோனா 4:3 என வெற்றி பெற்றது. இதற்கு 78ஆவது நிமிடத்தில் மெஸ்சி அடித்த கோல்தான் முக்கியமான காரணமாக இருந்தது என்று கருதப்படுகிறது. ஆனால் பார்சிலோனா அணியின் அதிகாரி பெரே கிரேடாகோஸ் மெஸ்ஸியின் ஆட்டம் குறித்து விமர்சனம் செய்தார். அவர், "இந்த வெற்றி மெஸ்ஸி தன்னிச்சையால் பெற்ற தல்ல. இனிஸ்டா அல்லது நெய்மர் இல்லாமல் அவரால் சிறப்பாக செயற்பட முடியாது. மெஸ்ஸி மட்டுமல்ல சுவாரஸும் அணிக்கு மிக முக்கியமான வீரர்தான்' என்று கருத்துத் தெரிவித்தார். இதனால் பார்சிலோனா அணி கடும் அதிர்ச்சியடைந்தது. அத்துடன் மெஸ்ஸி குறித்த பெரே கிரேடாகோஸின் கருத்து அவரது தனிப்பட்டது என்று தெரிவித்ததுடன் அவர் விரைவில் மாற்றம் செய்யப்படுவார் என்றும் அறிவித்தது என குறித்த ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

# ஒரு அணிக்கு இரு தலைவர் என்பதில் உடன்பாடு இல்லை

## என்கிறார் டோனி

ஒரு அணிக்கு இரு தலைவர்கள் என்பதை நான் ஏற்கவில்லை. இதுவே நான் தலைமைப் பதவியிலிருந்து விலகக் காரணம் எனத் தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனி.

2014ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுமுடிவை அறிவித்துச் சென்றார் டோனி. இதனால் டெஸ்ட் அணிக்கு கோக்லி தலைவராக்கப்பட்டார். ஒருநாள், ரி–20 என்று மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கு டோனி தொடர்ந்து தலைவராகவே செயற்பட்டு வந்தார். கடந்த 4 ஆம் திகதி தலைமைத்துவத்தில் இருந்து விலகும் முடிவை அறிவித்தார். இதனையடுத்து மூன்றுவகை ஆட்டங்களுக்கும் கோக்லி தலைவராக்கப்பட்டார். டோனியின் முடிவு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் முதல் முறையாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மௌனம் கலைத்தார் டோனி.

ஒரு அணிக்கு ஒரு தலைவர்தான் இருக்க வேண்டும். ரி–20 ஆட்டத்துக்கு ஒரு தலைவர், ஒருநாள் ஆட்டத்துக்கு ஒரு தலைவர், டெஸ்ட் ஆட்டத்துக்கு ஒரு தலைவர் என்று மூன்று வகை ஆட்டங்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்கள் இருப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு தலைவராக கோக்லி சிறப்பாகச் செயற்படுகிறார். எனவே அவரிடம் அணியை ஒப்படைக்க இதுவே சரியான தருணம். முன்னாள் தலைவர் என்ற வகையில் கோக்லிக்கு ஆலோசனைகளை வழங்குவேன். இலக்குக் காப்பாளர் என்பவர் சொல்லியும் சொல்லாவிட்டாலும் ஒரு உபதலைவர் போன்றவரே என்று டோனி மேலும் தெரிவித்தார். (ம)




# நியூசி. – பங்களாதேஷ் டெஸ்ட் ; சமநிலையை நோக்கி நகர்கிறது

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. சகிப் அல் ஹசனின் இரட்டைச் சதம், ரகிமின் சதம் ஆகியன கைகொடுக்க 595-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது பங்களாதேஷ். அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 217 ஓட்டங்களையும், ரகிம் 159 ஓட்டங்களையும், கக்கியூ 64 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வாக்நெர் 4 இலக்குகளையும், போல்ட், சவுதி இருவரும் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து மூன்றாம் நாள் முடிவில் 292-3 என்றிருந்தது. லாதம் 119 ஓட்டங்களுடனும் நிக்கொல்ஸ் 35 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். இந்த இணை தொடர்ந்தும் நிலைபெற்றது. நிக்கொல்ஸ் அரைச்சதம் கடந்தார். 150 ஓட்டங்களை நிறைவுசெய்தார் லாதம். 53 ஓட்டங்களுடன் நிக்கொல்ஸையும், 177 ஓட்டங்களுடனும் லாதத்தையும் வீழ்த்தினார் சகிப் அல் ஹசன். சான்நெர் பின்வரிசையில் அடித்தாடி அரைச்சதம் கடந்தார். சான்நெரை போல்ட் செய்தார் றோய். 539 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து.



பந்துவீச்சில் ராபி 3 இலக்குகளையும், சகிப் அல் ஹசன், றோய், முகமதுல்லா மூவரும் தலா 2 இலக்குகளையும், தஸ்கின் அகமட் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 66-3 என்ற நிலையில் இருந்த போது நாள் முடிவுக்கு வந்தது. இதுவரையிலுமான நிலவரத்தின்படி 122 ஓட்டங்கள் பங்களாதேஷ் முன்னிலை வகிக்கிறது. ஆட்டத்தின் இறுதி நாள் இன்று. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KBK ACCOUNTING CENTER**

| கிளை 01 | கிளை 02 |
|---|---|
| சுவாமியார் வீதி, கொழும்புத்துறை | பலாலி வீதி, கந்தர்மடச் சந்தி |
| Sat & Sun - 2 - 8 pm | Thu,Fri - 3.30- 7 pm |

ACCOUNTING -MR.BALAKAJEN
(Tutorial Staff), B.Com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.Com(Hons)

A/L 2016 கணக்கீட்டுப் பாடத்தில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை வாழ்த்திப் புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

| Aபெறுபேறு | Bபெறுபேறு | Cபெறுபேறு |
|---|---|---|
| 52 பேர் | 23 பேர் | 16 பேர் |

கணக்கீடு - A/L 2017 & Day, A/L 2018, A/L 2019
வணிகக் கல்வியும் கணக்கீடும் - O/L 2017, Grade 10
தமிழ், ஆங்கில மொழி மூலம்
உங்கள் அனுமதிகளுக்கு - 077 2168 884

**வணிகக்கல்வி**

A/L - DAY மற்றும் 2017
மீட்டல் வகுப்புக்கள்
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 6.00 - 7.00 வரை
ஆசிரியர் :-
சக்திவடிவேல் பிரதீபன்
(M.COM)
பொருளியற் கல்லூரி
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.



# யாழ். மத்தி சம்பியன்

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மத்திய கல்லூரி சம்பியனானது.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ். மத்திய கல்லூரி. மத்தியின் சார்பாகப் பதிவான கோல்களை ஸ்ரெனோசன் மற்றும் ரெம்சன் இருவரும் பதிவுசெய்தனர். ஹென்றிஸின் கோலை மதுசன் பதிவுசெய்தார். இரண்டாவது பாதியில் பெலின், மத்தியின் மூன்றாவது கோலைப் பதிவு செய்தார். 3:1 என்ற கோல் கணக்கில் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. (ம-23)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 21.01.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

8 பாடப்புத்தகங்கள் மற்றும் வீடியோ DVD இலவசம்!
வாரநாள் பிரிவுகள் - காலை 08-10 (செவ்வாய் & வியாழன்)

SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486




கேதர் யாதவ், கோக்லி இருவரினதும் சதங்கள் கைகொடுக்க இங்கிலாந்து நிர்ணயித்த இலக்கை எட்டிப் பிடித்தது இந்தியா.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் பகலிரவு ஆட்டமாக புனேயில் நேற்று நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. 9 ஓட்டங்களுடன் கேல்ஸ் ரண்அவுட் செய்யப்பட்டார். றோய், ரூட் இணை பெரிய இலக்கு ஒன்றை நிர்ணயிக்கக்கூடிய அடித்தளம் அமைத்தது. அணி 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 73 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் றோய். ரூட்டும் அரைச்சதம் கடந்து அசத்தினார். அவர் 78 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். மத்திய வரிசையில் 40 பந்துகளில் 62 ஓட்டங்களைக் குவித்தார் ஸ்ரோக்ஸ். முடிவில் இங்கிலாந்து 350-7.

பந்துவீச்சில் பாண்டியா, பும்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும், யாதவ், ஜடேயா இருவரும் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியா 24 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யுவராஜ் 15 ஓட்டங்களுடனும் டோனி 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 63-4 என்ற நிலையில் இருந்து கோக்லி, கேதர் யாதவ் இணைப்பாட்டத்தால் மீண்டெழுந்தது இந்தியா.

இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர். மிகையான அதிரடி காட்டினார் கேதர் யாதவ். வழக்கம் போல சதம் கடந்தார் கோக்லி. கேதர் யாதவின் சதத்துக்கு 65 பந்துகளே தேவைப்பட்டன. 122 ஓட்டங்களுடன் கோக்லியும் 120 ஓட்டங்களுடன் யாதவும் ஆட்டமிழந்தனர். பதற்றம் அதிகரித்தது. இருப்பினும் தொடர்ந்தும் களத்தில் இருந்து இந்தியாவுக்கு வெற்றியை வழங்கினார் பாண்டியா. (ம)

**மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்**

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா**

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
|---|---|---|
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |
| 02. தையல் இயந்திர திருத்துநர் | 10 | 1800-2500 |

**நிபந்தனைகள்**
- இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்
- வேலை நேரம் 08 மணித்தியாலங்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை
- வயது எல்லை 18 - 35
- அரசாங்க அனுமதிக்கட்டணம் ரூபா 50, 000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.
- பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிவரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாளஅட்டை ஆகியவற்றுடன் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் - சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின் வீதி)
காலம் - 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி
முன்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 077 972 9481, 076 718 3799
கொழும்பு - 011 5244446

Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo-14.
அரச அனுமதி இலக்கம் LL No : 2248 advt/2248/17/18/16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.